

## கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

**நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:**
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shitf Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk



Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 143 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(19.03.2023) ஹிஜ்ரி-1444, ஜமா அதுல் ஷஃபான் - 26, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8 விலை ரூ.130






## ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு –13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk


## 'வெழ'மணியம்



"இலங்கை தொல்பொருள் திணைக் களம்" எண்ட பெயரில் தமிழர் தாயக பகுதிகளில் உள்ள "பாரம்பரிய" நிலங்கள் வலுக்கட்டாயமாக அபகரிக்கப்படுகின்றன.

அண்மையில் இந்தத் திணைக்களத்தின் ஆலோசனைக்குழுவில் "தமிழர்கள்" இணைக்கப்படுகிறார்கள் எண்ட செய்தி வெளிவந்தது.

இந்த "இணைப்பு" என்பது வெளி உலகத்துக்கு காட்டப்படுகின்ற வெறும் "கண்துடைப்பு"!

இணைக்கப்பட்ட "தமிழர்களால்" எந்த ஆக்கிரமிப்பையும் தடுக்கமுடியாது எண்டு அவைக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும்.

அப்ப ஏன் அவை உதுக்குள்ள போனவை எண்டு கேப்பியள்!

உந்தக் கேள்வியை அவையிட்ட கேளுங்கோ. அவையிட்டையும் பதில் இருக்காது.

குருந்தூர் மலை தொடக்கம் கன்னியா வெந்நீரூற்று வரை தமிழர் தாயகத்தில் உள்ள நிலங்களை கபளீகரம் செய்வதுதான் சிறிலங்கா தொல்பொருள் திணைக்களத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள "வேலைத்திட்டம்".

இந்த நில அபகரிப்பையும் கலாசார படுகொலையையும் "நிறுத்தும்" திராணி தமிழ் அரசியல்வாதிகள் எவருக்கும் இல்லை என்பதுதான் பெரிய கவலை.

இதற்கு எதிராக போராடும் மக்களை இந்த அரசு என்ன செய்யும் என்பதை சொல்லவேண்டிய தேள்வை இல்லை.

ஆக;

09 ஆம் பக்கம்

# தேர்தல் அவுட்!

## தபால்மூல வாக்களிப்பு அறிவித்த திகதியில் நடக்காது

## அச்சடித்த வாக்குச்சீட்டுகளை வழங்க அரச அச்சகம் மறுப்பு

(கே.சுபானி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட தபால் மூல வாக்குச்சீட்டுகள் கிடைக்காத காரணத்தினால் இம்மாத இறுதியில் தபால்மூல வாக்களிப்பை திட்டமிட்டபடி நடத்த முடியாதென தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை அரச அச்சகத்திலிருந்து தபால்மூல வாக்குச்சீட்டுகளை தேர்தல் ஆணைக்குழு பெறவில்லை.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தபால்மூல வாக்குச்சீட்டுகளை வழங்க தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டிருந்தது.

இதற்கிடையில், தற்போது அச்சிடப்பட்டுள்ள தபால்மூல வாக்குச்சீட்டுகளை பணம் செலுத்தும்வரை ஒப்படைக்க முடியாதென அரசாங்க அச்சகர் திருமதி கங்கானி கல்பனா லியனகே வெள்ளிக்கிழமை (17) தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

தற்போது அச்சிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகளை ஒப்படைக்குமாறு தேர்தல் ஆணைக்குழு தன்னிடம் கோரிக்கை விடுத்ததாக அவர் தெரிவித்தார்.

பதினேழு மாவட்டங்கள் தொடர்பான வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டு பாதுகாப்புக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளபோதிலும், அவை இதுவரை பொலிஸாரின் பாதுகாப்பில் பொதியிடப்பட்டு சரிபார்க்கப்படவில்லை எனவும் அரச அச்சகர் கூறினார்.

வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகம் தற்போது செலவிட்ட தொகை சுமார் 20 கோடி ரூபாவாகும். ஆனால், அந்த அச்சடிக்கும் பணிக்காக நான்கு கோடி ரூபாவே கிடைத்துள்ளதாக திருமதி கங்கானி கல்பனா லியனகே மேலும் தெரிவித்தார்.

எக்காரணம் கொண்டும் தேர்தல் இரத்துச்செய்யப்பட்டால் உள்ளூராட்சித் தேர்தலுக்காக...

02 ஆம் பக்கம்

## முன்னாள் எம்.பி. பியசேன விபத்தில் சிக்கி உயிரிழப்பு



பயணித்த மோட்டார்சைக்கிள் மீது பஸ் மோதியதால் சம்பவம்

13 ஆம் பக்கம்

## நக்கல் நமசிவாயம்




## ஐ.எம்.எவ். கடனுக்கான நிதி ஒப்பந்தம் நாளை கைச்சாத்து

### நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றுவார் ரணில்

(கே.சுபானி)

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கவுள்ளதுடன், இதுதொடர்பிலான ஒப்பந்தமொன்று நாளை திங்கட்கிழமை (20) கைச்சாத்திடப்படவுள்ளது.

02 ஆம் பக்கம்

## வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக மோசடி: 2022 மே மாதமே அதிக முறைப்பாடுகள்!

(நா.தினுஷா)

நாட்டில் கடந்த வருடம் (2022) மே மாதம் மாத்திரம் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாக குறிப்பிட்டு நிதி மோசடி செய்தமை தொடர்பில் ஆயிரத்து 506 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு...

02 ஆம் பக்கம்

## முன்னாள் எம்.பி. ஸ்ரீரங்கா பொலிஸாரால் கைது



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில்...

02 ஆம் பக்கம்

## தமிழ் அரசியல் கைதி சதீஸ் 15 வருடங்களின் பின் விடுதலை

### ஜனாதிபதி பொதுமன்னிப்பு

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியான செல்லையா சதீஸ்குமார் வெள்ளிக்கிழமை விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.




சுயாதீன ஊடகவியலாளரும், எழுத்தாளருமான "விவேகாந்தனூர் சதீஸ்" என அழைக்கப்படும் செல்லையா சதீஸ் கடந்த 15 வருடகாலமாக சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலை நோயாளர்...

02 ஆம் பக்கம்

## போலி வழக்குகளைத் தாக்கல் செய்யும் பொலிஸ் அதிகாரிகள்

### மக்கள் கூறுவதில் நியாயம் உள்ளதென்கிறார் நீதி அமைச்சர் விஜயதாச

(நா.தினுஷா )

ஒருசில பொலிஸ் நிலையங்கள் போதைப்பொருள் மாதிரிகள் தொடர்ச்சியாக இருபது அல்லது முப்பது தடவைகள் அனுப்பிவைக்கும் நிலைமை இருப்பதாகவும் போதைப்பொருள் அல்லாத விடயங்களை சமர்ப்பித்து பழிவாங்குவதற்காக ஒருசில பொலிஸ் அதிகாரிகள் போலி வழக்குகளைத் தாக்கல் செய்வதாகவும்...

02 ஆம் பக்கம்

## ரயிலில் மீட்கப்பட்ட குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்க பணிப்பு



ரயில் கழிப்பறையில் கைவிடப்பட்ட சிசுவை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளருக்கு வெள்ளிக்கிழமை (17) உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபர்களான இளம்...

02 ஆம் பக்கம்

## தேர்தலுக்கு ஏதேனும் ஒரு தரப்பினர் நிதியளித்தால் தேர்தல் நடத்தப்படுமா?

### அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பும் பெவ்ரல்




உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பிரதான தடையாக அரசாங்கம் கூறுகின்ற நிதி நெருக்கடிக்குத்தீர்வு வழங்குவதற்கு ஏதேனும் ஒருதரப்பினர் தயாராக இருந்தால், தேர்தலை நடத்துவதற்குத் தயாரா?...

02 ஆம் பக்கம்



வடஇந்திய முதலீட்டாளர்கள் தென்னிந்திய நகை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் சுலாணி தலைமையில் 92 பேர் கொண்ட குழுவினர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகைதந்தபோது அகில இலங்கை நகை வியாபார சங்கத்தின் தலைவர் ஆ. விஜயகுமார், செயலாளர் தி.சரவணன், பொருளாளர் ஏ.பாலசுப்பிரமணியம், உறுப்பினர் பொன். பத்மநாதன், இலங்கை - இந்திய வர்த்தக தொடர்பாளர் மணவை அசோகன் ஆகியோர் அவர்களை பொன்னாடை அணிவித்து வரவேற்றனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு இலவச அரிசி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்பாடு



மலையகப் பகுதிகளிலுள்ள ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளம், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் வெள்ளிக்கிழமை (17) கைச்சாத்திடப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனமான Good Neighbors International இத்திட்டத்துக்கான பங்களிப்பை வழங்குகின்றது.

02 ஆம் பக்கம்

## சனத்தொகை கணக்கீடு இவ்வாண்டு முன்னெடுப்பு

நாட்டின் உத்தியோகபூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் பணிகள் இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 2012ஆம் ஆண்டின் பின்னர் உத்தியோகபூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடர்பான முன்னோடித் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அனுரகுமார தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டுமுதல் இதற்கான...

02 ஆம் பக்கம்

## ஆசிரியர் இடமாற்ற சபை கலைப்பு

கல்வி அமைச்சின் ஆசிரியர் இடமாற்ற சபையை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் கலைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, ஆசிரியர் இடமாற்ற சபையின் பரிந்துரையின்பேரில் நடைமுறைப்படுத்தப்படவிருந்த 12 ஆயிரத்து 500 ஆசிரியர்களின் இடமாற்றங்கள் அனைத்தும் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

சாதாரண தர மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல்...

02 ஆம் பக்கம்

# ஜனாதிபதி தலைமையில் 'சதராவ தீபனீ' கௌரவிப்பு நிகழ்வு





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்தியலுக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்ட 'சதராவ தீபனீ" என்ற கௌரவிப்பு நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் (16) நடைபெற்றது.

கலைப் படைப்புகளுக்குப் பங்களித்த கலைஞர்களைப் பாராட்டும் நிகழ்வு இங்கு இடம்பெற்றதுடன், தர்மசிறி பண்டாரநாயக்க, பராக்கிரம நிரியெல்ல, சிறில் விக்கிரகமகே ஆகிய சிரேஷ்ட கலைஞர்களுக்கு ஜனாதிபதி விருதுகளை வழங்கினார்.

பேராசிரியர் ஆரியரத்ன எத்துகல, குமார திரிமாதுர, சரத் கொத்தலாவல உள்ளிட்ட மூத்த கலைஞர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

கலாநிதி பந்துல குணவர்தனவின் கலைத்துறை குறித்து, பேராசிரியர் பிரனீத் அபயசுந்தர, ரஞ்சித் குமார, அருண குணரத்ன, தினுஷ குடாகொடகே ஆகிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களால், தொகுக்கப்பட்ட "சுபந்து சினிமா வத" நூல் வெளியீடும் இந்நிகழ்வுக்கு இணையாக இடம்பெற்றது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்திற்கமைய, பாடசாலை மாணவர்களுக்காக வருடந்தோரும் நடைமுறைப்படுத்தப்படும் "பிரக்ஞா பந்து" புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இம்முறை உயர்தர தொழில்நுட்பம் கற்கும் 251 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதை முன்னிட்டு, அடையாள ரீதியாக 25 மாணவர்களுக்கு, பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதான உரையை சிரேஷ்ட திரைப்பட விமர்சகர் காமினி வேரகம நிகழ்த்தினார்.

கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமாகிரி தர்ம மகா சபையின் மகாநாயக்க வண. இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர், வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் பிரதிநிதிகள், கலைஞர்கள், ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# விரைவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துக

## ஆணைக்குழுவிடம் பொதுஜன பெரமுன வலியுறுத்து

பொது இணக்கப்பாட்டுடன் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு வெகுவிரைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம் என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (17) பத்தரமுல்லயில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்து, மக்கள் போராட்டம் வெடித்து அதனூடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்தவர்களின் எதிர்பார்ப்பு முழுமையாக தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எமக்கும் அரசியல் ரீதியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும் பொருளாதார மீட்சிக்காக அவர் எடுத்த கடுமையான தீர்மானங்களினால் நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது. ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு வெகுவிரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகள் அல்லாத தரப்பினரிடம் ஒப்படைத்தால் மாகாண சபைகளுக்கு நேர்ந்துள்ள கதியே உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நேரிடும். ஆளுநர்களின் நிர்வாகத்தினால் மாகாண சபைகள் முழுமையாக பலவீனமடைந்துள்ளன.

2019ஆம் ஆண்டு பாரிய அர்ப்பணிப்புடன் கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தோம். ஆனால் அவர் எங்களின் பேச்சை கேட்கவில்லை, அவர் பதவி விலகியவுடன் பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்தோம். ஆகவே தேர்தல் குறித்து அவரிடம் நாங்கள் உரையாடப் போவதில்லை என்றார்.

### ஆசிரியர்...

நடவடிக்கைகள் உள்ளிட்ட கடந்த காலத்தில் பாடசாலைகளில் இடம்பெற்ற பிரச்சினைகள் காரணமாக தற்போது ஆசிரியர் இடமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை கற்றல் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு வழங்கவே ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

மேலும், பொருளாதார நெருக்கடி, போக்குவரத்து சிரமம், செலவு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை இரத்துச்செய்யுமாறு பல்வேறு தரப்பினரும் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கிய ஆசிரியர் குழுவொன்றும் இம்முறை ஆசிரியர் இடமாற்றங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தமது இடமாற்றங்களை அரசியல் பழிவாங்கல் என குழுவொன்று குறிப்பிட்டு வருவதாகவும் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை கருத்திற்கொண்டே ஜனாதிபதி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஆசிரியர் இடமாற்றச் சபையை கலைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

### ஐ.எம்.எவ்...

இதனை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 21ஆம் திகதி நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி இலங்கைக்கு கிடைத்ததும் அடுத்த நான்கு வருடங்களில், இலங்கைக்கு 07 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கலாமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரத்தில் வேகமாக முன்னேற்றம் காணும் நாங்கள், அடுத்த நான்கு வருடங்களில் 07 பில்லியன் அமெரிக்க டொலர்களை எதிர்பார்த்துள்ளோம்.

இந்த ஏழு பில்லியன் டொலர் என்பது நாங்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ள நிதி அமைப்புகள் மற்றும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் கிடைக்கவுள்ளன.

இதன்மூலம் அதிகளவு முதலீடுகளுக்கான வாய்ப்புகளை எதிர்பார்க்கிறோம்.

இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள பலர், அந்த வாய்ப்புகளுக்காக காத்திருக்கின்றனர்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் நாணய சபையின் அங்கீகாரம் திங்கட்கிழமை 20ஆம் திகதி கிடைக்குமென்ற நம்பிக்கையுள்ளது. இது எங்களுக்கு மிகவும் முக்கியமானது.

நாங்கள் நிதி முறையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இப்போது, மிகவும் கடினமான காலத்தை கடந்துள்ளோம். ஆனால் 2023ஆம் ஆண்டு கூட எங்களுக்கு முக்கியமானது. ஏனென்றால், இந்த ஆண்டு மீட்சியை அடிப்படையாகக் கொண்டது.

2024ஆம் ஆண்டு முதல் நாங்கள் சரியான பாதையில் பயணிப்போம். நாங்கள் தற்போது எதிர்கொண்டுள்ள குறுகிய பிரச்சினைகள் முடிவுக்கு வரவுள்ளன - என்றார்.

### தேர்தல் அவுட்...

அச்சடிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சீட்டுகளையும் அகற்ற நேரிடும் என அரச அச்சகம் கூறுகிறது.

ஆனால், அறிவுறுத்தல் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் படிவங்களை மட்டுமே மற்ற தேர்தல்களுக்கு பயன்படுத்த முடியும் என்று அரச அச்சகர் சுட்டிக்காட்டுகிறார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தல் தொடர்பான ஏனைய வாக்குச் சீட்டுகளை அச்சடிக்கும் பணியை பணம் வழங்கும் வரை ஆரம்பிக்க முடியாது என அரசாங்க அச்சகர் ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வெளிநாடுகளுக்கு...

பணியகம் தெரிவித்தது.

2022ஆம் ஆண்டு மே முதலாம் திகதி முதல் 28ஆம் திகதி வரையிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பணியகம் மேலும் சுட்டிக்காட்டியது.

இதுதொடர்பில் பணியகத்தின் அதிகாரியொருவர் கூறுகையில்,

இந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடைய 101 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 755 முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, இந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்துக்கிடமான 23 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஜப்பான், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ருமேனியா போன்ற நாடுகளுக்கு அனுப்புவதாக குறிப்பிட்டே இந்தப் பண மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, வேலைவாய்ப்பு முகவர்களினூடாக வெளிநாடுகளுக்கு செல்லும்போதும், அவர்களுக்கு பணம் கொடுக்கும்போதும் வெளிநாட்டு தொலைபேசி அழைப்பின்மூலம் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு முகவர் நிலையம் தொடர்பில் வேலைவாய்ப்பு பணியகத்திடம் உறுதிப்படுத்தியதன் பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் சுட்டிக்காட்டினார்.

### தேர்தலுக்கு...

என சுதந்திரமானமற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கைக்குழுவான பெப்ரல் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.

சட்டரீதியான காரணங்களை முன்வைக்காமல், உள்ளூராட்சித் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பது தெளிவாகத் தெரிகிறது என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தருணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க முற்போக்கான தேர்தல் சீர்திருத்தங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். தற்போதைய எல்லை நிர்ணய நடவடிக்கையின்மூலம் தொகுதிகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்த பின்னர் புதிய தேர்தல் முறை எப்படி இருக்கும் என்றும் ஹெட்டியாராச்சி பிரதமரிடம் வினவியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 வீதமாக குறைக்கும்போது இளைஞர், பெண் ஒதுக்கீட்டுக்கு தலா 25வீதம் ஒதுக்கப்படுமா என்றும் அவர், பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

### முன்னாள் எம்.பி.

வெள்ளிக்கிழமை (17) அவர் கைது செய்யப்பட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி வாகன விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றுவரும் நிலையில், குறித்த வழக்குடன் தொடர்புடைய சாட்சியாளர்களை அச்சுறுத்தியதாக தெரிவித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரே வாகனத்தைச் செலுத்தியதாக பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ஸ்ரீரங்காவே வாகனத்தைச் செலுத்தியதாகவும் பொலிஸ் உத்தியோகத்தர் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார் எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.03.16
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5061 | ரூ. 16,511,288.00 | T | 9 6 4 8 0 9 |
| கொவிசெத | 3303 | ரூ. 87,311,854.40 | U | 20 32 58 78 |
| ஜாதிக சம்பத | 1516 | ரூ. 10,822,950.80 | | 2 2 5 4 8 5 |
| தன நிதானய | 1091 | ரூ. 81,210,831.60 | C | 51 63 68 78 |
| ராசி சுப பலன் Handahana | 370 | ரூ. 2,590,632.00 | | 16 45 50 59 |
| மெகா பவர் | 1409 | ரூ. 308,104,630.00 | D | 30 41 63 66 |

ஜாதிக சம்பத: வெற்றி இலக்கினம்
ராசி சுப பலன்: வெற்றி இலக்கினம் தனுசு; விசேட இலக்கினம் தனுசு
மெகா பவர்: சுப்பர் இலக்கம் 16; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


### போலி வழக்குகளை...

மக்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை நிலை இருப்பதாக நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இந்த வாரத்தில் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த நிலைமையை கவனத்தில் கொண்டு போதைப்பொருள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதுடன் தொடர்புடைய சட்டங்களை திருத்துவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் போதைப்பொருள் தொடர்பான வழக்குத்தாக்கல்களை முன்னெடுக்கும்போது பொலிஸாரால் பின்பற்றப்படும் செயற்பாடுகள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிலவேளைகளில் ஒருசில மாதிரிகள் தவறாகலாம். ஒருசில பொலிஸ் நிலையங்களில் 20 – 30 மாதிரிகள் தவறாகின்றன. போதைப்பொருளில் அடங்காத பொருட்களை நச்சு மருந்துகள் என்று தெரிவித்து மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள சட்டம் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, சட்டத்தில் ஒருசில மாற்றங்களை செய்யவேண்டியுள்ளது.

வலிநிவாரணி மாத்திரைகளை தூளாக்கி சந்தேக நபரொருவரை ஆஜராக்கி, போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் அவரை விளக்கமறியலில் வைக்கிறார்கள். சில மாதங்கள் கடந்து இரசாயன பகுப்பாய்வு அறிக்கை வெளிவரும்போது அதில் நச்சு மருந்துகள் உள்ளடக்கப்பட்டிருக்காது. பழிவாங்குவதற்காக போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாக மக்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவதிலும் உண்மை இருக்கிறது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சனத்தொகை...

செயற்பாடுகளை கொரோனா மற்றும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டதாக அவர் கூறினார்.

இந்த நிலையில், புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான முன்னோடி செயற்பாடுகளை ஏப்ரல் மாதத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும், மே - ஜூன் மாதமளவில் முழுமையானகள நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் முழுமையான மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படும் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

### பாடசாலை மாணவர்களுக்கு...

இதன்படி, மலையகத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கு ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி வழங்கப்படவுள்ளது.

புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இத்திட்டம் செயல்படுத்தப்படும். இரு தரப்புக்கும் இடையிலான உடன்படிக்கையே இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையின் கீழ் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் இடைவிலகளை தடுப்பதற்காகவும், அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனுமே இத்திட்டம் ஆரம்பமாகின்றது.

அதேவேளை, மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில், இலவச சத்துணவு வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கான வேலைத்திட்டத்தையும் உலக வங்கி உதவியுடன் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்தார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், அமைச்சரின் அதிகாரிகள், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின் 'Good Neighbors International' முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

### தமிழ் அரசியல்...

காவு வண்டி சாரதியாக இருந்தவேளை, கடந்த 2008ஆம் ஆண்டு பணி நிமித்தம் கிளிநொச்சியில் இருந்து கொழும்பு நோக்கி நோயாளர் காவு வண்டியில் பயணித்துக்கொண்டிருந்தவேளை வவுனியா தேக்கவத்தை பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் 2011ஆம் ஆண்டு மன்று அவரை குற்றவாளியாக கண்டு ஆயுள் தண்டனை விதித்தது. அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்தார்.

மேன்முறையீட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அதனையடுத்து, தனது மேன்முறையீட்டு மனுவை மீள கையேற்க பெப்ரவரி 23ஆம் திகதி சட்டத்தரணி ஊடாக மனுவை மன்றில் கையளித்தார். அதனையடுத்து மன்று அவரின் மேன்முறையீட்டை மீள் அளித்தது.

அதனையடுத்து அவரை விடுதலை செய்வதில் நீதி, நிர்வாக செயற்பாடுகளில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக வெள்ளிக்கிழமை (17) அவருக்கு சிறைச்சாலையில் இருந்து விடுதலை கிடைத்துள்ளது.

### ரயிலில் மீட்கப்பட்ட...

தம்பதியரை தலா 5 இலட்ச ரூபா இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிணை வழங்கப்பட்டதன் பின்னர் சந்தேகநபர்களான இளம் தம்பதியருக்கு திருமணம் செய்து வைக்க தீர்மானித்துள்ளதுடன், அதன் பின்னர் குழந்தையை அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சந்தேகநபர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி லக்ஷான் டயஸ் முன்வைத்த யோசனையை கருத்திற்கொண்டு நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்தோடு சிசு மற்றும் சந்தேக நபர்களான சிசுவின் பெற்றோரை மரபணு பரிசோதனைக்காக எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு அரச இரசாயன பகுப்பாய்வாளரின் முன் ஆஜராகுமாறு நீதவான் அதன்போது உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கவிருந்த 'மீனகயா' ரயிலின் கழிவறைக்குள் கைவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த 10ஆம் திகதி மாலை சிசுவொன்று மீட்கப்பட்டது.

இதனையடுத்து சிசுவின் தாயும் தந்தையும் வெவ்வேறு பகுதிகளில் கைதுசெய்யப்பட்டனர்.

25 வயதான தாய் பண்டாரவளையிலும் 26 வயதான தந்தை கொஸ்லந்தையிலும் கடந்த 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு 12ஆம் திகதி பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து, அவர்கள் இருவரையும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிர கவனம்

## விசாரணைகள் 23ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

ஶ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கம் மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, அரச மருத்துவமனைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இது தொடர்பான விசாரணை கடந்த 15ஆம் திகதி இடம்பெறவிருந்தபோதிலும், முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் ஆகியோர் அன்று விசாரணைகளுக்கு சமுகமளிக்காததால் எதிர்வரும் 23ஆம் திகதி வரை அந்த விசாரணை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ள அந்த ஆணைக்குழு, நாட்டின் அரச மருத்துவமனைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதுதொடர்பில் கடந்த 15ஆம் திகதி இந்த விசாரணைகளுடன் தொடர்புடைய முறைப்பாட்டாளர்கள் மற்றும் பிரதிவாதிகளை விசாரணைகளுக்காக அழைத்திருந்தது.

அதன்போது இந்த விசாரணைகளில் பிரதிவாதிகளாக சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இருந்தபோதும் இந்த விசாரணைகளில் தீர்மானம் எடுக்கும் இடத்திலுள்ள அதிகாரிகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குகொள்ளாத நிலையில் இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணையை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிக விரைவாக தலையிட வேண்டிய தேசிய ரீதியில் பொறுப்புடைய பிரச்சினையாக அரச மருத்துவமனைகளில் இடம்பெறும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் ஆணைக்குழு கூடிய கவனம் செலுத்தி வருகிறது. அதற்கமைய, காலத்தை நீடிக்காமல் மிக அதிக முக்கியத்துவம் வழங்கி இந்த மருந்து தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அழைப்பாணை விடுத்து விசாரணைகளை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டில், முறைப்பாடு செய்தவர்கள் சார்பில் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கம் மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் ஆகியோர் செயற்படுவதாக அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

லிஸ்டீரியா (Listeria – Listeriosis)

# தொற்று பரவும் அபாயம் இல்லை

## சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில் லிஸ்டீரியா (Listeria – Listeriosis) தொற்று பரவும் அபாயம் இல்லையென சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மக்கள் தேவையற்ற வகையில், அச்சமடைய வேண்டியதில்லை என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


பக்டீரியா தொற்றுக்குள்ளான பெண் ஒருவர் அண்மையில் இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் உயிரிழந்ததையடுத்து, சுகாதாரத் திணைக்களம் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஸ்ரீனி அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

காய்ச்சல், வாந்தி, தலைவலி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தும் லிஸ்டீரியா பக்டீரியா, அசுத்தமான உணவின் மூலம் உடலுக்குள் பரவுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்கு சென்ற பெண் ஒருவரே நோய்த்தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சிவனொளிபாதமலையினை அண்மித்துள்ள வர்த்தக நிலையங்களில் குறித்த பக்டீரியா பரவியுள்ளதா என பரிசோதிப்பதற்காக உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்டசுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

# 12 இந்திய மீனவர்கள் நிபந்தனையுடன் விடுவிப்பு




யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த 12 மீனவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (17) பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 12 மீனவர்களுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர்கள் பயன்படுத்திய படகு அரசுடைமையாக்கப்பட்டுள்ளதுடன், குறித்த 12 மீனவர்களையும் இந்தியாவிற்கு அனுப்பும் பணிகளில் இந்திய துணைத்தூதரகம் ஈடுபட்டு வருகிறது.

# முஸ்லிம்களின் வரலாற்று அடையாளச் சின்னங்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கொள்கைபரப்புச் செயலாளர் ஸப்வான் ஸல்மான்

*(ரஸீன் ரஸ்மின்)*

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வரலாற்று அடையாள சின்னங்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஸப்வான் ஸல்மான் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று தொல்பொருள் திணைக்களத்தின் பராமரிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், அதன் அருகே பல்லாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த முஸ்லிம்களின் 40 அடி சமாதிகள் இரண்டு காணப்படுகின்றன. அவை சில இனவாதிகளால் சிதைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் அரசு புனரமைத்து சுற்றுலா பயணிகள் பார்வையிடும் இடமாக மாற்றப்பட வேண்டும்.

ஒரு சமூகம் வாழ்ந்தது என்பதற்கான அடையாளச் சின்னங்கள் அகற்றப்படுவது அல்லது மக்கள் அங்கு செல்லமுடியாத அளவு முடக்கப்படுவது அச் சமூகத்தின் வரலாற்றை மறைப்பதற் கான ஏற்பாடாகவே பார்க்க முடிகிறது.



இலங்கையின் பல்வேறு முஸ்லிம் களோடு தொடர்புபட்ட இது போன்ற அடையாளங்கள் இனவாதிகளின் சில மோசமான செயற்பாடுகள் காரணமாக அரசுடமையாக்கப்பட்டு அங்கு மக்கள் செல்வது தடுக்கப்பட்டுள்ளன.

இவை முஸ்லிம்களின் அடையாளச் சின்னங்களை அழிப்பதற்கு திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இப்படியான நிலைமைகள் மேலும் தொடருமானால், அடுத்த தலைமுறையினர் இலங்கையில் பன்மைக்கால முஸ்லிம்கள் இருந்தார்கள் என்பதற்கு சான்றுகளை பார்க்க முடியாத சூழ்நிலை உருவாகும்.

எனவே, முஸ்லிம்கள் தமது வரலாற்று ஆதாரங்களாக அல்லது புனித இடங்களாக மதிக்கக்கூடிய இடங்களில் தீய சக்திகள் கை வைக்காமலும் அது பொதுமக்கள் பாவனையில் இருக்கும் விதமாகவும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஸப்வான் ஸல்மான் மேலும் தெரிவித்தார்.

# விமான விபத்துகள் குறித்து விசாரணை நடத்த குழு நியமனம்

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக, நாட்டின் வான்பரப்பில் விமான விபத்துகள் குறித்து விசாரணை நடத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் ஏழு விமான விபத்து புலனாய்வாளர்கள் நியமிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த புலனாய்வாளர்கள் விமான விபத்துகளின் துல்லியமான விவரங்களை அடையாளம் காணவும், அத்தகைய சம்பவங்களின் மூல காரணத்தை ஆராய்வதற்கும், இலங்கையின் வான்வெளியில் எதிர்காலத்தில் ஏற்படும் துயரங்களைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கும் பொறுப்பாவார்கள்.

இந்த முயற்சியானது இலங்கை விமான சேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக அமைவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# அனுமதியின்றி மரக்குற்றிகளை கொண்டுசென்றவர் யாழில் கைது



அனுமதிப்பத்திரம் இல்லாமல் மலைவேம்பு மரத்தை வெட்டி எடுத்துச்சென்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரம் மற்றும் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம் (17) காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரத்திற்கும் எந்தவொரு ஆவணங்களும் இல்லை எனவும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# யாழ். – கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உவர்நீரை குடிநீராக மாற்றும் வேலைத்திட்டம்

## கட்டுமானப் பணிகளை நேரில் சென்று ஆராய்ந்தார் அமைச்சர் டக்ளஸ்



வடமராட்சி, தாழையடி கிராமத்தில் உருவாக்கப்பட்டு வருகின்ற யாழ். – கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உவர்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தின் வேலைத்திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டு, குறித்த திட்டத்தை செழுமைப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் பிரான்ஸ் நாட்டை தலைமையகமாக கொண்டு சூய்ஸ் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டு வருகின்ற உவர்நீரை குடிநீராக்கும், தாழையடி குடிநீர்த் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை வெள்ளிக்கிழமை (17) நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற சூயஸ் நிறுவனத்தின் கள அதிகாரிகள் உட்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் சுமார் 14 ஆயிரத்து 559 மில்லியன் ரூபா நிதியுதவியில் உருவாக்கப்பட்டு வருகின்ற இந்த திட்டத்தின் மூலம் நாளாந்தம் சுமார் 2 கோடி 40 இலட்சம் லீற்றர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் வேலைத்திட்டங்கள் இந்த வருட இறுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் முதல் கட்டமாக மீசாலை வரையான கிராமங்களுக்கு குடிநீர் விநியோகத்தினை ஆரம்பிப்பதற்கும் தொடர்ச்சியாக ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகத்தினை விஸ்தரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தாளையடி குடிநீர்த்திட்டத்தின் சமூக பாதுகாப்பு பங்களிப்புத் திட்டத்திற்கு அமைவாக, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்திற்கு வழங்குவதற்காக 58 இலட்ச ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வருகின்ற ஐஸ் தொழிற்சாலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

குறித்த ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை மூலம் நாளொன்றிற்கு 5000 கிலோ கிராம் ஐஸ் கட்டிகளை உற்பத்திசெய்ய முடியும் என்பதுடன், ஐஸ் உற்பத்திக்கான மின்சாரத்தினை பெற்றுக்கொடுப்பதற்கான சூரிய கலங்களும் பொருத்தப்பட்டுள்ளமையினால் குறைந்த செலவில் ஐஸ் கட்டிகளை கடற்றொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விமானப்படையின் மிகச்சிறந்த விமானப்படை வீர வீராங்கனைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு






இலங்கை விமானப்படையின் முன்னேற்றத்திற்காக ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தமது தொழிலுக்கு அப்பால் சென்று திறன்களை வெளிப்படுத்திய சிறந்த விமானப்படை வீர வீராங்கனைகளை அங்கீகரிப்பதற்காக வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விமானப்படையின் சிறப்பு விருது வழங்கும் வைபவம் மார்ச் 15ஆம் திகதி கட்டுநாயக்க விமானப்படை ஈகிள் லகூன் மண்டபத்தில் இடம்பெற்றது.

2022ஆம் ஆண்டில், விமானப்படையின் ஒவ்வொரு தொழில் பிரிவில் சிறந்த விமானப்படை வீரர் தெரிவானது அப்பிரிவின் பணிப்பாக குழுவின் மேற்பார்வையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முறையின்படி தேர்ந்தெடுக்கப்படுவார். பின்னர் பரிந்துரைகளின்படி அதிக புள்ளிகளைப் பெறும் விமானப்படை வீரர் மற்றும் விமானப்படை வீராங்கனை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அந்த அடிப்படையில் 2022ஆம் ஆண்டுக்கான சிறந்த விமானப்படை வீரராக சீனக்குடா விமானப்படை கல்விப்பீடத்தின் இல 01 ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு பிரிவில் கடமையாற்றும் வாரெண்ட் அதிகாரி ப்ரியங்கர தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த விமானப்படை வீராங்கனையாக கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தின் அதிகாரிகள் உணவகத்தின் உதவியாளராக கடமையாற்றும் கோப்ரல் லக்ஷிகா தெரிவுசெய்யப்பட்டார்.

மேலும், குழுக்களுக்கான பிரிவில் சிறந்த சூழ்நிலை கட்டுப்பாட்டு அணியாக தியத்தலாவ விமானப்படைத்தளமும், சிறந்த சுற்றாடல் முகாமைத்துவ திட்ட குழுவாக பாலவி விமானப்படை தளமும், சிறந்த ஆய்வுக் குழுவாக மிஹிரிகம விமானப்படை தளத்தில் அமைந்துள்ள வான் பாதுகாப்பு ரேடார் படைப்பிரிவும் விருதுகள் பெற்றதுடன், சிறந்த விமானப்படை வீர வீராங்கனைகளுக்கான ரொக்க பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் விமானப்படை தலைமை தளபதி மற்றும் விமானப்படையின் பணிப்பக அதிகாரிகள், விமானப்படையின் ஏனைய அதிகாரிகள், படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். மாவட்டத்தில் 1814 கர்ப்பிணிகள் வறுமையில்

## கோப்பாய் பிரதேச செயலகம் முன்னணியில்

யாழ். மாவட்டத்தில் 1814 கர்ப்பிணிகள் வறுமை நிலையில் உள்ளதாக யாழ். மாவட்ட செயலகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா இடர்காலத்துக்கு பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பல கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 370 கர்ப்பிணிப் பெண்கள் வறுமை நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் 226 கர்ப்பிணிப் பெண்களும், சங்கானைப் பிரதேச செயலகத்தில் 157 கர்ப்பிணிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் 139 கர்ப்பிணிகளும், யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் 138 கர்ப்பிணிகளும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் 128 கர்ப்பிணிகளும், சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 118 கர்ப்பிணிகளும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 117 கர்ப்பிணிகளும், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 98 கர்ப்பிணிகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 97 கர்ப்பிணிகளும், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 91 கர்ப்பிணிகளும், காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 40 கர்ப்பிணிகளும், வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் 49 கர்ப்பிணிகளும், ஊர்காவற்துறை பிரதேச செயலகப் பிரிவில் 25 கர்ப்பிணிகளும், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் 21 கர்ப்பிணிகளுமாக 1814 பேர் வறுமை நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



அதேநேரம் அரசாங்கத்தினால் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு 8 மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 19, 2023

# தவிர்ப்போம் தற்கொலையை!

கடந்த வருடம் 3ஆயிரத்து 406 தற்கொலைகள் பதிவாகியுள்ளதாகவும் ஒவ்வொரு நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு தற்கொலை பதிவாகுவதாகவும் சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் ரொஹான் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மனநலம் மேம்படும்பட்சத்தில் தற்கொலைகளை தடுக்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

ஊடக அமைச்சும் சுகாதார அமைச்சும் இணைந்து இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் கடந்த வியாழக்கிழமை (16) நடத்திய செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பதிவான தற்கொலைகளில் 2ஆயிரத்து 832 பேர் ஆண்கள் என்றும் மீதமுள்ள 574 பேர் பெண்கள் என்றும் அவர் கூறினார். அதன்படி, பெண் தற்கொலைகளை விட ஆண்களின் தற்கொலை வழக்குகள் அதிகம்.

தீராத நோய்கள், ஆண்மைக்குறைவு, மனநோய் மற்றும் போதைப்பொருள் பாவனை போன்றவற்றினால் மக்கள் தற்கொலையை நாடுவதாகவும் டொக்டர் ரொஹான் ரத்நாயக்க தெரிவித்தார்.

கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிகளவான தற்கொலைகள் இடம்பெற்றுள்ள அதேவேளை, கடந்த வருடம் கம்பஹா மாவட்டத்தில் தற்கொலைகள் ஒழுங்கற்ற முறையில் அதிகரித்துள்ளதாக மனநல சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்கொலைகளுக்கு பொருளாதாரப் பிரச்சினைகளும் ஒரு காரணம் என்றும் அவர் கூறினார். வயதுக்கு ஏற்ப ஆண்களின் தற்கொலைகள் அதிகரித்து வருவதாகவும் அதே சமயம் பெண்கள் இளம் வயதிலேயே தற்கொலை செய்துகொள்வதாகவும் ஆய்வறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் பல தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளதோடு, அதில் பல சம்பவங்கள் கொலையுடன் கூடிய தற்கொலை சம்பவங்களாகவும் பதிவாகியுள்ளன. அந்த வகையில் அண்மையில் கொடிகமுவ அரநாயக்க பகுதியில் 33 வயதுடைய தந்தையொருவர் குடும்பத் தகராறு காரணமாக தனது இரு குழந்தைகளை (9 மற்றும் 6 வயது) வெட்டிக் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பதிவாகியது. மேலும், வவுனியாவில் மனைவி மற்றும் இரு குழந்தைகளை கொலை செய்துவிட்டு தந்தை தற்கொலை செய்துகொண்ட சம்பவம், விசேட தேவையுடைய தனது இரண்டு மகன்களின் சிகிச்சைக்கு பணமின்றி தாயொருவர் அவர்கள் இருவரையும் கிணற்றில் தள்ளிவிட்டு தானும் குதித்து தற்கொலைக்கு முயன்ற சம்பவத்தில் மகன் உயிரிழந்த சம்பவம் போன்றன பதிவாகியிருந்தன.

தற்கொலை எண்ணம் ஒரு பிரச்சினைக்கான தீர்வாகாது. தற்கொலைக்கு முயற்சி செய்வதற்கு ஒருவித மனோதைரியம் தேவை. உயிரை மாய்த்துக்கொள்ள முன்னெடுக்கும் முயற்சியையும் தைரியத்தையும் வாழ்வதற்காக பயன்படுத்தினால் பிரச்சினை தீர்ந்துவிடுகிறது. காலை எழுந்தது முதல் இரவு கண்ணயரும் வரை அனைவரும் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டே அன்றாட வாழ்வை கொண்டு செல்கின்றனர். பிரச்சினைகளுக்கு அதுதான் தீர்வென்று அனைவரும் தற்கொலைக்கு முயற்சித்தால் நாடே சுடுகாடாகிவிடும்.

தற்கொலை செய்துகொண்டு இறந்துவிடுவதால் பிரச்சினை முடிவதாக நினைக்கும் சிலர் அதனால் இன்னொருவர் புதியதோர் பிரச்சினையை எதிர்நோக்குவர் என்பதை மறந்துவிடுகின்றனர். அது மாத்திரமன்றி, தற்கொலை முயற்சி தோல்வியில் முடிந்தால் அதற்கு பின்னரான வாழ்வில் எதிர்கொள்ளும் துயரங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள முன்னரைவிட அதிக முயற்சிகளை எடுக்க நேரிடுகிறது. அவ்வாறான சூழலில் தற்கொலை எண்ணமானது சில நிமிடங்களில் தோன்றுவதாகும். அந்த நிமிடத்தைக் கடந்து செல்லாமல் அவசரத்தில் எடுக்கும் முடிவே தற்கொலைக்கு காரணமாக அமைகிறது. சில நிமிடங்கள் தனிமையிலிருந்து யோசித்தால் அல்லது உங்களது பிரச்சினைகளை மனம்விட்டு இன்னொருவரிடம் தெரிவித்தால் தற்கொலை எண்ணத்தை மாற்றிக் கொள்ளலாம்.

உலக சுகாதார நிறுவனம், உலகில் கிட்டத்தட்ட 8 இலட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் தற்கொலையால் இறப்பதாகக் குறிப்பிடுகின்றது. தற்கொலைக்கு முயல்வதால் ஒரு பிரச்சினைக்கு தீர்வை எட்டிவிட முடியாது. தற்கொலை எண்ணம் ஏற்படாமல் இருக்க பல வழிகள் உள்ளன. கல்வியறிவை வளர்த்துக் கொள்ளல், உளவள ஆலோசனைகளைப் பெறுதல், மன அமைதியைப் பேண யோகா மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல், பாடல்களை கேட்டல், ஓவியங்கள் வரைதல், ஆன்மீக வழிபாடுகளை மேற்கொள்ளல், செல்லப்பிராணிகளுடன் நேரம் செலவிடுதல் என மனதை வேறு திசையில் கொண்டுசெல்ல அல்லது ஒருநிலைப்படுத்த ஏதாவது ஒரு முயற்சியை மேற்கொள்ளலாம். அதன் மூலமாக தற்கொலை எண்ணத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு..." என்பதுபோல் பிரச்சினைகள் வரும்போது நம்மைவிட துயரத்தில் அல்லது அடிமட்டத்தில் இருக்கும் தீர்வே பெறமுடியாத பிரச்சினைகளைக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதனை சிந்திக்க வேண்டும். அப்போது வாழும் எண்ணமே தோன்றும்.

# இன்னொரு அரசியல் சுனாமிக்கான பாதையில் இலங்கை!





## ஜே.வி.பியும் சஜித் அணியும் பிரிந்து நின்று அறுவடைக்குக் காத்திருக்கின்றன

இலங்கை தற்போது தாச்சியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலையில் உள்ளது. அடுப்பில் விழுந்த நிலையில் தென்னிலங்கை மக்கள் தமக்கான தலைமையைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பயணத்தில் நம்பிக்கையிழந்த நிலையில், "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தெரிவித்தார். அந்த ஒரு நிலைக்கு தென்னிலங்கை இன்று வந்துள்ளது.

இந்த ஒரு பின்னணியில் தென்னிலங்கை தமக்கான தலைமையைத் தேடிக் கொண்டிருக்கின்றது.

### மக்கள் எழுச்சி

ஆட்சி அதிகாரத்தில் ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கம். இந்த ஆளும் வர்க்கத்திற்கெதிராக மக்கள் ஓரணியில் நிற்கின்றனர். கடந்த ஆண்டு மக்கள் எழுச்சிகள் எழுந்தன. பொதுமக்களின் வெறுப்பு ஆரம்பத்தில் தலைவர் இல்லாத எதிர்ப்புகளாக வெடித்தது.

நாட்டை திவாலாக்கிய ராஜபக்ஷக்களின் நிர்வாகத்தை நிறுத்துமாறு மக்கள் கோரினர். வீதியில் இறங்கிப் போராடினர்.

அவர்களுக்குக் கிடைத்திருப்பது ராஜபக்ஷக்களின் ஆட்சியின் நீட்சிதான்.

ஆனால், கடந்த ஆண்டு மக்கள் எழுச்சிகளுக்கு வழிவகுத்த அனைத்து அரசியல் - பொருளாதார காரணிகளும் கவனிக்கப்படாமல் உள்ளன.

பொருளாதார முறைகேடு, ஊழல், விரயம், அதிகார துஷ்பிரயோகம், பொருளாதார கஷ்டங்கள், தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாசாரம், சட்டத்தின் ஆட்சி சரிவு மற்றும் பொது நிதி திருட்டு ஆகியவை அப்படியே மாற்றமின்றி தொடர்கின்றன.

நாட்டின் திவால்நிலைக்கு மக்கள்தான் காரணம் எனப் பேசுகிறார்கள்!

### பிளவுபட்டு நிற்கும் எதிர்க்கட்சிகள்

SJB, JVP தலைமையிலான NPP, SLFP மற்றும் SLPP அதிருப்திக் குழுக்கள் என எதிர்க்கட்சி வரிசையில் நிற்பவர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக ஒன்றுடன் ஒன்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ராஜபக்ஷ - விக்கிரமசிங்க ஆட்சிக்கு, பிளவுபட்டு நிற்கும் எதிர்க்கட்சியினரின் நிலைப்பாடு சாதகமாக உள்ளது.

### இன்னொரு 'அரகலயவை' நோக்கிய காத்திருப்பு

மக்களின் கோபத்தை எவ்வாறு தத்தமது அரசியல் நலன்களுக்காக அறுவடை செய்து கொள்வது என்பதில்தான் தென்னிலங்கை அரசியல் சக்திகள் முனைப்புக் காட்டுகின்றன. பொது எதிரிக்கு எதிரான கூட்டுச் செயற்பாட்டை தென்னிலங்கையின் அரசியல் களத்தில் காண முடியாதிருக்கின்றது. பொது மக்களைப்போன்று தென்னிலங்கை அரசியல் சக்திகளும் இன்னொரு 'அரகலயவை' ஆவலுடன் எதிர்பார்த்து காய்களை நகர்த்துவதாகவே உள்ளது.

இந்தப் போராட்டத்தின்மூலம் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை பதவியில் இருந்து அகற்றுவதற்கு வழிவகுத்த மக்கள் சக்தியின் போராட்டத்திற்கு நிகராக எதையும் SJB அல்லது JVP அல்லது முன்னிலை சோஷலிசக்கட்சி (FSP) அல்லது வேறு எந்த எதிர்க்கட்சியாலும் செய்ய முடியவில்லை.

SJB தலைவர் சஜித் பிரேமதாசவும், JVP தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் ஒன்றுபட்டால், வீழ்வோம், பிரிந்தால் தாங்கள் நிலைத்து நிற்கலாம் என்ற மாயையில் உழைக்கின்றனர். அவர்களின் அரசியல் சண்டைகள் SLPP மற்றும் UNPக்கு மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தியுள்ளன.

### ரணில் விக்கிரமசிங்க

ஐ.தே.க. தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்ட ராஜபக்ஷக்களையும் அவர்களது அணியினரையும் காப்பாற்றுவதுடன் 2020இல் அவரையும் அவரது கட்சியையும் முற்றிலுமாக நிராகரித்ததற்காக நாட்டைப் பழிவாங்குவதும் தண்டிப்பதும்தான் அவரது நிகழ்ச்சி நிரலின் முதன்மையானதுமாக உள்ளது என்பதே நாட்டு மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

### ஐ.தே.கவுக்கான சவக்குழி

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கான சவப் பெட்டிக்கான இறுதி ஆணியையும் அடித்து விட்டார். ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தனது அரசியல் பயணத்தை படுகொலை செய்து விட்டதாக கூறினார். ஆனால் நல்லாட்சி காலத்தில் மீட்டுக் கொண்ட அந்த அரசியல் ஆயுளை அவரே கல்லறைக்கு இழுத்துச்சென்றார் என்பது பதிவுகளாக உள்ளன.

ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யு போன்று மேலெழ சந்தர்ப்பம் இருந்தபோதும் ராஜபக்ஷக்களின் அணியினரைக் காப்பாற்றும் அதேவேளை, இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கத்தின் மீட்பராக பாத்திரம் ஏற்றுள்ள நிலையில் எதேச்சதிகாரத்தின் எஜமானாக தன்னை உருவகித்துக் கொண்டுள்ளார். மொத்தத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று ராஜபக்ஷக்களுடன் இணைந்து தனது அரசியல் பயணத்திற்கு மாத்திரமல்ல ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பயணத்திற்கும் முடிவுரை எழுதிக் கொண்டிருக்கின்றார்.

### தேர்தல் வெற்றி கானல் நீரே!

ஐ.தே.கவோ அல்லது ராஜபக்ஷக்களோ முறையான தேர்தல் மூலம் மீண்டெழுவது கானல் நீராகும். எனவேதான் SLPP - UNP கூட்டணி, தேர்தல்களை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில் தேர்தலை தாமதப்படுத்தும் முயற்சியில் உள்ளது.

உள்ளூராட்சி, மாகாண அல்லது தேசியத் தேர்தல் எதுவாக இருந்தாலும் அது விக்கிரமசிங்க - ராஜபக்ஷ ஆட்சிக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் குறிப்பாக பெரும்பாலான பதவியில் இருப்பவர்கள் அறிவார்கள்.

### ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்

தேர்தலை கண்டு அஞ்சி நாசவேலையில் ஈடுபடும் அரசாங்கத்தை விட ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் எதுவும் இல்லை.

நிதி பற்றாக்குறையைக் காரணம் காட்டி தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டாலோ அல்லது தேர்தல் இரத்துச் செய்யப்பட்டாலோ எதிர்காலத்தில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தல்களோ நடைபெறுவதற்கான வாய்ப்புகளும் மறுக்கப்படலாம்.

### பாராளுமன்ற சிறப்புரிமைபற்றி பேசுகின்றனர்

தற்போது தேர்தலை ஒத்திவைப்பதற்காக நீதிமன்ற தீர்ப்பினை சவாலுக்குட்படுத்தும்வகையில் பாராளுமன்ற சிறப்புரிமைபற்றி பேசுகின்றனர். மொத்தத்தில் அதிகார போதையில் இருக்கும் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் அதிகாரத்துவ அடியாட்களின் கைகள் ஓங்கியுள்ளன.

தற்போதைய நிலையில், நீதிமன்றம் சில தீர்வுகளை வழங்கும் நிலையில் உள்ளது. ஆனால் ஒட்டுமொத்த தீர்வுக்கும் உடனடியாக தீர்வினை வழங்கும் நிலையில் நீதிமன்றங்களில் தங்கி நிற்பதானது நீண்டகால காத்திருப்புகளுடன் தொடர்புடையது.

எனவேதான் ரணில் - ராஜபக்ஷ ஆளுந்தரப்பு மக்களை வீதியில் நாளாந்தம் இறங்க வைத்துள்ளதுடன் அவர்களை பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களுக்குமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றது.

### பொலிஸார் தடைகளைப் பெற்று தடுத்து வருகின்றனர்

மக்கள் வீதியில் இறங்கிப் போராட முடியாதவகையில் நீதிமன்றங்களுக்கூடாக பொலிஸார் தொடர்ச்சியாக தடைகளைப் பெற்று போராட்டங்களை தடுத்து வருகின்றனர்.

மேலும், எதிர்க்கட்சிகள் தங்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து ஆத்திரமடைந்த பொதுமக்களுக்கு நம்பிக்கையுடனும் தேர்தலை அகற்றுவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை தகர்த்தெறிய வேண்டும்.

### தேர்தல் நடந்தால்? பெரும்பான்மை கேள்விக்குறி?

இப்போது தேர்தல் நடத்தப்பட்டால், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) வெற்றி பெற வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், எந்தவொரு அரசியல் கட்சியும் பெரும்பான்மையைப் பெற முடியாது என்று உள்ளூர் குழுவின் கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

இலங்கையின் சுகாதாரக் கொள்கைக்கான நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பின்படி, ஜே.வி.பி (32%) மற்றும் தேசிய மக்கள் சக்தி (SJB) (31%) மக்களின் ஆதரவைப் பெறும் நிலையில் உள்ளதாக வெளிப்படுத்துகின்றன. UNP 9% உடன் பின்தங்கியுள்ளது மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) 8% க்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் 3 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தும் இதுவரை ஒரு விளிம்பு நிலை அரசியல் கட்சியாக கருதப்பட்ட நிலையில், NPP முக்கிய நீரோட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவில் நுழைவதில் வெற்றி பெற்றுள்ளது.

வரலாற்று ரீதியாக ஜே.வி.பியின் பேரணிகளுக்குள் ஈர்க்கப்பட்ட பாரிய கூட்டங்கள் வாக்குகளாக மாற்றப்படவில்லை. ஏனெனில் அந்த பேரணிகள் நாட்டின் மூலைமுடுக்கிலிருந்து கட்சி தொண்டர்களை ஒன்றுதிரட்டியதால் உருவாகிய கூட்டங்களாகவே அமைந்தன. ஆனால் இன்றைய சூழ்நிலையில் மக்கள் ஆதரவாக வாக்களிக்கும் மனநிலைக்கு திரும்பியுள்ளதாகவே கள நிலவரம் காட்டி நிற்கின்றது.

இருப்பினும் இந்த முறை பொது மக்களின் மனநிலை UNP, SLPP மற்றும் SLFP (இது 1% உடன் அடிமட்டத்தில் நலிந்துள்ளது) ஆகியவற்றுக்கு எதிரான அலை உருவாகியுள்ளது.

SJB மக்களின் இந்த மனமாற்றத்தை வென்றெடுக்கத் தவறியுள்ளது. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில், சஜித் பிரேமதாச 42% மக்கள் வாக்குகளைப் பெற்றபோது இருந்த அதன் மக்கள் ஆதரவு தற்போது குறைந்துள்ளது.

### மக்கள் புள்ளடிக்குள் புரட்சி செய்ய காத்திருக்கின்றனர்

வாக்களிப்பதற்கு முன்பு நாட்டில் இன்னும் நிறைய நடக்கலாம். வாக்காளர்கள் மனநிலை ஊசலாடுகிறது. முடிவெடுக்காத வாக்காளர்கள் முடிவு செய்வார்கள். இருப்பினும், முந்தைய வழமையான வாக்களிக்கும் முறைக்கு மக்கள் திரும்புவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனெனில் தென்னிலங்கை மக்கள் புள்ளடிக்குள் புரட்சி செய்ய காத்திருக்கின்றனர். இதுவே ரணில் - ராஜபக்ஷ அணியினரைக் கிலிகொள்ளச் செய்துள்ளது.


### களியாட்ட கிரிக்கெட்

இந்த ஒரு நிலையிலும் நாட்டை இன்னொரு எரிமலையின் மீது தூக்கி நிறுத்தியுள்ள ஆட்சியாளர்கள் களியாட்ட கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். நாடு மாத்திரமல்ல, உண்மையில் அவர்களும் எரிமலையின் மீதே அமர்ந்துள்ளனர் என்பதை மறந்துவிட்டனர் போலும்.

### மற்றொரு சுனாமி

பொதுமக்களின் கோபத்தின் மற்றொரு சுனாமி உருவாகுவதற்கான அறிகுறிகள் மறைந்து விட்டதாக எண்ணி ஆளுந்தரப்பினர் களியாட்ட கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடலாம்.

ஆனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு அநாதையாக நிற்கும்வரை அதற்கு எவரும் பொறுப்பேற்று தீர்வு காணாதவரை மக்களின் கோபமோ எழுச்சியோ அடங்கியதாக அர்த்தப்படாது. அது இன்னொரு சுனாமியாக மீண்டும் மேல் எழும்பும். மேலும் அது முழு நாட்டையும் குழப்பத்தில் மூழ்கடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. ஏனெனில், ரணில் - ராஜபக்ஷ ஆளும் அணியினர் இன்னொரு அரசியல் சுனாமிக்கான பாதையைத் திறந்து விட்டுள்ளனர்.



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

## ★ அரசுக்கு அதிர்ச்சிதரும் ஆய்வறிக்கை வெளியானது – மக்கள் மனங்களை வென்ற தேசிய மக்கள் சக்தி

## ★ உள்ளூராட்சித் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படும் வாய்ப்பில்லை

## ★ ஆட்சியை பலப்படுத்தும் வியூகம் வகுக்கும் ரணில்




இலங்கையின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் அதிர்ச்சியூட்டும் முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற ஆய்வு அறிக்கையின்படி, தேசிய மக்கள் சக்தி மக்களின் ஆதரவை பெற்று முன்னிலையில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக ஐக்கிய மக்கள் சக்தி மக்களின் மனங்களில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் மீதான மக்களின் ஆதரவு கணிசமான அளவில் குறைந்துள்ளது.

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடுதலான மக்கள் செல்வாக்கை தக்க வைத்துக்கொண்டுள்ளது. அதேபோல் தமிழரசுக் கட்சி மக்கள் ஆதரவை இன்னமும் தக்க வைத்திருப்பதாக அந்த புதிய ஆய்வு தெரிவிக்கின்றது. கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பங்கள் வந்தாலும் தமிழரசுக் கட்சி அந்த மக்கள் ஆதரவை தக்க வைத்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதே ஆய்வு நிறுவனம் சில மாதங்களுக்கு முன்னர் நடத்திய ஆய்வில், தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் இருந்தது. ஆனால், புதிய ஆய்வறிக்கையின் படி தேசிய மக்கள் சக்தி அதிகமான மக்கள் ஆதரவை பெற்றிருப்பது தெரிகிறது. தேசிய மக்கள் சக்தி மாகாண நகரங்களில், நடத்தியுள்ள கூட்டங்கள் அதற்கு பங்களிப்பைச் செய்த மக்கள் என்பன தொடர்பில் தேசிய புலனாய்வுத்துறை ஏற்கனவே அறிக்கை ஒன்றை அரச உயர் மட்டத்திற்கு சமர்ப்பித்திருந்தது.

அதற்கு அடுத்தபடியாக இந்த தனியார் நிறுவனம் நடத்திய ஆய்வில், அந்தக் கட்சி முன்னிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களைவிட அதிகளவு செல்வாக்கை செலுத்த ஆரம்பித்து இருப்பதும் புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதிகமான மக்கள் வசிக்கும் மேல் மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் கடும் போட்டி நிலவுகிறது. வடமேல் மாகாணத்திலும் இதே நிலைமை தான். அதேபோல் மத்திய, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சக்தி அதிகளவு செல்வாக்கு கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலும் ஐக்கிய மக்கள் சக்திக்கு கணிசமான ஆதரவு இருப்பதாக தெரியவந்துள்ளது. ஆனால் அடுத்த பொதுத்தேர்தலில் மத்திய அரசின் ஆட்சியை தீர்மானிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு முக்கியமானதாக அமையும் என அந்த ஆய்வில் சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் மீது மக்கள் கடும் அதிருப்தி கொண்டிருப்பது இந்த ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. அந்த அதிருப்தியே மூன்றாவது சக்தியாக தேசிய மக்கள் சக்தியை உருவாக்கியுள்ளதாக சொல்லப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் டலஸ் அணிகளில் இருப்பவர்கள் பிரதான கட்சிகளில் இருந்து சென்றவர்கள் என்பதால் இந்தக் கட்சிகள் தொடர்பில் மக்கள் இன்னும் சந்தேகப்பார்வையுடன் இருப்பதாக ஆய்வு சொல்கிறது.

தேர்தலுக்கு முன்னதாக நடத்தப்பட்டுள்ள இந்த ஆய்வின் உண்மைத்தன்மை எதுவாக இருந்தபோதிலும், மேற்படி கட்சிகளின் கூட்டங்களுக்கு கூடும் மக்கள் கூட்டங்களே அதனை பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் நடக்குமா?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடக்கும் என்று அறிவித்தாலும் வாக்குச்சீட்டுகளை அச்சிட போதியளவு நிதி இன்னமும் கிடைக்கவில்லையென அரச அச்சகர் கங்கானி லியனகே தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.


உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான, வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான நிதி, இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை என அரச அச்சகர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஏப்ரல் 25ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், தபால் மூல வாக்குப்பதிவுகளை, மார்ச் 28ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் அது நடக்கும் நிலையில் இல்லை. இதற்கிடையில், 340 உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார காலம், ஞாயிறு(19) நள்ளிரவுடன் நிறைவடைய உள்ளது. இவை விசேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக சொல்லப்படுகிறது.

முன்னதாக அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் பயன்படுத்திய அனைத்து அரச சொத்துகளையும் வெள்ளிக்கிழமை(17) மாலை 5 மணிக்கு முன்பாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் உறுதியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி வியாழனன்று அரசியல் கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணைக்குழு சந்திக்கவுள்ளது.

தேர்தல் நடத்துவது தொடர்பில் கடந்த வியாழன் தேர்தல் ஆணைக்குழுவில் நடந்த சந்திப்பில் இதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. தேர்தலை நடத்துவதற்குரிய நிதியும் ஒத்துழைப்பும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்காத நிலையில் தேர்தலை பிற்போடுவதைத்தவிர வேறு வழி இல்லையென தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆலோசித்ததாக அறியமுடிந்தது. இதன்போதே தேர்தலை நடத்துவது தொடர்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளின் செயலாளர்களையும் கலந்துரையாடலுக்கு அழைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது.



இதேவேளை, 2021ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளை விரைவில் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 14 நாட்களுக்குள் கணக்கறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

எனினும், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பினை மீறும் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக கருதப்பட மாட்டாது என ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தேர்தலுக்குரிய நிதி ஒதுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுமானால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படும் வாய்ப்பே இல்லையென அரசியல் தகவல்கள் சொல்கின்றன.

### பல வியூகம் வகுக்கும் ரணில்

ஜனாதிபதி ரணில் தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைகளை எடுத்துவரும் அதேசமயம், தனது ஆட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகளையும் திரைமறைவில் மேற்கொண்டுவருகிறார். சர்வதேச நாணய நிதிய உதவி கிடைத்த கையோடு இம்மாத இறுதியில் அமைச்சரவையில் மாற்றமொன்றை செய்யவும் தீர்மானித்துள்ளார் ரணில். அமைச்சரவையில் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு அமைச்சுப்பொறுப்புகளை வழங்க ரணில் தீர்மானித்துள்ளார். மறுபுறம், புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளார். பாதுகாப்புத்துறையை தனது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, அரசுக்கெதிராக நடக்கும் போராட்டங்களை அடக்கி அடுத்த வருடமளவில் தேர்தலுக்கு செல்லலாம் என்பது ரணிலின் கணிப்பு. ஆனால், களத்தில் மக்கள் ஆதரவென்பது பெரும் சரிவை சந்தித்துள்ளதால் அடுத்த வருடமும் தேர்தல் நடக்குமா என்பது சந்தேகமே.

### தேர்தல் ஒத்திவைப்பு வரலாறால் அரசியல் தலைவர்களுக்கு நடந்த கதி - ஓர் பார்வை

1970 மே 27ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் தலைமையிலான ஐக்கிய முன்னணி கூட்டணி அமோக வெற்றியை பதிவுசெய்தது.

இத்தேர்தலில் கூட்டணியாக களமிறங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 91 ஆசனங்களையும், லங்கா சமசமாஜ கட்சி 19 ஆசனங்களையும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 06 ஆசனங்களையும் கைப்பற்றின. இதன்மூலம் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தோடு அரியணையேறினார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தற்போதைய தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் பாராளுமன்ற அரசியல் பயணம்கூட இத்தேர்தல் ஊடாகவே ஆரம்பித்தது. பெலியத்த தொகுதியில் களமிறங்கிய அவர் வெற்றிபெற்று, இளம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற சாதனையோடு சபைக்கு வந்தார்.

இத்தேர்தல் வெற்றியின் பின்னர் ஸ்ரீமா அரசு பல மாற்றங்களை - மறுசீரமைப்புகளை செய்தது. குறிப்பாக, 1972இல் முதலாம் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டது. இது இலங்கை முழுமையாக சுதந்திரமடைய வழிவகுத்தது.

மூடிய பொருளாதாரக் கொள்கை, பஞ்சம் உள்ளிட்ட காரணங்களால் கூட்டணி அரசு, மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்தது. இதனால் 1975இல் நடத்த வேண்டிய பாராளுமன்றத் தேர்தலை ஈராண்டுகளுக்கு இழுத்தடித்தார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க.

ஆனால் நடந்தது என்ன? 1977இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வரலாற்று வெற்றியை பதிவு செய்தது. பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக்கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இழந்தது.

1977 தேர்தல் ஊடாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். கம்பஹா, பியகம தேர்தல் தொகுதியில் களமிறங்கிய அவர் வெற்றிபெற்றார்.

அரசியலமைப்பை மீறும்வகையில் இவ்வாறு தேர்தலை ஒத்திவைக்க நடவடிக்கை எடுத்ததால் சிவில் உரிமைகளைக்கூட இழக்க வேண்டிய நிலைமை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு ஏற்பட்டது. இதனால் 1982இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் போட்டியிட முடியாமல் போனது. சுதந்திரக் கட்சியின் சார்பில் எச்.எஸ்.ஆர்.பி.கொப்பேகடுவ களமிறங்கினார்.

1977இற்கு பிறகு 1989இல்தான் பொதுத்தேர்தல் நடைபெற்றது. சர்வஜன வாக்கெடுப்புமூலம் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஒரு தவணைக்கு நீடித்துக்கொண்டார் ஜே.ஆர்.

( இலங்கையில் நடைபெற்ற முதலாவது சர்வஜன வாக்கெடுப்பு. இது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் உள்ளன. அதன்பின்னர் இதுவரை சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. சந்திரிகா ஆட்சியில் நடத்த முற்பட்டாலும் அது கைவிடப்பட்டது)

ஜே.ஆர். அரசின் இந்த நடவடிக்கை கடும் அதிருப்தி அலைகளை உருவாக்கின. 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இந்த நகர்வு ஏதோவொரு விதத்தில் வழிவகுத்தது. 1994இல் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற்றது.

அதன்பின்னர் சுதந்திரக்கட்சியின் கை ஓங்கியது. 2005இற்கு பின்னர் அக்கட்சி தொடர் வெற்றிகளை பதிவுசெய்தது.

மஹிந்த ராஜபக்ஷ தனக்கு சாதகமான நேரங்களில் கட்டங்கட்டமாக உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைத்தேர்தல்களை நடத்தி, தேர்தலை அரசியல் ஆயுதமாக்கினார். ஆனால், 2014 காலப்பகுதியில் நடைபெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தல் மஹிந்த தரப்புக்கு சிவப்பு எச்சரிக்கையாக அமைந்தது. இறுதியில் 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு வீடு செல்ல நேரிட்டது.

நல்லாட்சியின்போது மாகாண சபைத் தேர்தலை மைத்ரி - ரணில் கூட்டணி இழுத்தடித்தது.

2018இல் நடத்த உள்ளூராட்சித் தேர்தலில் இதற்கு தக்க பதிலடி கிடைத்தது. மொட்டு கட்சி வெற்றிநடை போட்டது.

ஆக, தேர்தல்களை ஒத்திவைப்பதற்கும் தேர்தலை அரசியல் விளையாட்டுப்பொருளாக பயன்படுத்த முற்பட்டவர்களும் தோல்வியடைந்துள்ளனர். ஏதோ ஒரு வகையில் ஆட்சி அதிகாரத்தை என்பதே வரலாறு.

அந்தவகையில், உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தலை இழுத்தடித்து தற்போதைய அரசு ஆறுதல் இன்பத்தை அனுபவித்தாலும், தேர்தலொன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில், அதன் பெறுபேறுகள் மரண வேதனையை தரும் என்பதே கசப்பான உண்மை. ரணிலுக்கு அதில் முக்கிய பாடமொன்றும் இருக்கும்.

**ஆர்.சிவராஜா**
mesivaraj@yahoo.com

## வசந்த முதலிகேவுக்கொரு கடிதம்!




ஆயுபோவன் வசந்த முதலிகே மல்லி. என்னடியப்பு சுகமா இருக்கிறியே எண்டு கேக்க விருப்பந்தான் பேந்தும் உன்ரை சுகத்துக்கு என்ன குறைச்சல் எண்டு போட்டு நான் கேக்கேல்லை கண்டியோ. உண்ணான உன்னை நினைச்சா எனக்குச் சரியான பெருமை ஏன் தெரியுமோ, மகியங்கனையிலை ஒரு வேட்டுவச் சமூகத்தின்ர பரம்பரையிலை வந்த நீ இண்டைக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரா இருக்கிறதை நினைச்சால் ஆருக்குத்தான் பெருமையா இருக்காது. அவர் வேட்டுவத் தலைவர் உருவரிகே திஸ்ஸகாமியும் பெருமையா அவன் பெடி எங்கடை சொந்தம் எல்லே எண்டு பேப்பர்காறருக்கு சொன்னவராம் எல்லே. எத்தினையோ மேட்டுக்குடிகாறர் படிக்கிற இடத்திலை நீ தலைவரா இருந்து வழி நடத்திறது பெரிய விஷயம் அப்பு. அதாலைதான் இந்தக் கடுதாசியை நான் உனக்கு எழுதிறன் கண்டியோ.

அதெல்லாம் கிடக்கட்டும் நீ இப்ப கிட்டத்திலை யாழ்ப்பாணம் போய் அங்கத்தே கம்பஸ் பெடியளையும் உங்களோடை சேர்ந்து ரணிலின்ரை அரசாங்கத்தை கவிழ்க்க வேணும் ஏனென்டால் வரி கூட வாழ்க்கைச் செலவு கூட பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பாவிச்சு அடக்குமுறை கூட எண்டெல்லாம் சொன்னனியாம். அதுகும் உன்னை ஒரு ஆறுமாதம் உந்தச் சட்டத்துக்கு கீழை வைச்சிருந்த படியாலைதான் உந்தச் சட்டம் எவ்வளவு கடுமை எண்டு விளங்குது எண்டபடியால உந்தச் சட்டத்தை பாவிக்கிற ரணிலை வீட்டை எப்படியும் அனுப்ப வேணும் எல்லாரும் ஒண்டா நிண்டு போராடுவம் எண்டும் சொன்னியாம். தம்பி உனக்கு உந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின்ரை வரலாறு தெரியுமோ தெரியேல்லை. முந்தி அவங்கள் குட்டிமணி தங்கத்துரையை உந்தச் சட்டத்துக்கு கீழை அடிச்சு வைச்சு செய்யாத கொடுமை எல்லாம் செய்து கோட்டிலை கொண்ணந்து விடேக்கை அவங்கள் சொன்னது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்குது. இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் எண்டது தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் சட்டம் எண்டு நெச்சுத்தான் பெரும்பான்மை சமூகம் பேசாமல் இருக்குது. ஆனால் எண்டைக்கோ ஒரு நாள் உந்தச் சட்டம் அவைக்கு எதிராகப் பயன்படுத்தேக்கை தான் அவைக்கு உது எவ்வளவு மோசம் எண்டு விளங்கும் எண்டு சொன்னவங்கள். அவங்களை எண்பத்து மூண்டிலை வெலிக்கடைச் சிறையில கண்ணைத் தோண்டி படுகொலை செய்து கிட்டத்தட்ட நாப்பது வாரியம் கழிச்சு அவங்கள் சொன்னது உண்மை எண்டது இப்ப உங்களுக்கு விளங்குது.



உந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் அப்ப ஜனாதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தனவினாலதான் 1979இல கொண்டு வரப்பட்டது. ஆரம்பத்தில தற்காலிகமாகக் கொண்டு வந்த உந்தச் இச்சட்டத்தின் கீழ் ஆரை எண்டானை கைதுசெய்து அவரைப் பயங்கரவாதி எண்டு முத்திரை குத்திறது ஒரு பெரிய உளவியல் சித்திரவதை எண்டதோடை அது கைதுசெய்யப்பட்டுள்ள ஒருத்தற்றை உரிமையளை ஒட்டுமொத்தமா மீறுகிற ஒரு செயல் கண்டியோ. உந்தச் சட்டத்தை கொண்டு வந்த காலத்திலை இருந்து இண்டை வரை எந்த விதமான அடிப்படையும் இல்லாத சந்தேகங்களின்ரை பேரில மாற்றுக் கருத்து உள்ளவர்களை அடக்கிறதுக்கும் அப்பாவியளைக் கைதுசெய்யவுமே பாவிக்கப்படுகுது எண்டது குழந்தைப் பிள்ளைக்கும் விளங்கும்.

உந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் யுத்தம் நடைபெற்ற காலம் முதல் 2009 இல யுத்தம் முடிஞ்ச பிறகும் கூடப் பெருவாரியாத் தமிழர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது எண்டது உனக்குத் தெரியுமோ.

உந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அஞ்சு பத்து வருசங்களுக்கு மேல கன பேர் தடுப்புக்காவலில இருந்து வருகினம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ தடுத்துவைக்கப்பட்ட தமிழ்க் கைதிகள் சிலர் இப்பவும் சிறைத்தண்டனையினைப் பெற்று சிறையில இருக்கினம். உதமாதிரி உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பேந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு கீழான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் சுற்றிவளைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டவை. குற்றமிழைச்சவை எண்டு கண்டறியப்படாத கனபேருக்கு பிணைகூட குடுக்காமல் தாமதிக்கப்பட்டு பல மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டது. உண்ணான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்ரை பாவனை எண்டது இனரீதியானதாக மாற்றப்பட்டு சிறுபான்மைச் சமுதாயங்களுக்கெதிரான ஓர் ஆயுதமாகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது எண்டது உனக்குத் தெரிய வேணும்..

ஆக்கள் சொல்லுகினம் நீ கிட்டத்தட்ட எட்டு வரியமா கம்பசிலை படிச்சுக்கொண்டு உந்த அரசியல் வேலை செய்யிறியாம். அப்ப எட்டு வரியமா நீ இருக்கேக்கை தானே பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு கீழ தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மருத்துவர்கள் எண்டு கைது செய்யப்பட்டவை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தோடை பல முஸ்லிம்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவை. அப்ப எல்லாம் ஏன் உங்கடை அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதை எதிர்த்து குரல் குடுக்கேல்லை, ஆர்ப்பாட்டம் செய்யேல்லை, அரசாங்கத்தைக் கவிழ்க்க வேணும் எண்டு வெளிக்கிடேல்லை. அப்ப நீங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் எண்டது சிறுபான்மைக்கு மட்டுமே எதிரானது பெரும்பான்மைக்கு எதிரானது இல்லை எண்டு நெனச்சிருப்பியள் போல. அதாலதான் அண்டைக்கு சிறுபான்மைச் சமூகம் பாதிக்கப்படேக்கை நீங்கள் எதிர்க்கேல்லை எண்டு சனம் பறையுது....

அங்கை யாழ்ப்பாணம் போன இடத்திலை வடக்கு மக்களின்ரை பிரச்சினைகளை நன்கு அறிவதாகவும் அவைக்கு ஆதரவாக குரல் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேணும் எண்டும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்கவேணும் எண்டும் சொன்னியாம். வடக்கு கிழக்கு மக்களின்ரை முக்கியமான பிரச்சினையே சுய நிர்ணய உரிமையும் காணிப் பிரச்சினையுந்தான். அவைக்கு சொந்தமான காணியளை தொல்பொருள் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அதிகாரசபை எண்டு அரச நிறுவனங்கள் ஆக்கிரமிக்குது. இராணுவம் அவையின்ரை காணியளிலை குடி இருக்குது. அவையின்ரை தொல்பொருள் வரலாற்று இடங்களை எல்லாம் பௌத்த மயமாக்கிற வேலையள் நடக்குது.

உதுக்கு இப்ப கிட்டத்தில் உதாரணமா கன்னியா வெந்நீரூற்றுக்கு நடந்த கதையை உனக்குச் சொல்லலாம். நான் தெரியாமல் கேக்கிறன் நீயோ இல்லாட்டில் உனக்கு பின்புலமா நிக்கிற அரசியல்வாதியளோ உதுக்கு எதிராக் குரல் குடுப்பியளோ தமிழர்களின்ரை சுய நிர்ணய உரிமையை ஆதரிப்பியளோ. நான் அடிச்சுச் சொல்லுவன் சிங்கள பௌத்த பெரும்பான்மை வாக்குகளை நம்பி இருக்கிற நீங்கள் அதுகளை ஒரு நாளும் இழக்க விரும்ப மாட்டியள். அதாலை உங்களாலை உப்பிடியான காணி விசயங்களுக்கு எதிராகவோ பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவோ சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவோ குரல் குடுக்கேலாது கண்டியோ...

உந்தப் பதின்மூண்டை இல்லாமல் செய்ய வேணும் எண்டால் தமிழர்களின்ரை அரசியல் பிரச்சினையைத் தீர்க்க உங்கட முன்மொழிவுதான் என்ன. அதை முன் வைக்காமல் பதின்மூண்டை நிப்பாட்டு நிப்பாட்டு எண்டு இந்தியாவிலை இருக்கிற கோவத்திலை வெப்பியாரத்திலை கத்தினால் சரியே. அதோட இன்னும் ஒண்டு கேக்கவேணும். இப்ப ரணிலின்ரை அரசாங்கத்தைப் பிரட்ட வேணும் எண்டிறியள். சரி பிரட்டுங்கோ அதுக்குப் பிறகு என்ன செய்யப்போறியள் எண்டு ஏதும் திட்டம் இருக்கோ. என்னண்டு அந்நியச் செலாவணியைக் கொண்டு வருவியள், என்னண்டு வரியைக் குறைப்பியள், என்னண்டு வாழ்க்கைச் செலவைக் குறைப்பியள், என்னண்டு கடன் சுமையைக் குறைப்பியள், என்னண்டு உள்நாட்டு உற்பத்தியைக் கூட்டுவியள், என்னண்டு வேலை வாய்ப்பைக் கூட்டுவியள் எண்டு ஏதும் திட்டங்கள் இருக்கோ. சும்மா குளவிக்கூட்டுக்கு கல் எறியிற கோதாரி வேலை செய்ய எண்டு நாண்டு கொண்டு நிக்கிறியள் எண்டது மட்டும் எனக்கு விளங்குது.

ஒண்டு மட்டும் சொல்லுவன் மல்லி, தூர நோக்கு இல்லாத நடைமுறைக்கு உதவாத போராட்டங்களாலை இந்த நாடு எத்தினையோ இரத்தக்களரியளைக் கண்டு எத்தினையோ ஆயிரம் இளஞ்சந்ததியைப் பலிகுடுத்துப் போட்டு நிக்குது. நாடும் இழப்புகளைச் சந்திச்ச குடும்பங்களும் இண்டைக்கும் அதிலை இருந்து மீள எழ முடியாமல் கஷ்டப்படுகினம். அதாலை அப்பு நான் உன்னட்டை மண்டாடிக் கேப்பன் இன்னொரு இரத்தக் களரியைக் கொண்டு வந்து போடாதையுங்கோ. அதுக்குள்ளை எவ்வளவோ இழப்புகளைச் சந்திச்சு எற்பன் மிஞ்சி இருக்கிற வடக்கு, கிழக்கு பெடி பெட்டையளை உங்கடை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கை இழுத்து இருக்கிற மிச்ச சொச்சங்களையும் இல்லாமல் பண்ணிப் போடாதயுங்கோ.

சரியடா மல்லி எனக்கு கொஞ்சம் வேலை இருக்குது எண்ட படியாலை இந்தக் கடுதாசியை இதோட முடிக்கிறன். பேந்து இன்னொரு கடுதாசி ஆறுதலா எழுதிறன் கண்டியோ.

நன்றி
வணக்கம்
இப்படிக்கு பேரம்பலம்

பிற்குறிப்பு : அப்படா மல்லி நீ உந்த ரணிலைத் துரத்திற வரையும் ரஜரட்ட பல்கலைக்கழகத்தில நீ துடங்கின உன்ரை தொல்லியல் துறை படிப்பை முடிக்காமல் உப்படியே கம்பசுக்கை சுத்தப் போறியே. நீ இப்பிடி வரியக்கணக்கா சோதினை பாஸ் பண்ணாமல் சுத்தினால் நீ குறை குறை எண்டு கத்திற எங்கட வரிக் காசுதான் வீணாப் போகும் எண்டு சனம் பறையுது.



# ஆசிரியர் போராட்டம் தொடரும்!

## சொல்கிறார் ஜோசப் ஸ்டாலின்

உரையாடல் - நா.தினுஷா

ஏனைய தொழிற்சங்கங்களின் போராட்டம் நிறைவுக்கு வந்தாலும் ஆசிரியர் சங்கங்களின் போராட்டம் நிறைவுக்கு வராது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர் சங்கங்களினால் கடந்த நாட்களில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையால், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்ததாக பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தார்கள். இதுதொடர்பில் ‘தமிழன்’ வார இதழுக்கு வழங்கிய உரையாடலின்போதே இதனை குறிப்பிட்டார்.

அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,

**கல்வி அமைச்சரின் மாயையான கதைகளை செவிமடுக்கவேண்டிய அவசியம் இல்லை.**

**அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த காலங்களில் தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தினால் பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்திருந்தன. இந்தப் போராட்டத்தில் ஆசிரியர் சங்கம் இணைந்துகொள்வதற்கு அடிப்படை காரணம் என்ன?**

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடே இந்தப் போராட்டத்தில் நாங்கள் கலந்துகொள்வதற்கான அடிப்படை காரணமாக இருந்தது. சம்பள முரண்பாடு தொடர்பில் ஏற்கனவே வழங்கிய - அரசாங்கத்தால் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிவாரணத்தினூடாக தற்போதைய சூழ்நிலையை சமாளிக்க முடியாது. அதன்போது, நாங்கள் கோரிய தொகையில் அரசாங்கம் எங்களுக்கு ஐந்தில் மூன்று பங்குகளையே வழங்கியது.

எனவே, இரண்டாம் கட்டமாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடு தொடர்பில் எங்களால் முன்மொழியப்பட்ட ஏனைய இரண்டு பங்குகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கையாகும். அதனை வழங்கும் வரை 20,000 ரூபா கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றே கோருகிறோம்.

இதற்கப்பால் ஆசிரியர்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆசிரியர் சேவை சிக்கல் போன்ற பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடித் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மறுபுறம், கல்வித்துறையினால் பெற்றோருக்கு பாரிய சுமை ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் அன்றாட செயற்பாடுகளுக்கான கட்டணம், பாடசாலை பராமரிப்புக் கட்டணம், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களினால் பெற்றோர்களின் செலவுகளும் அதிகரித்துள்ளன. இவ்வாறான செலவைக் குறைக்கவேண்டும் என்பதும் எங்களின் கோரிக்கையாகும்.

தற்போது நாட்டில் நிலவும் வருமான நெருக்கடியின் மத்தியில் வங்கிக் கடன் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், பெற்றுக்கொண்ட கடன்களுக்கு அதிக வட்டி செலுத்த நேர்ந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் விரைவான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மேலும், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறையை நிறுத்துதல், ஜனநாயக ரீதியாக நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாமல் காலந்தாழ்த்துதல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இந்த தொழிற்சங்கப் போராட்டத்தில் நாங்கள் இணைந்து கொண்டிருந்தோம்.

**ஏனைய தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட புதிய வருமான வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தார்கள். அவ்வாறிருக்கையில், வருமான வரி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகளில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது?**

ஆசிரியர்களில் ஒருசிலருக்கே இந்த வருமான வரி தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால், வருமான வரிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எங்களின் போராட்டத்துக்கான நோக்கம் அல்ல.

இருந்தபோதும், ஆசிரியர்களும் வருமான வரிக்காகவே போராடுவதாக குறிப்பிட்டு அரசாங்கம் ஒரு மாயையை உருவாக்கி வருகிறது. சகல தொழிற்சங்கங்களும் அவர்களின் தனிப்பட்ட கோரிக்கைகளை ஒரேநாளில் வெளிப்படுத்தியதே சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

ஒரே தினத்தில் நாங்களும் போராட்டம் செய்தமைக்காக ஆசிரியர்களும் வருமான வரிக்காகவே போராட்டம் செய்கிறார்கள் என்ற நிலைப்பாட்டை உருவாக்குவது எங்கள் மீது சேறு பூசும் வகையிலான செயற்பாடாகும்.

**அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியடைந்துள்ளது என்பது உங்களின் நிலைப்பாடாக இருக்கிறது. எதனடிப்படையில் அவ்வாறு கூறுகிறீர்கள்?**

இது எங்களது போராட்டத்தின் ஆரம்பமாகும். இந்தப் போராட்டத்தின் ஆரம்பகட்டமாகவே அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுத்திருந்தோம். இதற்கு முன்னர் மார்ச் மாதம் முதலாம் திகதி கறுப்பு ஆடைகளை அணிந்து எங்களின் போராட்டத்தை நாட்டுக்கு வெளிப்படுத்தியிருந்தோம்.

எனவே, எங்களின் பிரச்சினைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் தீர்வைப் பெற்றுகொடுக்க அரசாங்கம் முன்வராவிட்டால் போராட்டத்தின் அடுத்தகட்டத்துக்குச் செல்லத் தயங்கமாட்டோம். எங்களின் கோரிக்கைகளிலும் போராட்டத்திலும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதே எங்களின் தற்போதைய எண்ணமாகும். கலந்துரையாடலின் பின்னர் பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்காவிட்டால் எங்களின் அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுப்போம். எங்களின் கோரிக்கைகளுக்கு வெற்றி கிடைக்கும்வரை போராட்டத்தைத் தொடர்வோம்.

**ஏனைய தொழிற்சங்கங்களின் போராட்டம் நிறைவுசெய்யப்பட்டாலும் அதிபர்கள், ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பதா உங்களின் நிலைப்பாடு?**

இதற்கு முன்னரும் எங்களின் பிரச்சினைகளுக்கும் கோரிக்கைகளுக்குமான தீர்வுகளை தனியாக போராடியே வென்றெடுத்தோம். இருந்தபோதும், தொழிற்சங்கங்கள் என்ற அடிப்படையிலேயே ஒரே தினத்தில் எங்களின் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தோம். ஏனைய தொழிற்சங்கங்களின் போராட்டம் நிறைவடைந்தாலும், எங்களின் போராட்டம் தொடரும்.

**மாணவர்களை பணயமாக வைத்து தொழிற்சங்கப் போராட்டம் செய்வது உண்மையான வெற்றி அல்ல என்பது கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கருத்தாக இருக்கிறது. இதுதொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெற்ற காலப்பகுதியில், தமக்கு மின்சாரத்தை துண்டிக்காமல் தொடர்ச்சியாக விண்ணப்பிக்க வேண்டும்

**எங்களுக்கு எந்தவொரு அரசியல் பின்னணியும் இல்லை.**

என்பதே மாணவர்களின் கோரிக்கையாக இருந்தது. அவ்வாறு கல்வி அமைச்சருக்கு மாணவர்கள் மீது அவ்வளவு அக்கறை இருந்தால், அதற்கான வசதிகளை செய்துகொடுத்திருக்கலாம். அவர்களின் மாயையான கதைகளை செவிமடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

**நாட்டில் கொரோனா தொற்றுப் பரவல் இருந்த காலப்பகுதியில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பின்னடைவை சந்தித்திருந்தன. பாடத்திட்டங்களும் நிறைவுசெய்யப்படாமல் இருக்கின்றன. அவ்வாறிருக்கையில், இதுபோன்ற ஆசிரியர்களின் போராட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் மாணவர்களின் பாடத்திட்டத்தில் மேலும் பாதிப்பை செலுத்துமல்லவா?**

கொரோனா தொற்றுக் காலத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக அநேகமான

**வருமான வரிக்காக நாங்கள் போராடவில்லை. எங்களின் பிரச்சினைகளுக்காகவே வீதிக்கு இறங்கினோம்.**

வாய்ப்புகள் கல்வி அமைச்சுக்கு இருந்தது. ஒன்லைன் முறையினூடாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் அது 35 சதவீதமே சாதகத்தன்மையை பெற்றுக்கொடுத்திருந்தது. அந்த காலப்பகுதியில் நாட்டில் மாணவர்களின் கல்வி மாத்திரமே பாதிப்புக்குள்ளாகியது.

இதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். கடந்த வருடம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்ததற்கு பிரதான காரணம் அரசாங்கத்தின் செயற்பாடுகளாகும். எரிபொருள் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களே கடந்த வருடம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும்.

**உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், விடைத்தாள் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் பின்னடைவை சந்தித்துள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்தப் பிரச்சினையின் தற்போதைய நிலை என்ன?**

விரிவுரையாளர்களின் போராட்டத்தின் காரணமாகவே விடைத்தாள் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் காலந்தாழ்த்தப்பட்டிருந்தன. அதிகமான ஆசிரியர்கள் மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் பங்குப்பற்றாமைக்குக் காரணம், கொடுப்பனவு பற்றாக்குறையாகும்.

கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்திருந்தார். அந்த அமைச்சரவைப் பத்திரத்தினூடாக 3,000 ரூபாவுக்கு அனுமதியை பெற்றுக்கொடுப்பதாக குறிப்பிட்டுவிட்டு, அதனை 2,000 ரூபாவுக்கு மாற்றியதே எங்களின் பிரச்சினையாகும்.

**இந்தச் செயற்பாடுகளினால் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கூறப்படுகின்றதே?**

சாதாரண தரப் பரீட்சை காலதாமதமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும். கடந்த வருடம் இடம்பெறவிருந்த உயர்தரப் பரீட்சையை தற்போது நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பரீட்சைகள் காலதாமதமானமைக்கு முக்கிய காரணம் அரசாங்கமாகும். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணாமையினாலேயே பரீட்சைகளும் காலதாமதமாகி வருகின்றன. இந்த விடயங்களுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்காமையின் காரணமாகவே பிரச்சினைகளும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

**உங்களின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சக்தி, முன்னிலை சோஷலிச கட்சி போன்ற அரசியல் கட்சிகள் செயற்படுவதாக சில கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இதனால் கல்வித்துறையில் அரசியல் செல்வாக்கு செலுத்துமல்லவா? மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பும் இருக்கிறதல்லவா?**

நாங்கள் சுதந்திரமாக செயற்பட்டுவரும் ஒரு தொழிற்சங்கம். எங்களின் சங்கம் 1957ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இலங்கையில் தற்போது இருக்கும் சங்கங்களில் பழமையான சங்கமாகவும் செயற்பட்டு வருகிறோம். நாடு முழுவதும் இயங்கி வருகிறோம்.

எங்களுக்கு எந்தவொரு அரசியல் பின்னணியும் இல்லை. நாங்கள் எந்தவொரு அரசியல் கட்சியையும் நம்பி இல்லை. அவர்களின் வால்களும் அல்ல. அவர்களின் கொள்கைகளை நிறைவேற்றும் தொழிற்சங்கமும் அல்ல. அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதற்காகவே செயற்பட்டு வருகின்றோம்.

## ஆசிரியர்களின் சமூகப் பொறுப்பு என்னவென்பது கேள்விக்குறியே!



மாணவர்களுக்குரிய பாடசாலை தினத்திலிருந்து முழுமையாக நீங்கி அதனூடாக பெருமை கொள்கிறார்கள் என்றால், அவர்களின் சமூகப் பொறுப்பு என்னவென்பது கேள்விக்குறியாகும். தரவு அறிக்கைகளின் பிரகாரம் கொவிட் - 19 தொற்றுப்பரவல் அச்சுறுத்தலின் காரணமாக 2020, 2021ஆம் ஆண்டுகளில் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக மூன்று வருடங்களில் மாணவர்களின் திறன்விருத்தி குறித்தே தற்போது பேச வேண்டியிருக்கின்றது - என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மாணவர்களின் திறன்விருத்தி குறைவடைந்துள்ள இடங்களில், இனிவரும் வருடங்களில் அதனை எவ்வாறு விருத்தி செய்வது என்பது பாரிய சவாலாகும். பாடசாலைகளை மூடிவிட்டு இதனைச் செய்ய முடியாது. அதன் காரணமாகவே, வருடாந்த கல்வி தினங்களுக்கும் அப்பால் விடுமுறை தினங்களை குறைத்துவிட்டு கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழிற்சங்கங்களின் ஆதிக்கம் எதிர்வரும் தினத்தில் இவற்றை அவர்களே சரிசெய்துகொள்வார்கள் என்றே கருதுகிறேன். அதன்போது காலமும் கடந்திருக்கும்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீளாய்வு செய்யும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை அதிகரித்திருக்கிறோம். அதற்காக 400 மில்லியன் ரூபாவுக்கும் அதிக நிதியை தேடவேண்டி ஏற்பட்டது. அதேபோன்று, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களின் கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பான அறிவிப்பையும் பரீட்சை ஆணையாளர் வெளியிட்டிருக்கிறார். விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களின் மேலதிக கொடுப்பனவை செலுத்துவதற்காக மேலதிகமாக 16 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இந்த அனைத்து விடயங்களையும் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டே முன்னெடுத்து வருகின்றோம். எனவே, மாணவர்களின் எதிர்காலத்துக்காக அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

மாணவர்கள், பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் அர்ப்பணிப்புடன் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். அவர்களிடமும் பணம் இல்லை. மின்சாரம் இல்லாமல், உணவு இல்லாமல், மேலதிக வகுப்புகளுக்குச் சென்றே அவர்களும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இந்தப் பிரச்சினை அனைவருக்கும் இருக்கிறது. சிறிதுகாலம் இந்த நிலைமை இருக்கும். இதனை தாங்கிக்கொண்டே எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இருந்தபோதும் நிலைமை சீராகி வருகிறது. எனவே, நாம் அதற்கு பழகிக்கொள்ள வேண்டும். சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்பது இயலாத விடயம்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருக்கின்றன.

விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்தச் செயற்பாடுகளில் இணைந்துகொண்டதன் பின்னர் உடனடியாக மதிப்பீட்டுச் செயற்பாடுகள் ஆரம்பமாகும். அதற்கான செயற்பாடுகளை பரீட்சைகள் திணைக்களம் செய்துவருகின்றது. கல்விக்கு ஏற்படும் இழப்பை மதிப்பீடு செய்ய முடியாது. அந்தளவு கல்வி முக்கியம் வாய்ந்தது. இதனை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# வேலை நிறுத்தங்களால் அடங்கிப்போகுமா அரசாங்கம்?



**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**

நாட்டிலுள்ள பல்வேறு துறைகளையும் சேர்ந்த 47 தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் திட்டமிட்டபடி 2023 மார்ச் 15ஆம் திகதி புதனன்று இடம்பெற்றது. இந்த வேலைநிறுத்தம் காரணமாக பாடசாலைகள் இயங்கவில்லை. துறைமுகம், புகையிரதம், சுகாதாரம், தபால் உட்பட ஏராளமான சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரிக் கொள்கை, அதிகரித்துச் செல்லும் வங்கி வட்டி வீதம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது. அரசாங்கம் உடனடியாக தலையிட்டு தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து உரிய தீர்வுகளை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக இந்த பொது வேலைநிறுத்தம் தொழிற்சங்கங்களால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது.

ஆனாலும் இந்த வேலைநிறுத்தம் வெற்றியளிக்கவில்லை என்பது ஆளுந்தரப்பு அமைச்சர்களது கருத்தாகும். இந்த வேலைநிறுத்தமானது அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளி பதவி கவிழ்ப்பதற்கான ஒரு சதி நாடகமாகும் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த வேலைநிறுத்தத்தின் பின்னால் ஜே.வி.பி. மற்றும் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜன பலவேகய போன்ற அரசியல் கட்சிகள் இருந்து செயற்படுவதாக ஆளுந்தரப்பு கதைகளைப் பரப்பி வேலைநிறுத்தத்திற்கு எதிராக மக்களைத் தூண்டும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதேநேரம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினர்களும் ஏற்பாடுசெய்த தொழிற்சங்கங்களும் அரசாங்கம் உரியமுறையில் கவனம் செலுத்தத் தவறினால் அடுத்த வாரம் மீண்டும் தொடர்ச்சியாக வேலைநிறுத்தத்தை ஆரம்பிப்போம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக, இத்தகைய வேலைநிறுத்தம் ஒன்றை ஏற்பாடுசெய்ய பிரதான காரணமாக அமைந்திருப்பது உழைக்கும்போது பெறும் ஊதியத்திற்கு செலுத்தவேண்டிய வரியாகும். அதற்கு மேலதிகமாக முன்வைக்கப்பட்டுள்ள காரணங்களாக அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை போன்ற விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

எதுவானாலும் அரசாங்கம் எந்தளவுக்கு கரிசனை காட்டி உழைக்கும் பாட்டாளி மக்களும் பொதுமக்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டில் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. காரணம், வரி அதிகரிப்பானது சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள நிபந்தனைக்கமைவாக செய்யப்பட்டிருப்பதாகும். மின்சாரக் கட்டண அதிகரிப்பும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின்பேரில் செய்யப்பட்டுள்ள முன்நிபந்தனை நிறைவேற்றமாகும். அதனால் அரசாங்கம் இந்த விடயத்தில் முன்னால் வைத்துள்ள நகர்வை பின்னோக்கி எடுப்பதற்கு தயாராக இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நிதி அமைச்சின் அறிக்கையொன்றின்படி இந்த வேலைநிறுத்தம் நடைபெற்ற 15ஆம் திகதி மாத்திரம் 460 கோடி ரூபா அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்று அறிய முடிகின்றது. தினமும் நாட்டில் பல்வேறு துறைகளிலிருந்தும் 1000 கோடி ரூபா அளவில் வருமானம் கிடைத்து வருகின்றது. துறைமுகம், பெற்றோலியம், சுகாதாரம், தபால், புகையிரதம், போக்குவரத்து மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற துறைகளே அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய துறைகளாகும். வேலைநிறுத்தம் என்று வரும்போது இத்தகைய துறைகள் ஸ்தம்பிதமடையும்போது இவ்வாறான பாரிய இழப்புகளை அரசாங்கம் சந்திக்க நேரிடுகின்றது.

ஆனாலும் இந்த வேலைநிறுத்தம் அரசாங்கத்திற்கு ஒரு சவாலாக இருந்ததாக அல்லது பாதிப்பை ஏற்படுத்தியதாக காட்டிக்கொள்ள அரச தரப்பு விரும்பவில்லை. அத்துடன், கோரிக்கைகளையும் கண்டும் காணாமல் இருப்பதாகவே தெரிகின்றது. எவ்வாறோ அமைச்சர்களின் கருத்துப்படி தற்போது நாடு பொருளாதார நெருக்கடியொன்றை சந்திக்கின்ற நிலையில் வேலைநிறுத்தம், அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதென்பது எற்தவகையிலும் பொருத்தமில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அண்ணளவாக 95,000 கோடி ரூபாவை ஆரம்பகட்ட கடனாக எதிர்பார்த்திருக்கின்ற நிலையில், அரசாங்கத்திற்கு இவ்வாறானதோர் அழுத்தம் கொடுப்பதை அரசாங்கம் ஒருபோதும் விரும்பவில்லை.

ஏற்கனவே சரிவடைந்திருந்த பொருளாதார நிலை ஓரளவுக்கு ஸ்திரமடைந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிக்கின்றார். முழுமையாக சரிவடைந்திருந்த இலங்கை மத்திய வங்கியின் சிறப்பெடுப்பு ஒதுக்கு (SDR) 2121 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் 2127 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் அதிகரித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

104 பில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருப்பது தற்போது நாட்டின் பொருளாதாரம் வழமைக்குத் திரும்புவதை காட்டுவதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த ஐக்கிய அமெரிக்க டொலர்களிலான எஸ்.டி.ஆர். முழுமையாக வீழ்ச்சி கண்டமையே நாட்டில் டொலருக்கான பற்றாக்குறை ஏற்பட்டு இறக்குமதிகள் பாதிக்கப்படவும் உள்நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்தன.

ஆனாலும் கடந்த வாரம் மிக வேகமாக சரிவடைந்த அமெரிக்க டொலரின் பெறுமதி மீண்டும் உயர்வடைய ஆரம்பித்திருக்கின்றது. திடீரென அமெரிக்க டொலரின் மதிப்பு குறைவடைந்ததோடுm தங்கத்தின் விலையிலும் திடீர் சரிவு ஏற்பட்டது. இருந்தாலும் நிதிச் சந்தையில் அமெரிக்க டொலரை கொள்வனவு செய்ய முடியவில்லை. 305 ரூபா வரையில் வீழ்ச்சி கண்ட அமெரிக்க டொலர் ஒன்றின் விலை மீண்டும் 346 ரூபா வரையில் உயர்வடைந்து ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி கண்டு வருகின்றது. அவ்வாறே தங்கத்தின் விலை குறைவடைந்தபோதும் சந்தையில் வியாபாரிகள் தங்கத்தை விற்பனைசெய்ய தயாராக இருக்கவில்லை. அதனால் குறைந்த விலைக்கு தங்கத்தை நகைக்கடைகளில் வாங்குவதென்பது குதிரைக் கொம்பாகவே காணப்பட்டது. அத்துடன், இந்த நிலைமைகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் நந்தலால் வீரசேகர கருத்து வெளியிடுகையில், இவ்வருட இறுதிக்குள் பண வீக்கத்தை தற்போது இருக்கின்ற 58 வீதத்திலிருந்து 5 வீதம் வரையில் குறைக்க முடியும். ஆனால், அதற்கு சாதகமான சூழ்நிலைகள் நாட்டில் ஏற்பட வேண்டும். இது போன்ற பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வேலைநிறுத்தங்கள் மற்றும் செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

எவ்வாறோ அரசாங்கம் தன் போக்கில் செல்லாது நாட்டில் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள், வேண்டுகோள்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து நெருக்கடிகளைத் தீர்க்கும் மனப்பக்குவத்துடன் செயற்பட வேண்டும். இந்நிலையில், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் தொடர்கின்றது. அதனால் க.பொ.த (உ.தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் வேலைகள் தடைப்பட்டிருக்கின்றது. இந்தத் தடையால் அடுத்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா.தர) பரீட்சை மேலும் இரண்டு வாரங்களுக்காவது பின்போடப்படும் நிலைமை ஏற்படலாம். இது குறித்து கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிக்கையில், கல்வி தொழிற்சங்கங்கள் நாட்டில் கல்வி கற்கின்ற குழந்தைகளின் நலனில் அக்கறை இல்லை என்றும் கொஞ்சம் கூட கருணையற்ற முறையில் செயற்பட்டு கல்வி நடவடிக்கைகளை பாதிப்படையச் செய்துள்ளன என்றும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒரே பார்வையில் இது ஓர் உண்மையாக இருக்கலாம். நாட்டு மக்களின் அனுதாபத்தை அரசாங்கத்தின் பக்கம் திசை திருப்பும் செயலாகவும் அமையலாம். ஆனாலும் க.பொ.த. (உ.தர) பரீட்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அரசாங்கமும் இவ்வாறுதான் மிகவும் மோசமான முறையில் நடந்துகொண்டதையும் மறந்து விட முடியாது. மக்கள், தொழிற்சங்கங்கள், உயர் நீதிமன்றம் என்பன வேண்டுகோள் விடுத்தும் அதை துச்சமாக மதித்த நிலையில் உயர் தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் பற்றி வகனத்தில் எடுக்காமல் இரவுநேரங்களில் மின்சார துண்டிப்பை மேற்கொண்டு வந்தது. அப்போது மாணவர்கள் பற்றிய அனுதாபமும் கவலையும் மின்சக்தி அமைச்சருக்கோ கல்வி அமைச்சருக்கோ ஏற்படவில்லை. அதுபற்றி அரசாங்கத்தை எச்சரிக்கவும் வேறெந்த அமைச்சர்களும் முன்வரவில்லை. அப்போது இல்லாத அக்கறை மாணவர்கள் குறித்து இப்போது ஏற்பட்டிருக்கின்றது.


இவ்வாறான ஒரு சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான நிதி விடுவிப்பு தொடர்பாகவும் இதுவரையில் எந்தவிதமான உறுதியான நடவடிக்கைகளும் அரசாங்க தரப்பிலிருந்து கிடைத்தாக இல்லை. தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தபால் மூல வாக்குச்சீட்டு அச்சிடல் உட்பட ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிதி குறித்து நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் எழுதி இருக்கின்றார். ஆனாலும் இதுவரையில் நிதி அமைச்சின் பதில் எதுவும் தேர்தல் ஆணைகுழுவுக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில், தேர்தல் குறித்து அடுத்து என்ன செய்வதென்பது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு எதிர்வரும் 23ஆம் திகதி வியாழன் காலை 10 மணிக்கு வருமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். அன்றைய தினம் ஏப்ரல் மாதம் திட்டமிடப்பட்டுள்ள 25ஆம் திகதி தேர்தல் நடத்துவதா அல்லது பின்போடும் நிலை எற்படுமா என்று கலந்துரையாடல் இடம் பெறலாம். அவ்வாறே 1984ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (4) அ உறுப்புரைக்கமைய பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் அவற்றின் செலவு விபரங்கள் தொடர்பான கணக்கு அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவேண்டி இருந்தாலும் இதுவரையில் அத்தகைய கணக்கு விபரங்களை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளுக்கு அவற்றின் கணக்கு களுடன் வருமாறும் கடிதம் மூலம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

2021ஆம் ஆண்டுக்கான தமது கட்சியின் வரவு-செலவு விபரங்கள் அடங்கிய கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்க 14 நாட்கள் வரை கால அவகாசம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## நான் பார்வையற்றவனாய் இருந்தேன்; பார்வை பெற்றுத் திரும்பினேன்....

### தவக்கால சிந்தனை




அக்காலத்தில் இயேசு சென்றுகொண்டிருக்கும்போது பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். “ரபி, இவர் பார்வையற்றவராய் பிறக்கக் காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா?” என்று இயேசுவின் சீடர்கள் அவரிடம் கேட்டார்கள். அவர் மறுமொழியாக, “இவர் செய்த பாவமும் அல்ல; இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல; கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தார். பகலாய் இருக்கும் வரை என்னை அனுப்பியவரின் செயலை நாம் செய்யவேண்டியிருக்கிறது. இரவு வருகிறது; அப்போது யாரும் செயலாற்ற இயலாது. நான் உலகில் இருக்கும் வரை நானே உலகின் ஒளி” என்றார். இவ்வாறு கூறியபின் அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச்சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி, “நீர் சிலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்” என்றார். சிலோவாம் என்பதற்கு ‘அனுப்பப்பட்டவர்’ என்பது பொருள். அவரும் போய்க் கழுவி, பார்வை பெற்றுத் திரும்பி வந்தார். அக்கம்பக்கத்தாரும், அவர் பிச்சையெடுத்துக்கொண்டிருந்ததை முன்பு பார்த்திருந்தோரும், “இங்கே அமர்ந்து பிச்சையெடுத்துக்கொண்டிருந்தவர் இவர் அல்லவா?” என்று பேசிக்கொண்டனர். சிலர், “அவரே” என்றனர்; வேறு சிலர், “அவரல்ல; அவரைப்போல் இவரும் இருக்கிறார்” என்றனர். ஆனால், பார்வை பெற்றவர், “நான்தான் அவன்” என்றார். அவர்கள், “உமக்கு எப்படிப் பார்வை கிடைத்தது?” என்று அவரிடம் கேட்டார்கள். அவர் அவர்களைப் பார்த்து, “இயேசு எனப்படும் மனிதர் சேறு உண்டாக்கி, என் கண்களில் பூசி, ‘‘சிலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்’’ என்றார். நானும் போய்க் கழுவினேன்; பார்வை கிடைத்தது” என்றார். “அவர் எங்கே?” என்று அவர்கள் கேட்டார்கள். பார்வை பெற்றவர், “எனக்குத் தெரியாது” என்றார். முன்பு பார்வையற்றவராய் இருந்த அவரை அவர்கள் பரிசேயரிடம் கூட்டி வந்தார்கள். இயேசு சேறு உண்டாக்கி அவருக்குப் பார்வை அளித்த நாள் ஓர் ஓய்வுநாள். எனவே, “எப்படிப் பார்வை பெற்றாய்?” எனும் அதே கேள்வியைப் பரிசேயரும் கேட்டனர். அதற்கு அவர், “இயேசு என் கண்களில் சேறு பூசினார்; பின் நான் கண்களைக் கழுவினேன்; இப்போது என்னால் பார்க்க முடிகிறது” என்றார். பரிசேயருள் சிலர், “ஓய்வுநாள் சட்டத்தைக் கடைப்பிடிக்காத இந்த ஆள் கடவுளிடமிருந்து வந்திருக்க முடியாது” என்று பேசிக்கொண்டனர். ஆனால், வேறு சிலர், “பாவியான ஒரு மனிதரால் இத்தகைய அரும் அடையாளங்களைச் செய்ய இயலுமா?” எனக் கேட்டனர். இவ்வாறு அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்கள் பார்வையற்றிருந்தவரிடம், “உனக்குப் பார்வை அளித்த அந்த ஆளைக் குறித்து நீ என்ன சொல்கிறாய்?” என்று மீண்டும் கேட்டனர். “அவர் ஓர் இறைவாக்கினர்” என்றார் பார்வை பெற்றவர். அவர் பார்வையற்றிருந்து இப்போது பார்வை பெற்றுள்ளார் என்பதை அவருடைய பெற்றோரைக் கூப்பிட்டுக் கேட்கும்வரை யூதர்கள் நம்பவில்லை. “பிறவியிலேயே பார்வையற்றிருந்தான் என நீங்கள் கூறும் உங்கள் மகன் இவன்தானா? இப்போது இவனுக்கு எப்படிக் கண் தெரிகிறது?” என்று கேட்டார்கள். அவருடைய பெற்றோர் மறுமொழியாக, “இவன் எங்களுடைய மகன்தான். இவன் பிறவியிலேயே பார்வையற்றவன்தான். ஆனால், இப்போது எப்படி அவனுக்குக் கண் தெரிகிறது என்பதோ யார் அவனுக்குப் பார்வை அளித்தார் என்பதோ எங்களுக்குத் தெரியாது. அவனிடமே கேளுங்கள். அவன் வயது வந்தவன்தானே. நடந்ததை அவனே சொல்லட்டும்” என்றனர். யூதர்களுக்கு அஞ்சியதால்தான் அவருடைய பெற்றோர் இப்படிக் கூறினர். ஏனெனில், இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ளும் எவரையும் தொழுகைக் கூடத்திலிருந்து விலக்கிவிட வேண்டும் என்று யூதர்கள் ஏற்கெனவே தங்களிடையே உடன்பாடு செய்திருந்தார்கள். அதனால் அவருடைய பெற்றோர், “அவன் வயது வந்தவன்தானே! அவனிடமே கேட்டுக்கொள்ளுங்கள்” என்றனர். பார்வையற்றிருந்தவரை யூதர்கள் இரண்டாம் முறையாகக் கூப்பிட்டு அவரிடம், “உண்மையைச் சொல்லிக் கடவுளை மாட்சிப்படுத்து. இம்மனிதன் ஒரு பாவி என்பது எங்களுக்குத் தெரியும்” என்றனர். பார்வை பெற்றவர் மறுமொழியாக, “அவர் பாவியா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும்: நான் பார்வையற்றவனாய் இருந்தேன்; இப்போது பார்வை பெற்றுள்ளேன்” என்றார். அவர்கள் அவரிடம், “அவன் உனக்கு என்ன செய்தான்? எப்படிப் பார்வை அளித்தான்?” என்று கேட்டார்கள். அவர் மறுமொழியாக, “ஏற்கனவே நான் உங்களிடம் சொன்னேன். அப்போது நீங்கள் கேட்கவில்லை. இப்போது மீண்டும் ஏன் கேட்க விரும்புகிறீர்கள்? ஒருவேளை நீங்களும் அவருடைய சீடர்கள் ஆக விரும்புகிறீர்களோ?” என்று கேட்டார். அவர்கள் அவரைப் பழித்து, “நீ அந்த ஆளுடைய சீடனாக இரு. நாங்கள் மோசேயின் சீடர்கள். மோசேயோடு கடவுள் பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும்; இவன் எங்கிருந்து வந்தான் என்பதே தெரியாது” என்றார்கள். அதற்கு அவர், “இது வியப்பாய் இல்லையா? எனக்குப் பார்வை அளித்திருக்கிறார்; அப்படியிருந்தும் அவர் எங்கிருந்து வந்தவர் எனத் தெரியாது என்கிறீர்களே! பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை; இறைப்பற்று உடையவராய்க் கடவுளின் திருவுளப்படி நடப்பவருக்கே அவர் செவிசாய்க்கிறார் என்பது நமக்குத் தெரியும். பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒருவர் பார்வை பெற்றதாக வரலாறே இல்லையே! இவர் கடவுளிடமிருந்து வராதவர் என்றால் இவரால் எதுவுமே செய்திருக்க இயலாது” என்றார். அவர்கள் அவரைப் பார்த்து, “பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்குக் கற்றுத்தருகிறாய்?” என்று சொல்லி அவரை வெளியே தள்ளினர். யூதர்கள் அவரை வெளியே தள்ளிவிட்டதைப்பற்றி இயேசு கேள்விப்பட்டார்; பின் அவரைக் கண்டபோது, “மானிட மகனிடம் நீர் நம்பிக்கை கொள்கிறீரா?” என்று கேட்டார். அவர் மறுமொழியாக, “ஐயா, அவர் யார்? சொல்லும்.

அப்போது நானும் அவரிடம் நம்பிக்கை கொள்வேன்” என்றார். இயேசு அவரிடம், “நீர் அவரைப் பார்த்திருக்கிறீர்! உம்மோடு பேசிக்கொண்டிருப்பவரே அவர்” என்றார். அவர், “ஆண்டவரே, நம்பிக்கை கொள்கிறேன்” என்று கூறி அவரை வணங்கினார்.



# காணாமல்போன மாகாண சபைத் தேர்தல்!



- பா.அரியநேத்திரன்

இன்று மார்ச் 19 நள்ளிரவுடன் இலங்கையில் உள்ள 341 உள்ளூராட்சி சபைகளுக்கான அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளின் கைகளிலிருந்து உள்ளூராட்சி விசேட ஆணையாளர்களின் கைகளுக்கு முழுமையாகச் செல்கிறது.

ஏற்கனவே மாகாண சபைகளின் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளின் கைகளிலிருந்து ஆளுநர்களின் கைகளுக்குச் சென்றுவிட்டது.

வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வை கருத்திற்கொண்டே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கடந்த 1987, ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்தானது.

தற்போது இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 36 வருடங்களை அண்மித்துள்ளது. இந்த 36 வருடத்தில் வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாகாண சபைத் தேர்தல் 1988இலும், கிழக்கு மாகாணத்தில் இரண்டு மாகாண சபைத் தேர்தல்கள் 2008, 2012இலும், வடமாகாணத்தில் ஒரு மாகாண சபைத் தேர்தல் 2013இலும் மட்டுமே நடந்துள்ளது. இறுதியாக வடமாகாண சபை கலைக்கப்பட்டது 2018 ஒக்டோபர் 8இல். கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது 2017, செப்டெம்பர் 30இல். ஏறக்குறைய 6 வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்கில் மாகாண சபை அதிகாரம் ஆளுநர்களிடம் சென்றுவிட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் சுருக்கம் இதுதான். இந்தியக் குடியரசின் பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி.ஜே,ஆர். ஜயவர்தனவும் 1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி கொழும்பில் சந்தித்தார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவை ஆதரித்துத் தீவிரப்படுத்தி மேலும் வலுப்படுத்துவதின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கும் அதன் விளைவான வன்செயல்களுக்கும் தீர்வு காணவேண்டியதன் தவிர்க்க முடியாத அவசியத்தையும் இலங்கையிலுள்ள சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களின் பாதுகாப்பு, நலன்புரி நடவடிக்கைகள், சுபீட்சம் ஆகியவற்றை உணர்ந்தும், இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பின்வரும் உடன்படிக்கையை அந்த தினத்தில் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

1. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க விரும்பி,
2. இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோரைக்கொண்ட பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து,
3. மிகக் கவனமாகப் பேணிக் காப்பாற்றவேண்டிய தனித்தனிக் கலாசாரம்,மொழி அடையாளங்களை ஒவ்வொரு இனமும் கொண்டுள்ளதென்பதையும்,
4. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்துவரும் இலங்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப்பூர்வமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கீகரித்து,
5. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சகல பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றி வாழும் பல இன, பல மொழி பேசும் பல மதங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையைப் பேணி, பின்வரும் உடன்பாட்டிற்கு வருகிறோம் என இருவரும் தெரிவித்தனர் அவை:

1. இலங்கை அரசாங்கம் அருகருகேயுள்ள மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாகச் சேர்த்துக்கொள்ள கருதும் கீழ் விவரிக்கப்பட்டவாறு வடக்கு, கிழக்கு என்று அவற்றைப் பிரிக்கும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவது என்றும்,
2. மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் திகதியிலிருந்து 3இல் தெரிவிக்கப்பட்டவாறு சர்வஜன வாக்குரிமை நடத்துவது திகதிவரையான காலப்பகுதி இடைக்காலப் பகுதியென்று கருதப்படும்.

8ஆம் வாசகத்திற்கமைய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தற்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாண சபையை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகாக இருக்கும். இத்தகைய அலகில் ஓர் ஆளுநர், ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவை ஆகியன செயற்படும்.

இவ்வாறு அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்த ஒப்பந்தம் 1987 ஜூலை 29இல், அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முகமாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை அரச தலைவர் ஜெயவர்தனாவிற்கும் இடையில் கொழும்பு நகரில் கையெழுத்திடப்பட்டது.

இதனை அமுல்படுத்தும் வகையில் 1987 நவம்பர் 14இல் இலங்கை நாடாளுமன்றம் 1978 அரசமைப்புச் சட்டத்திற்கு 13ஆவது திருத்தத்தை அறிவித்து, இல. 42 மாகாண சபை சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியது.

13ஆவது திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டு சரியாக ஐந்து தினங்களால் முதலாவது இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றது. இந்தத் தேர்தலையும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் விடுதலைப் புலிகள் நிராகரித்தனர், அதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. 1988 நவம்பர் 19ஆம் திகதி வடக்கு கிழக்கிலிருந்து 71 உறுப்பினர்கள் தெரிவானார்கள்.

இந்தத் தேர்தல் இந்திய அமைதிப்படையின் கண்காணிப்பில் இடம்பெற்றது. இந்தியப் படையால் எந்த கட்சி ஆட்சியமைக்க வேண்டும் என்பதை அவர்களே தீர்மானித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எவ்) கட்சியை ஆட்சியில் அமர்த்தினர்.

அதன்படி வடக்கு, கிழக்கில்.

1. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - 41 ஆசனங்கள்.
2. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 17 ஆசனங்கள்.
3. ஐக்கிய தேசியக் கட்சி - 01 ஆசனம்.
4. ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி - (ஈஎன்டிஎல்எவ்) 12 ஆசனங்கள்.

மொத்தம் 71ஆசனங்கள். இதில் 12 ஆசனங்களைப்பெற்ற ஈஎன்டிஎல்எவ் எதிர்க்கட்சியாகவும் ஏனைய கட்சிகள் ஆளும் தரப்பாகவும் இந்தியாவின் பின்னணியில்

> **பிரதமர் ரணில், ஜனாதிபதி மைத்ரியின் பேச்சுகளை மிக நம்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஊட்டும் விதமாக காலக்கெடுவை விதித்தனர். இதனால் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்தனர் என்பது நிரூபணமானது.**

மாகாண ஆட்சி இடம்பெற்றது. முதலமைச்சராக வரதராஜப்பெருமாள் பட்டு வேட்டி சால்வை அணிந்து பதவிப்பிரமாணம் செய்தார்.

1988 டிசம்பர் 10இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் அ. வரதராஜப்பெருமாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சரானார். அவரின் ஆட்சி இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை 1 வருடம் 2 மாதம் 21 நாட்கள் மட்டுமே இயங்கியது என்பது வேறு கதை. 1990, மார்ச்சு 1 அன்று, இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையை விட்டுப் புறப்படும் தறுவாயில், வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் மாகாண சபைக் கூட்டத்தில் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்திய அமைதிப் படையினருடன் சேர்ந்து இந்தியா சென்றார்.

ஜனாதிபதி பிரேமதாச மாகாண சபையைக் கலைத்து, மத்திய அரசின் நேரடி ஆட்சியைக் கொண்டுவந்தார். 1990 தொடக்கம் 2008 வரை 18 வருடங்களும் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒரு ஆளுநரின் அதிகாரத்திலிருந்து பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாண சபை எனும் பெயரில் நிதி ஒதுக்கப்பட்ட வரலாறுகள் உள்ளன.

2006, ஜூலை 14இல் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராக சிங்களத் தேசியவாத அரசியல் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. 2006 ஒக்டோபர் 16 இல் வடக்கு - கிழக்கு இணைப்பு செல்லுபடியாகாதென உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணமாக வரலாற்று ரீதியாக தொடர்ச்சியாக வாழ்ந்துவந்தோம். அதை பிரிக்க வேண்டாம் என நீதிமன்றில் சாட்சியமளிக்க கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தமிழரையும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஒரு தமிழரையும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஒரு தமிழரையும் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த மட்டக்களப்பு பா.அரியநேத்திரன், திருகோணமலை க.துரை ரெட்ணசிங்கம் ஆகிய இருவரும் கிழக்கிலிருந்து இரகசியமாக அவர்களை கொழும்பு நீதிமன்றுக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த வழக்கில் வாதாடிய சிரேஷ்ட சட்டத்தரணி கனகேஸ்வரன், கிழக்கு மாகாணத்திலிருந்து தமது பக்க நியாயத்தைக் கூறவுள்ளனர். அதற்கு அனுமதி தருமாறு நீதவானிடம் கேட்டார். நீதவானாக இருந்த சரத் டி சில்வா கிழக்கு மாகாணத்திலிருந்து நாம் அழைத்துச் சென்றவர்களின் வாக்குமூலத்தை ஏற்க அனுமதி கொடுக்கவில்லை. ஒருபக்க கருத்தை மட்டும் ஏற்று 2007 ஜனவரி 1இல் இரு மாகாணங்களும் மீண்டும் பிரிக்கப்பட்டன.

இந்தத் தீர்ப்பு வெளியாகிய கையோடு அவசர அவசரமாக கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2008ஆம் ஆண்டில் இடம்பெற்றது. வடக்கில் தேர்தல்கள் இடம்பெறவில்லை.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 2008இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடாமல் செய்வதற்காக அப்போதய ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ அரசு பல கெடுபிடிகளை 2005இல் இருந்தே ஆரம்பித்துவிட்டது. அதற்கு தமிழ் ஆயுத ஒட்டுக் குழுவைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பல கொலைகள், மிரட்டல்கள், கடத்திவைத்தல், எச்சரித்தல் போன்ற நடவடிக்கைகளை நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் மேற்கொண்டது. இதனால் 2008 கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அச்சுறுத்தல், கெடுபிடி காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை என்பதுதான் உண்மை.

2005, டிசம்பர் 25 இல் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை.

2006, ஜனவரி 30இல் வெலிகந்த வீதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களான செல்வி தனுஷ்கோடி பிறேமினி, காசிநாதர் கணேசலிங்கம், தங்கராசா கதிர்காமர், தமிராசா வசந்தராசன், சண்முகநாதன் சுரேந்திரன், கைலாயபிள்ளை ரவிந்திரன், அருள் நேசராசா சதீஷ்கரன் ஆகிய ஏழுபேரும் தமிழ் ஆயுத ஒட்டுக்குழுவால் கடத்திப் படுகொலை.

2006, ஏப்ரல் 07இல் திருகோணமலையில் வங்கி முகாமையாளர் விக்கினேஷ்வரன் படுகொலை, இவர் மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் வெற்றிடத்துக்காக நியமிக்கப்பட இருந்தவர்.

2006, ஜூன் 04இல் திருகோணமலை மூதூரில் மனிதாபிமானப் பணியாளர்களான பீரிஸ் ஆனந்தராசா, மாதவராசா கேதீஸ்வரன், ஜி.சிறிதரன், நர்மதன், ஆர்.அருள்ராசா, பு.பிரதீபன், எம்.ரீஸ்கினன், வை.போடீஸ்வரன், செல்வி கே.கோவர்தனி, செல்வி எஸ்.றோமிலா, செல்வி வி.கோகிலவதனி, செல்வி ஜி.கவிதா, எஸ்.கணேஷ், ஏ.ஜயசீலன், கே.கோணேஸ்வரன், முரளிதரன், அப்துல் முகமட் ஜப்பார் ஆகிய 17 பேரும் படுகொலை செய்யப்பட்டனர்.

2006, நவம்பர் 10இல் கொழும்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜ் படுகொலை.

2007, ஓகஸ்ட் 21இல் ஓட்டமாவடியில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தியின் சகோதரர் படுகொலை.

2007, செப்டெம்பர் 20இல் திருகோணமலையில் மூதூர் பிரதேச சபை உறுப்பினர் சௌந்தரராசாவின் சகோதரர் படுகொலை.

2006, நவம்பர் 19இல் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரனின் சகோதரர், கனசபையின் மருமகன், தங்கேஸ்வரியின் செயலாளர், ஜெயானந்தமூர்த்தியின் மருமகன் ஆகிய நால்வரும் மட்டக்களப்பில் கடத்தியமை.

2008, மார்ச் 06 இல் ஏ9 வீதியில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சிவநேசன் படுகொலை.

இவ்வாறான இன்னும் நூற்றுக்கணக்கான படுகொலைகளையும், கடத்தல்களையும், அச்சுறுத்தல்களையும் நடத்தி ஒரு பயங்கரப் பீதியை வடக்கு, கிழக்கு முழுதும் அதிலும் விசேடமாக கிழக்கு மாகாணத்தைக் குறிவைத்து நடத்தி அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 22 பேரையும் சொந்த மாவட்டங்களுக்குச் செல்லவிடாமல் தடுத்து எச்சரிக்கை செய்த சூழ்நிலையில்தான் கிழக்கு மாகாண சபை முதலாவது தேர்தல் 2008, மே 01இல் இடம்பெற்றது.

2008, மே 16இல் முதலமைச்சராக பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

முதலமைச்சர் பதவி ஏற்று முதன்முதலாக 2008, மே 18இல் பிள்ளையான் கண்டி மல்வத்தை மகாநாயக்க தேரருடைய ஆசியைப்பெற்றார்.

2008, மே 28இல் காத்தான்குடி மெத்தைப்பள்ளி வாசலுக்குச் சென்று முதலமைச்சர் பிள்ளையான் மௌலவிகளின் ஆசியைப்பெற்றார். இவற்றை எல்லாம் செய்தபின்னர் 2008, ஜூன் 04இல் கிழக்கு மாகாண சபை முதலாவது அமர்வு திருகோணமலையில் இடம்பெற்றது.

அந்தத் தேர்தலில் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியில் வெற்றிலை சின்னத்தில் வேட்பாளராக போட்டியிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 20 ஆசனங்களும், ஐக்கிய தேசிய கட்சி 15 ஆசனங்களும், மக்கள் விடுதலை முன்னணி 01 ஆசனத்தையும், தமிழ் ஐக்கிய கூட்டமைப்பு எனும் சுயேட்சைக் குழுவில் மட்டக்களப்பு ஈபிஆர்எல்எவ் பொறுப்பாளர் இரா.துரைரெட்ணம் மட்டும் வெற்றிபெற்றார்.

2012, செப்டெம்பர் 08இல் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை இரண்டாவது தேர்தலில்தான் முதன் முதலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது அந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 14 ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 07 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சி 04 ஆசனங்களையும், ஜே.வி.பி. 01 ஆசனத்தையும் பெற்றது,

2012, செப்டெம்பர் 28இல் முதலமைச்சராக கிண்ணியாவைச் சேர்ந்த நஜீப் அப்துல் மஜீத் தெரிவானார், பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சி ஊடாக தேர்தலில் போட்டியிட்டு அவர் மட்டும் மட்டக்களப்பில் தெரிவானார். எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருமலை தண்டாயுதபாணி தெரிவானார்.

பின்னர் 2015, ஜனவரி 08இல் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அந்தத் தேர்தலில் மைத்ரிபால சிறிசேன தெரிவானார். அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பூரண ஆதரவை வழங்கி தேர்தல் பிரசாரங்களையும் மேற்கொண்டிருந்தது.

அவர் ஜனாதிபதியான பின்னர் கிழக்கு மாகாண சபையில் ஆட்சிமாற்றம் 2015, ஜனவரி 07இல் இடம்பெற்றது. அதில் முதலமைச்சராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஹாபீர் நசீர் அகமட், சுகாதார அமைச்சராக அதே கட்சியைச் சேர்ந்த நசீர் அகமட், அமைச்சர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆரியபதி கலாபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கி.துரைராசசிங்கம், தண்டாயுதபாணி ஆகியோரும், தவிசாளராக ஐக்கிய தேசிய கட்சி சந்திரபாலு கலாபதியும், பிரதி தவிசாளராக இந்திரகுமார் பிரசன்னாவும் தெரிவானார்கள்.

கிழக்கு மாகாண சபை சகல கட்சிகளையும் இணைத்து கூட்டாச்சி இடம்பெற்றது. சிலர் குறிப்பிடுவதுபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இரண்டு கட்சிகள் மட்டும் இணைந்து ஆட்சியமைக்கவில்லை. நான்கு கட்சிகளைச் சேர்ந்த ஆட்சியே அப்போது இருந்தது. (முஸ்லிம் காங்கிரஸ், த.தே.கூ, ஐ.ம.சு.கூ, ஐ.தே.க) ஜே.வி.பி. மட்டும் பங்கேற்கவில்லை. அந்த பதவிக்காலமும் 2 வருடம் 8 மாதம் 23 நாட்கள் மட்டுமே தொடர்ந்தன.

அதன்பின்னர் 2015, ஓகஸ்ட் 17இல் பாராளுமன்ற பொதுத் தேர்தல் இடம்பெற்றபோது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி 106 இடங்களைக் கைப்பற்றியது. ஆனாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறியது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 95 இடங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 இடங்களையும் கைப்பற்றின. மீதியான எட்டு இடங்களையும் மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன கைப்பற்றின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களுடன் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் தெரிவாகினார்.

நல்லாட்சி என்ற புனைபெயருடன் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுகள் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக சில நல்லெண்ணப் பேச்சுகள் தொடர்ந்த நிலையில், இறுதியில் ஜனாதிபதியாக இருந்த மைத்ரியும், பிரதமராக இருந்த ரணிலும், எதிக்கட்சித் தலைவராக இருந்த இரா.சம்பந்தனையும், அவருடன் இருந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வழமைபோன்று இனப்பிரச்சினை தொடர்பாகவும், கல்முனை வடக்கு பிரதேச செயலக தரம் உயர்த்தும் விடயத்தையும் செய்யாமல் ஏமாற்றினர்.

பிரதமர் ரணில், ஜனாதிபதி மைத்ரியின் பேச்சுகளை மிக நம்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஊட்டும் விதமாக காலக்கெடுவை விதித்தனர். இதனால் தமிழ்மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்தனர் என்பது நிரூபணமானது.

ஆனால், அபிவிருத்திப் பணிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பல கோடி நிதிகள் ஒதுக்கீடும், பல வேலைவாய்ப்புகளும், ஒருசில காணி விடுவிப்புகளும், அரசியல்கைதிகள் சிலர் விடுதலையும் இடம்பெற்றன என்பது உண்மையாக இருந்தாலும், தமிழ்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது அபிவிருத்திக்கோ, வேலைவாய்ப்புகளுக்கோ, சலுகைகளுக்கோ அல்ல என்பதை 2020 பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் நிருபித்தனர் என்பதை மறுக்கமுடியாது.

பிரதமர் ரணில், தமிழ்த் தேசிய நீக்க அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுகளும், கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியைக் விட்டுக்கொடுத்தனர் என்ற பரவலான குற்றச்சாட்டுகளாலும் 2020 பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களிலிருந்து சடுதியாக 10 ஆசனங்களாக குறைந்தது என்பது ரணில், மைத்ரி நல்லாட்சி அரசில் கண்ட உண்மை.

தற்போது ஆறு வருடங்களாக மாகாண சபைத் தேர்தல்கள் காணாமல்போய் உள்ளன. இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொண்ட இந்திய அரசுகூட இலங்கை அரசுக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்க முடியாத வக்கற்றவர்களாகவே உள்ளனர்.

# சிங்கள இளைஞர்களின் துட்டகைமுனு மனப்பாங்கு மாறவேண்டும்

அக்கினியான்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதாக்கப் போராடும் தங்கள் போராட்டத்துக்கு ஆதரவு கோரி கடந்த ஞாயிற்றுக்கிழமை (12.03.2023) அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தலைமையிலான குழுவினர் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து இந்த ஆதரவைக் கோரியிருந்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன. இச்சந்திப்பின்போது அனைத்துப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் இரு விடயங்கள் தொடர்பாக ஆதரவு கோரியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.









பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக தாங்கள் நடத்தும் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு தரவேண்டுமென்பதும் மறுபுறம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்துக்கு ஆதரவு தருமாறும் கோரிக்கை விடுக்கப் பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக தமது சம்மதத்தைத் தெரிவிக்காதுவிட்டாலும் தமது பக்க நியாயத்தை மிகத் துல்லியமாகவும் கச்சிதமாகவும் தெரிவித்திருந்ததாக அச்செய்தி மூலமாக அறியக்கூடியதாக இருந்தது. பயங்கரவாதத் தடைச்சட்டமென்பது தமிழ் இளைஞர்களை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டபோது இதன் கொடூரத்தை சிங்கள இளைஞர்களும் மக்களும் உணர்ந்துகொள்ளாமல் பாராமுகமாக இருந்துவிட்டு அச்சட்டம் ஆட்சியாளர்களால் சிங்கள இளைஞர்களுக்கு எதிராக தற்போது திருப்பிவிடப்பட்டிருக்கும் நிலையிலேயே சிங்கள மக்கள் மத்தியில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான கெடுதி உணரப்பட்டிருக்கிறது.

கடந்த 43 வருடங்களுக்கும் மேலாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள், தடுத்துவைக்கப்பட்டவர்கள், சிறைவாசம் அனுபவிப்பவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் என ஏராளமான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் இச்சட்டத்தின் கொடூரத்தை அனுபவித்து வந்திருக்கிறார்கள். இந்நிலையில்தான் கடந்த வருடம் சிங்கள இளைஞர்களாலும் பல்கலைக்கழக மாணவர்களாலும் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியின் பிரதிபலிப்பாக இச்சட்டம் அவர்களுக்கு எதிராக திசைதிருப்பபட்டு பலர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில், இச்சட்டத்தை இல்லாதாக்க சிங்கள மக்களும் பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்களும் முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆரம்பத்திலிருந்தே அரச விரோதிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் அரச படைகளாலும் சிங்களத் தலைமைகளாலும் சித்திரிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள்மீது பாயவிடப்பட்ட இப்பயங்கரவாதத் தடைச்சட்டம் கடந்த 43 வருடங்களுக்கும் மேலாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகளை குறிவைத்ததாகவே அமுல்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன 1978ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி புலிகள் தடைச்சட்டம் என்ற பெயரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்த முற்பட்டார். இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டதன் பின்னணியில் 1977ஆம் ஆண்டு ஆவணிக் கலவரம், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைக்கப்பட்டமை, (1976.05.14) வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஆகியவை சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் தமிழ்த் தலைமைகள்மீதும் இளைஞர்கள்மீதும் கடுங்கோபத்தை உண்டாக்கியிருந்த நிலையில், தலைவர் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் வெளிப்படையான போர் பிரகடனம் ஆகியவை இச்சட்டம் தோற்றுவிக்க பின்னணியாக அமைந்தது.

கடந்த வருடம் அரச எதிர்ப்பாளர்கள் என்ற வகையில் சிங்கள இளைஞர்கள் ஆட்சிமாற்றத்தை வேண்டி கிளர்ச்சியில் ஈடுபட்ட நிலையில், மேற்படி சட்டம் திசை திருப்பப்பட்டு சிங்கள இளைஞர்கள் பக்கம் பாயத் தொடங்கிய பின்பே இச்சட்டத்தின் கொடூரம் பற்றி சிங்கள இளைஞர்கள் மத்தியில் இச்சட்டம் பற்றிய புரிநிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் தாக்கத்தின் காரணமாகவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாது ஒழிக்குமாறு கோரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தாம் முன்னெடுக்கும் போராட்டங்களில் ஒன்றிணைந்து பங்கெடுக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுடன் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கோரிக்கையை முன்வைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.




அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தலைமையிலான குழுவினரின் கோரிக்கைக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் உடன் இணக்கம் தெரிவிக்காமல், தமிழ் மக்களின் அபிலாஷைகளை சிங்கள மாணவர்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே ஒன்றிணைந்து செயற்பட முடியும் என நிபந்தனையிட்டிருப்பது தெரியவந்துள்ளது. இவ்விவகாரத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நிபந்தனைகளில் யதார்த்தமும் பல வரலாற்று உண்மைகளும் அடங்கியிருக்கிறதென்பதை சிங்கள மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சிங்கள இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்பே அச்சட்டத்தின் கொடூரத்தையும் அசுரத்தனத்தையும் சிங்கள மக்களால் உணர்ந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது என்பது விசித்திரமான விடயம்.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் இளைஞர்கள் 1983ஆம் ஆண்டுக்குப்பின் வகைதொகையாய் கைதுசெய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டு விசாரணையின்றியும் வழக்கின்றியும் தடுத்துவைக்கப்பட்ட அவலநிலைகளை சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் வருடக்கணக்காக எடுத்துக்கூறியும் அதை சிங்கள இனவாத தலைமைகள் ஏற்றுக்கொள்ளவுமில்லை, புரிந்துகொள்ளவுமில்லை.

2013ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இதுபற்றி முன் கொண்டுவந்து தொடர்ந்து சர்வதேச நாடுகளால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்ட போதும் இலங்கை அரசாங்கம் அதுபற்றி பொருட்படுத்தாமலே தட்டிக்கழித்து வந்திருக்கிறது. கடந்த வருடம் (2022) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தது. நாட்டில் இடம்பெற்ற போராட்டங்களில் கலந்துகொண்ட மாணவத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள் கைதுசெய்யப்பட்டமையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீள் பயன்பாடும் மிகுந்த கரிசனையை உண்டாக்கியிருந்த நிலையில் அமைதிப் போராட்டங்கள் மீதான அடக்குமுறையையும் இத்தகைய மிக மோசமான சட்டங்களின் பயன்பாட்டையும் அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையாளர் மிக்செல் பச்லெட் குறிப்பிட்டிருந்தமை கவனத்துக்குரிய விடயமாகும்.

ஏற்கனவே தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துவரும் கட்சிகளால் கடந்த வருடம் மேற்படி சட்டத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக நீக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து கையெழுத்து வேட்டையொன்று நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம், மாவட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து சிதறு தேங்காய் உடைக்கப்பட்டு ஆரம்பமான குறித்த ஊர்திவழிப் போராட்டமானது அம்பாந்தோட்டை மாவட்டத்துடன் முடிவடைந்திருந்தது. மாவட்டந்தோறும் இந்த ஊர்தி சென்று பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான கையெழுத்துகளை மக்களிடம் பெறும் நடவடிக்கை இடம் பெற்றிருந்தது. இலங்கை தமிழரசுக் கட்சி இளைஞர் அணியின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டத்துக்கு பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புகள் என்பன ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

இந்தப் போராட்டத்தை ஆதரிப்பதுபோன்று எதிர்க்கட்சியினர் 15.02.2022 அன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக கையெழுத்து போராட்டமொன்றை நடத்தியிருந்தமையும் யாழ்ப்பாணம் மாநகர சபை போன்ற சபைகளில் பயங்கரவாத சட்டத்துக்கு எதிரான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட நாட்டின் முக்கிய கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தமையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரினால் கொண்டுவரப்பட்ட புலிச்சட்டம் பயங்கரவாத சட்டமாக 1979 ஜூலை மாதத்திலிருந்து கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து இச்சட்டத்துக்கு இரையாக்கப்பட்டவர்கள் தமிழ் இளைஞர்களாகும். தமிழர்களுக்கு எதிராக மிக மோசமாக பயன்பட்டதைப்போன்று முஸ்லிம் இளைஞர்கள், சிங்கள இளைஞர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதையும் தாண்டி அரசாங்கத்துக்கு எதிராக விமர்சனங்களை யார் முன்வைத்தாலும் அவர்களுக்கு எதிராகவும் இச்சட்டம் கையாளப்படும் நிலை காரணமாகவே அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள் இச்சட்டத்தின் கோரப்பிடியில் சிக்கி இன்று விடுதலை பெறமுடியாமல் தவிப்பதைக் காண்கிறோம்.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழித்து சர்வதேச நியமங்களுக்கேற்ப புதிய சட்டமொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அதற்கான திட்ட வரைவு தயாரிக்கப்பட்ட நிலையில் பல்வேறு அரசியல் குழப்பங்கள், நெருக்கடிகள், மாற்றங்கள் காரணமாக முயற்சி முற்றுப்பெறவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்ற சர்வதேச ரீதியில் எழுந்த அழுத்தங்கள் காரணமாக நல்லாட்சி அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது குறைப்பிரசவமாகவே போயிருந்தது.

மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 2019ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழித்து புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டது. ஆனால், எண்ணெய் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழும் ஆபத்துபோன்று புதிதாக உருவாக்கப்படவுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் பல்வேறு கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. உருவாக்கப்படவிருந்த புதிய சட்டமானது இன்னும் ஆபத்தைக் கொண்டது. எந்த பொலிஸ் அதிகாரிக்கும் அல்லது ஆயுதப்படை உறுப்பினருக்கும் அல்லது ஒரு கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் எந்தவொரு பிரஜையையும் சந்தேகத்தின்பேரில் பயங்கரவாதி என்று கருத முடிவதோடு பிடியாணையின்றி அவரை கைதுசெய்வதற்கும் சந்தேகத்தின்பேரில் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்வதற்கும் தேடுதல் நடத்துவதற்கும் புதிய சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம், தடுத்துவைத்து விசாரணை செய்தல் மற்றும் ஒரு பெண்ணை ஆண் பொலிஸாரோ அன்றி பாதுகாப்புப் படையினரோ கைது செய்வதற்கான அதிகாரங்களும் இச்சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. கொண்டுவரப் படவுள்ள சட்டமானது மிக மோசமானதாகவும் மக்களின் அடிப்படை சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் கூட விமர்சிக்கப்பட்டிருந்தது. இதனால் ‘பழைய குருடி கதவை திறவடி’ என்பதுபோல் பழைய சட்டம் தன்னை சுதாகரித்துக்கொண்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் காரணமாக பல அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமல் 12 வருடங்களிலிருந்து 27 வருடங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அவலநிலை காணப்படும்போதுதான் கடந்த வருடம் மக்கள் எழுச்சிப் போராட்டக்காரர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டதன் அகோரத்தன்மை காரணமாகவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டிய அவசியமும் அவசரமும் சிங்கள மக்களால் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. ‘கோட்டா கோ கம’ போராட்டத்தில் முன்னிலை வகித்த ஒருவராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே காணப்பட்டார். போராட்டத்தின் பின்னணியின் தலைவராகவும் இவர் பார்க்கப்பட்டார். ஆளும் அரசாங்கத்தை இல்லாதாக்கும் முயற்சியில் இன, மத பேதமின்றி மக்கள் கலந்துகொண்டு முன்நின்றனர். இப்போராட்டத்தை ஒரு மக்கள் புரட்சி என்று இலக்கணப்படுத்த முடியாவிட்டாலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள், வாழ்வியல் போராட்டங்கள், அரசியல் கெடுபிடிகள் இப்போராட்டத்துக்கு வழிவகுத்திருந்தன. மொத்தத்தில் அரசியல் பின்னணிகள் கலந்தும் கலவாத ஒரு போராட்டமாக இது வெடித்திருந்தது. இப்போராட்டத்தின் வெளிப்பிம்பங்களாக பல்கலைக்கழக மாணவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள் என்பதும் பொதுவான உண்மை.

மாணவர்கள் என்பவர்கள் அதிலும் குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்கள் தாய்நாட்டின் மனித வளங்கள். அவர்கள் மத்தியில் இன, மத, மொழி, சமூக வேறுபாடுகள் இருக்கக்கூடாது, பார்க்கப்படக்கூடாது என்பதும் உண்மையே. அவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவு நல்கவேண்டிய தார்மீகக் கடமை சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உரிய பொதுவான குணாம்சமாக பார்க்கப்படவேண்டும். ஆனால், இங்கு தொக்கி நிற்கின்ற கேள்வி யாதெனில், தமிழ் மக்களின் போராட்டக் காலத்திலும் யுத்தம் முடிவுற்ற காலத்துக்குப் பின்பும் குறித்த பயங்கரவாதத் தடைச்சட்டம், மறுபுறம் தென்னிலங்கை இனவாத அரசாங்கங்கள் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள்மீது இச்சட்டத்தை ஏவிவிட்டதன் காரணமாக கடத்தப்பட்டமை, கொல்லப்பட்டமை, கற்பழிக்கப்பட்டமை, சிறைப்பிடிக்கப்பட்டமை, படுகொலைசெய்யப்பட்டமை, காணாமலாக்கப்பட்டமை என்ற சம்பவத் தடங்கள் பல நிகழ்ந்தபோது அப்பாவி தமிழ் மக்களுக்கு இந்தக் கொடுமை நடந்தபோது பல்கலைக்கழக மாணவர் சமூகம் வேடிக்கை பார்த்தது, மௌனம் சாதித்து கை கொட்டி வரவேற்ற துன்பவியல் சம்பவங்களை தமிழ் மக்கள் மறந்துவிட முடியாது. உதாரணமாக, கணவனுக்கு முன்னால் - பெற்ற பிள்ளைக்கு முன்னால் ஒருதாய் நிர்வாணமாக்கப்பட்டு கற்பழிக்கப்பட்ட சம்பவங்கள் பல வடக்கு, கிழக்கில் நடந்திருக்கின்றன.

அதுவுமன்றி தமிழ் மக்களின் அரசியல் போராட்டமென்பது 73 வருடங்களைத் தாண்டி ஒரு நெடும்பயணமாகக் காணப்படும் நிலையில் 13ஆவது திருத்தத்தையாவது முழுமைப்படுத்துங்கள் என்று இரங்கும் தமிழ் மக்களுக்கு எதிராக நாலு பௌத்த பீடங்களும் போர்க்கொடி தூக்கி நிற்கின்றன. வடக்கு, கிழக்குக்கு அரசியல் உரிமை கோருவோர் சிங்கள மக்களின் எதிரிகள், பயங்கரவாதிகள் என முத்திரை குத்தும் அரசியல் தலைமைகளை தட்டிக்கேட்கும் திராணியற்றவர்களாக தெற்கின் புத்திஜீவிகளும் பல்கலைக்கழக சமூகத்தவரும் காணப்படுகிறார்கள். சிங்கள இளைஞர்கள் இன்னும் துட்டகைமுனு மனப்பாங்கோடுதான் நடக்கப்பார்க்கிறார்கள்.

இருந்தபோதிலும் கோட்டா கோ கம போராட்டமானது சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஒரு புதிய அலையை, பிரவாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தேசத்தை தேசிய வகையில் சுத்திகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் மத்தியில் விதைத்திருக்கிறது என்ற உண்மை மறுப்பதற்கில்லை என்றபோதிலும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்களின் உணர்வுகளையும் உண்மைகளையும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்ற நிபந்தனையை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நினைவுபடுத்தியிருப்பது அல்லது நிபந்தனையாக்கியிருப்பது வரவேற்கத்தக்க விடயமாக பார்க்கப்பட்டாலும் இந்தச் சந்தர்ப்பத்தை பலமுள்ள வாய்ப்பாக கொண்டுவர வேண்டுமாயின் நதியோட்டத்தோடு சேரும் துண்டங்கள்போல் சாதுரியமான உத்திகளைப் பயன்படுத்துவதில் தவறு இருக்க முடியாது.

ஏனெனில், முள்ளை முள்ளால் எடுப்பதும் வைரத்தை வைரத்தால் வெட்டுவதும் சாதாரணத்துக்கு அப்பாற்பட்ட தந்திரக்கோலம்.

# தடுக்க முடியாத யானைகளின் தொல்லை!!



சம்மாந்துறை, நெய்னாகாடு பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார் என்ற செய்தி சாதாரணமாக கடந்து செல்லக்கூடிய ஒன்றாக இரக்கக் குணம் நிரம்பிய மனிதர்களுக்கு அமைந்திருக்கவில்லை. இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்னாகாடு பிரதேசத்தில் பிற்பகல்வேளையில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சென்னல்கிராமம் 2 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 51 வயதுடையவராவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி அவரின் குடும்பத்தினரைச் சென்றடைந்தபோது அந்தக் குடும்பம் இடிவிழுந்த பனைபோல் சரிந்து விழுந்தமையை எமது மனக்கண் எடுத்துக்கொண்டு இந்தக் கட்டுரைக்குள் நாம் செல்லவேண்டும்.

இந்தத் தாக்குதலின் பாதிப்புகள் மக்களை விட்டு அகல முன்னர் யானைத் தாக்குதலில் பலியாகிய மற்றுமொரு குடும்பஸ்தர் என்றும் மேலும் இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் என்றும் செய்திகளை நாங்கள் காணவேண்டிய துர்ப்பாக்கிய நிலை எழுந்தது. கடன்களைப் பெற்று, நகைகளை அடகுவைத்து அல்லது விற்று பல மாதங்களாக கஷ்டப்பட்டு விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது அறுவடையைப் பாதுகாக்க யானைக்காவலுக்காக சம்மாந்துறை பெரிய கொக்கனாரைவட்டைப் பகுதிக்குச் சென்ற மூன்று நபர்களை கடந்த மாதம் 24ஆம் திகதி அதிகாலை யானை தாக்கியுள்ளது. அதில் யானை தாக்கியதில் ஒரு நபர் சம்பவ இடத்துலேயே உயிரிழந்ததோடு, இருவர் வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். யானைத் தாக்குதலுக்கு
55 வயதுடைய மட்டக்களப்பு தரவை-1 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே சம்பவ இடத்தில் உயிரிழந்திருந்தார். மேலும், மரணித்தவர் 2 பெண்கள், ஒரு ஆண் பிள்ளை என 3 பிள்ளைகளின் தந்தையாவார். இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் என்ன என்ற கேள்வியை இப்போது இந்தக் கட்டுரையை நாங்கள் வாசித்துக்கொண்டிருக்கும்போது சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அன்றைய தினம் யானைத் தாக்குதலுக்கு இலக்கான 52 வயதுடைய மலையடிக்கிராமம்-2 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர் சிகிச்சைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டார். உடங்கா-2 ஐச் சேர்ந்த 29 வயதுடைய மற்றுமொருவர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பியுள்ளார்.

இவ்வாறு 2022 இறுதிப்பகுதி தொடக்கம் 2023 ஆரம்ப காலப்பகுதிகளில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி சம்மாந்துறை பிரதேசத்தில் மட்டும் 3 விவசாயிகள் யானைக்குப் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்தும், உயிருக்குப் பயந்து தப்பியோடியும் உள்ளனர். அதுமட்டுமன்றி, இது வயல் அறுவடை காலம் என்பதால் கூட்டம் கூட்டமாக யானை நடமாட்டமும் அதிகமாக இருப்பதால் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் தொடர்ந்தும் உரியவர்களுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தக் கோரிக்கைகளின் புதிதில் தற்காலிக நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் நிரந்தரமாக யானைத் தாக்குதலை முறியடிக்க முடியாமல் துறைசார் திணைக்களங்களும், யானைத் தாக்குதலை நேரடியாகச் சந்திக்கும் உள்ளூராட்சி சபைகளும் திணறி வருகின்றன. இப்படியாக யானைத் தாக்குதல் நிறைந்த இடமாக சம்மாந்துறை மாறியிருக்கிறது. அண்மையில் கூட சம்மாந்துறையில் அறுவடை இடம்பெறும் நிலையில், மூன்று இடங்களில் 30இற்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக ஊருக்குள் நுழையும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அறிந்த சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் குறித்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டார். இதன்போது, விவசாயிகள், வயல் நிலங்கள், ஊர்மக்களைப் பாதுகாப்பதற்கு முடியுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு யானைகளை காட்டுப்பகுதிக்குள் அனுப்புவதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டார். இது விடயம் தொடர்பில், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தௌபீக்கை தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு பிரதேசத்தில் யானைகளால் பலர் மரணமடைந்துள்ளதுடன், பொதுமக்களின் உடமைகளையும் நாளாந்தம் சேதப்படுத்துவதையும் தெளிவுபடுத்தியுள்ளதாக அறிய முடிகிறது. இது மட்டுமன்றி அசம்மாந்துறை பிரதேசத்தில் யானைகளால் ஏற்படும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் சமீபத்தில் இடம்பெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் பிரசாந்த, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம்.சீ.எம்.றியாஸ், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான ஜெகதீஸ், சுரேஸ்குமார், சிசிர காமினி, கித்சிறி மெமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அப்போதைய கலந்துரையாடலில் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் சேதம் ஏற்படுத்தும் யானையை இனங்கண்டுள்ளதாகவும் அதனை வனவிலங்கு சரணாலயத்திற்கு ஏற்றிச்செல்லுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் விவசாய நடவடிக்கை முடியும்வரை யானைகளை வனவிலங்கு பாதுகாப்புச் செயலணியும் சிவில் பாதுகாப்புப் படையும் இணைந்து விவசாயிகளின் பாதுகாப்பை வயல்நிலப் பகுதிகளில் உறுதிப்படுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது மட்டுமன்றி, அதனுடன் நீண்டகாலப் பாதுகாப்புத் திட்டத்தையும் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை இங்கு கவனிக்க வேண்டியுள்ளது.

இவற்றுக்கு மத்தியில் சம்மாந்துறை, மாவடிப்பள்ளி வீட்டுக் குடியிருப்புகளை நோக்கி மாலைவேளைகளிலும், நள்ளிரவிலும், அதிகாலையிலும் ஊடுருவும் காட்டு யானைகளின் நடமாட்டத்தினால் பிரதேசவாசிகள் அச்சமடைந்துள்ளனர். மக்கள் குடியிருப்புப் பிரதேசத்திலுள் யானைகளின் அட்டகாசத்தினால் வீட்டு மதில்கள் மற்றும் பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இரவுநேரங்களில் அச்சம் நிலவிவருவதாக யானை நடமாட்டம் கூடிய பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் இலங்கை பொலிஸாரும் தம்மால் முடியுமான சகல பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்தாலும் அவை சில நேரங்களில் கைகொடுக்கத் தவறிவிடுகிறது. யானைகளின் அட்டகாசத்தினால் நெற்செய்கை மட்டுமன்றி, வாழை, தென்னை முதலான பயிர்களும் அதிகமாக சேதமாகிவிடுகின்றன. அத்துடன், யானைத் தாக்குதல் இடம்பெறுகின்றபோது வீட்டில் தங்கியிருந்த மக்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பிய வரலாறுகளும் இல்லாமல் இல்லை. இப்படியாக ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள காடுகளுக்குள் இருந்து குறித்த பகுதி கிராமங்களுக்குள் வந்து சேதம் விளைவித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்காட்டு யானைகள் ஊருக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக ஊர்ப் பகுதியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சில யானை தடுப்பு மின்சார வேலிகள் செயலிழந்துள்ளதுடன், ஊடுருவியுள்ள காட்டு யானைகள் கூட்டம் பொதுமக்களின் உயிர்களையும் பலியெடுத்து சொத்துகளையும், உடமைகளையும் காவுகொண்டு சேதம் விளைவித்ததோடு, பயன்தரும் பயிர்களையும் மரங்களையும் கூட துவம்சம் செய்துவிட்டுச் செல்கின்றன. காட்டு யானைகள் ஏற்படுத்தும் சேதம் தொடர்பாக கிராமசேவையாளருடனும், பிரதேச செயலாளருடனும், மாவட்ட அரசாங்க அதிபருடனும், பொலிஸாரிடமும், வனஇலாகா அதிகாரிகளிடமும் பல்வேறு தரப்பினரும், பல்வேறு காலப்பகுதியில் முறைப்பாடுகளையும், கோரிக்கைகளையும் முன்வைத்து வருகின்றனர்.

அட்டகாசம் புரியும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை அவசியம் என்பதனால் யானைத் தாக்குதல் நிரம்பிய காரைதீவு, நாவிதன்வெளி, இஸ்மாயில்புரம் போன்ற பிரதேசங்களில் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உப காரியாலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அம்பாறை மாவட்டத்தில் இப்போது எழுந்துள்ளது. அதுமட்டுமன்றி, யானை பாதிப்பு கூடிய கிழக்கின் மற்றுமொரு மாவட்டமான மட்டக்களப்பு மாவட்ட மஜ்மா நகர், அறபா நகர், காகித நகர் மற்றும் தியாவட்டவான் பிரதேச மக்களின் நன்மைகருதி ஓட்டமாவடி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மஜ்மா நகர், தியாவட்டவானை அண்டிய பிரதேசங்களில் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உப காரியாலயமொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கைகள் பொது அமைப்புகளினாலும் பொதுமக்களினாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக யானைகளின் நடமாட்டம் கூடியுள்ளமையால் செய்கைபண்ணப்பட்டுள்ள பயிர்களை அழித்து நாசம்செய்து வருவதனால் விவசாயிகளும் பொதுமக்களும் பெருந்தொகையான பொருளாதார ரீதியான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். காட்டு யானைகள் குடியிருப்புகளுக்குள் நுழைகின்றபோது அதனை விரட்டியடிக்க வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்களின் உதவியை நாடும்போது, அவர்கள் உரிய பிரதேசத்திற்கு உடனடியாக வருகை தர முடியாத நிலை காணப்படுகின்றது. அல்லது அவர்கள் உரிய இடங்களுக்கு விரைவதற்கு முன்னதாக யானைகள் உள் நுழைந்து சேதங்களை ஏற்படுத்தி விடுகின்றன. ஆகவே, இவைகளைக் கருத்திற்கொண்டு பாதிப்பை சந்திக்கும் பிரதேசத்தில் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உப காரியாலயமொன்றை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த முயலும் அரசு, உற்பத்தியையும் விவசாயிகளையும் யானைகளிடமிருந்து பாதுகாக்கத் தவறுகின்றதென சம்மாந்துறை அனைத்து விவசாய அமைப்பின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் கடந்த மாதம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்திருந்தார். தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்துவரும் இவரின் குடும்பம் சம்மாந்துறை பிராந்தியத்தில் விவசாயக் காணிகள்கொண்ட குடும்பமாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளின் உள்ளார்ந்த விடயங்களை அறிந்த நௌஷாட், தற்போது அறுவடை இறுதிக்கட்டத்தில் இருக்கும்போது நாளாந்தம் நூற்றுக்கணக்கான யானைகள் சம்மாந்துறை விவசாயிகளின் உற்பத்திக்கும், உயிருக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. இதற்கு உடனடியாகத் தீர்வு காணும்படி ஜனாதிபதிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராகவும் நீண்டகாலம் பணியாற்றிய அவர், யானைகளின் தாக்குதல் பற்றி இப்பிரதேசத்தில் நன்றாக அறிந்தவர்களில் ஒருவராக இருக்கிறார்.

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 24 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளதுடன், ஏறத்தாழ நான்கு வருடங்களாக விவசாய அமைப்புகளும் அனைத்து விவசாய அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து விவசாயிகளிடமிருந்து 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணம் அறவிட்டு யானைகளிடமிருந்து உற்பத்தியைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவந்திருக்கின்றனர். இருந்தும் கால அரசாங்கத்திடமிருந்து இந்த முயற்சிக்கு ஆயுதம் தாங்கிய சிவில் பாதுகாப்புப் படையினரைத் தந்துதவுமாறு வேண்டுகோள் விடுத்தும் அது கைகூடவில்லை. இதனால் ஒவ்வொரு போகமும் அப்பாவி விவசாயிகளின் உயிரிழப்புகள் நிகழ்ந்து வருகின்றன. வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கையில் இறங்கியும் யானைகளை கட்டுப்பாடுக்குள் கொண்டுவர முடியாமல் போனதென்று தனது அனுபவத்தை அவர் பகிர்ந்துள்ளமை இங்கு சகலராலும் கவனிக்கப்படவேண்டியுள்ளது.

நெல் உற்பத்தியில் முன்னிலை மாவட்டமாகத் திகழும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் விவசாய நடவடிக்கைகள் முடிவுற்று அறுவடை இடம்பெற்று வருவதனால் யானைகளின் வருகை தொடர்பிலும், யானைகளின் மூலம் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹீருக்கும், இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பினருக்குமிடையில் சம்மாந்துறை பிரதேச சபை கட்டிடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஈ.எம்.பி.டேனியல், கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.நளீர் அபூபக்கர், அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எஸ்.அருண் உட்பட பலரும் கலந்துகொண்டு சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹீருடன் யானைகளின் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது சம்மாந்துறை, நெய்னாகாடு, மல்வத்தை, மஜீத்புரம், நாவிதன்வெளி, மாவடிப்பள்ளி போன்ற பிரதேசங்களில் யானைகளினால் ஏற்படுத்தப்படும் தொல்லைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன், பாதிப்புகளைக் கட்டுப்படுத்த தன்னால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கிய தவிசாளர் மாஹீர், தொடர்ந்து எதிர்காலத்தில் தான் இது தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கைகளை இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பினருக்கு விளக்கியிருந்தார். இவ்வாறு யானைத் தாக்குதலைக் கட்டுப்படுத்த பலரும் பல்வேறுவகையான முயற்சிகளை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இப்படியான சூழ்நிலையில் யானை நடமாட்டம் கூடிய மாவடிப்பள்ளி - காரைதீவு பிரதான வீதியின் தெருவிளக்குகள் இரவில் ஒளிராமல் இருப்பது மக்கள் மத்தியில் யானை பயத்தையும், பலத்த விமர்சனங்களையும் உண்டாக்கியுள்ளது. இது தொடர்பில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் சமூக ஊடகங்களில் இடம்பெற்று வருகின்றன. மின் விளக்கு ஒளிராமைக்குக் காரணம், மின்சார சபைதான் என்று ஒரு தரப்பும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைதான் காரணம் என்று மற்றுமொரு தரப்பும், காரைதீவு பிரதேச சபையும், தவிசாளரின் இனவாத போக்குகள்தான் என்று இன்னொரு தரப்பும் கூறிவருகின்றன.

ஆனால், வீதி விளக்குகள் ஒளிராமைக்குக் காரணம் என்ன என்ற உண்மைகளை வெளி கொண்டுவருவதில் பலத்த இழுபறி நிகழ்கிறது. யானை பாதுகாப்புக்காக பிரத்தியோகமாக நிர்மாணிக்கப்பட்டு நேரடியாக பிரதேச சபை காரியாலயத்தில் தொடுக்கப்பட்ட மின்னிணைப்பைக்கூட பிரதேச சபையினர் செயற்படுத்தவில்லை என்ற குற்றசாட்டு விபரம் அறிந்தவர்களிடமிருந்து வருகிறது. அந்த விளக்குகளை ஒளிரச்செய்தால் சில மணித்தியாலயங்களில் மின்னிணைப்பு பிரச்சினை வருவதாகவும், ட்ரிப் சுவிட்ச் விழுவதாகவும் பிரதேச சபை தரப்பிலிருந்து கூறப்படுகிறது. ஆனாலும் இந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்ட நாளிலிருந்து பிரதேச சபை அதனை பொறுப்பேற்க மறுத்தமையும், திணித்தே வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அது கையளிக்கப்பட்டமையும் இங்கிருக்கும் உள்ளார்ந்த அரசியலை வெளிப்படுத்துகின்றது, இந்த மின்விளக்குகள் ஒளிராமை தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. இது தொடர்பிலான பிரச்சினைகள் சூடு பிடித்தால் வீதி விளக்குகள் ஒளிர்வதும், பிரச்சினைகள் தளர்ந்தால் விளக்குகள் அணைவதும் இங்கு வழமையாக உள்ளது.

மின் விளக்குகளின் மின் இணைப்பில் பிரச்சினைகள் இருந்தால் மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச சபை அல்லது இது தொடர்பிலான உதவிகளைப் பெற பொருத்தமான திணைக்களத்தின் உதவியைப் பெற்று இதனை சீரமைத்திருக்கலாம். ஆனால், வருடங்கள் பல கடந்தும் இங்கு அவை நடைபெறவில்லை. மாறாக அரசியலும், இனவாதச் செயற்பாடுகளுடன் கூடிய பிரசாரங்களும் மட்டுமே இடம்பெற்று வருகின்றன. யானைகளுக்கு இனமோ, மதமோ, பிரதேசமோ, அதிகாரியா, பாமரனா என்ற பேதமோ தெரியாது. இருளான பிரதேசமான இங்கு இரவில் மிதித்தால் பகலில் இறைவனிடம் சங்கமிக்க வேண்டி வரும். யானைகள் நடமாடும் பிரதேசம் என்ற பதாகைகளை கூட இப்பிரதேசங்களில் காணவில்லை. வெளி ஊர் அல்லது வெளிநாட்டவர்கள் இந்த வீதியால் இரவில் எதுவுமறியாது பயணித்து ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் பொறுப்பெடுப்பது யார்?

யானைகள் வாழ்ந்த இடங்களில் மனிதர்கள் வாழத் தொடங்கியதால் யானைகள் மனிதர்கள் வாழும் இடங்களை நோக்கி வர ஆரம்பித்து விட்டது. யானைகளுக்கு ஆறறிவில்லை. அறிவுள்ள மனிதர்கள் இனவாத, பிரதேச வாத, அரசியல் போட்டிகள் இல்லாத முறையில் சிந்தித்து யானையைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாதுபோனால் யானையினால் உண்டாகும் பாதிப்புகள் பலமாக இருக்கும். பல குடும்பங்கள் தெருவில் அநாதைகளாக நிற்கும்.

**உமர் அலி உஸ்மான்**

# அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நம்பிக்கையுள்ளதாக மாற்ற வேண்டும்

## நாவிதன்வெளி கூட்டத்தில் முஷாரப் எம்.பி. தெரிவிப்பு



(பெரியநீலாவணை, மத்தியமுகாம் செய்தியாளர்கள்)

நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் நாவிதன்வெளி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் வியாழக்கிழமை (16) காலை இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உரையாற்றும்போது, பிரதேச மட்டத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களை நம்பிக்கை உள்ளதாக உயிருள்ளதாக மாற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், பிரதேச மட்டத்திலான அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் என்பது அந்த பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கும் ஒரு கூட்டமாகும். திணைக்களங்களின் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், தமது நாளாந்த பணிகளையும் இடைநிறுத்தி விட்டு இந்த கூட்டத்திற்கு வருகிறார்கள். எனவே கூட்டம் நடைபெற்றது என்பதற்கு அப்பால் மக்களுடைய பிரச்சினைகள் முன்வைக்கப்படும் போது அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் நாம் இருக்கின்றோம். எதிர்காலத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நிறைவேற்ற எதிர்காலத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இக்கூட்டத்தில் இவ்வாண்டில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள், கல்வி, சுகாதாரம், காணி மற்றும் ஏனைய சேவைகள், விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் பிரதேச சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட சில பிரச்சினைகளை உரிய நிறுவனத்தின் அதிகாரிகளை தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் பாராளுமன்ற உறுப்பினரால் இங்கு எடுக்கப்பட்டது.


எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உயர் அதிகாரிகள், திணைக்களங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்கள், பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் எம்.பி. பியசேன விபத்தில் சிக்கி உயிரிழப்பு



## பயணித்த மோட்டார் சைக்கிள்மீது பஸ் மோதியதால் சம்பவம்





(ஆலையடிவேம்பு, திகாமடுல்ல செய்தியாளர்கள், பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.எச்.பொடியப்பு பியசேன விபத்தொன்றில் சிக்கி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார்.

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பொதுமயானத்திற்கு முன்பாக வெள்ளிக்கிழமை(17) காலை 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த அவர் மயானத்தின் பக்கம் திரும்ப முனைகையில், பொத்துவில் பிரதேசத்தில் இருந்து பொலன்னறுவை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் மோதுண்ட நிலையில் இவ்விபத்து இடம்பெறுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அக்கரைப்பற்று பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். வழமையாக இவர் மயானங்களுக்கு சென்று துப்புரவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் புதிய அலுவலகக் கட்டிடம் திறந்து வைப்பு



(மண்முனை செய்தியாளர்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா வெள்ளிக்கிழமை (17) நடைபெற்றது.

மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான அகிலா கனகசூரியம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியநாதன் மற்றும் பொறியியலாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன்போது பாடசாலை மாணவர்களின் நடனங்களும் இடம்பெற்றன.

# அக்கரைப்பற்று கிழக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி காரியாலயம் புதிய இடத்தில் ஆரம்பம்



(அக்கரைப்பற்று செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மீராநகரில் இயங்கி வந்த கிழக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி காரியாலயம் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக நீரில் மூழ்கியதனால் அவ் வங்கியானது அக்கரைப்பற்று சின்ன மௌலானா வீதி நகரப் பிரிவு 2இல் புதிய இடத்திற்கு மாற்றம் செய்து திறந்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதிகளாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் ஆகியோர் கலந்துகொண்டு வங்கியை திறந்து வைத்ததுடன் வீடமைப்பு சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கும், சிப்தொற புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் பணமும் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது சிறப்பு அதிதிகளாக உதவிப் பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், வங்கி வலய கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சங்க உறுப்பினர்கள், கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்த 5 இலட்ச ரூபா நிதி ஒதுக்கீடு



(மாளிகைக்காடு செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேச சபையின் 60ஆவது சபை அமர்வு நிந்தவூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர் தலைமையில் வியாழக்கிழமை (16) இடம்பெற்றது.

சபையின் வழமையான நடவடிக்கைகளை தொடர்ந்து நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் ஏற்பட்டுவரும் கடலரிப்பு குறித்து அப்பிரதேசவாசிகள் தனக்கு மகஜர் ஒன்றை கையளித்ததாகவும், குறித்த கடலரிப்பிற்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியதாகவும் தவிசாளர் பிரேரணையொன்றை முன்வைத்திருந்தார்.

அதன் பிரகாரம், ஒலுவில் துறைமுகத்திலுள்ள பாராங்கற்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் முதற்கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு பிரதேச சபையினால் 5 இலட்ச ரூபா ஒதுக்கீடு செய்வதாகவும் சபை உறுப்பினர்களினால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த சபை அமர்வானது, இறுதி அமர்வென்பதினால் சபை உறுப்பினர்கள் பிரியாவிடை உரை நிகழ்த்தியிருந்தனர்.

கடந்த காலங்களில் தவிசாளரின் வழிகாட்டலில் இச்சபை சிறப்பாக வழிநடத்தப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தமையை சகல உறுப்பினர்களும் மேற்கோள்காட்டி பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த சபையினுடைய செயற்பாடுகள் அனைத்தும் ஊரின் நன்மை கருதியே அமைந்திருந்தன. எந்தவொரு கட்சியை பிரதிபலிக்கும் செயற்பாடுகளாகவோ அல்லது கட்சியின் ஆதரவாளர்களின் நலனை முதன்மைப்படுத்தியதாகவோ அமைந்திருக்கவில்லை. ஊரின் நலனில் அக்கறை கொண்டு மூன்று கட்சி உறுப்பினர்களும் வழங்கிய ஒத்துழைப்பினால் தான் நிந்தவூர் பிரதேச சபை முதல் நிலை வகிக்கின்றது என தவிசாளர் தாஹிர் தெரிவித்தார்.

# சாய்ந்தமருதில் 9 வீடுகள் கையளிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான வீடுகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டிலும், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீமின் நெறிப்படுத்தலிலும் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

மேலும் அதிதிகளாக சமுர்த்தி மகாசங்க முகாமையாளர் ஏ.எல்.யூ.ஜுனைதா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், பிரிவுக்கான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 9 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு 'மருதூர் கொத்தன்' கலையரங்கம் ஒப்படைப்பு





(பெரியநீலாவணை செய்தியாளர்)

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, தேசிய பாடசாலைக்கு சுமார் மூன்று மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மருதூர் கொத்தன் கலையரங்கத்தை உத்தியோகபூர்வமாக பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் புதன்கிழமை (15) நடைபெற்றது.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் மருதூர் கொத்தன் எனும் புனைப்பெயரில் இலக்கிய உலகத்தில் வலம் வந்த இலக்கியவாதியுமான மர்ஹூம் வி.எம். இஸ்மாயில் நினைவாக இந்த மருதூர் கொத்தன் கலையரங்கம் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கலையரங்கத்தை அவருடைய புதல்வர் பொறியியலாளர் ஆரிப் இஸ்மாயில் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர்களான யாழ். மாவட்ட குடியியல் மேல் நீதிமன்ற நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப், ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிரதிப் பணிப்பாளர் எம்.பி.அப்துல் வாஜித், பதில் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.பதுறுத்தீன், ஓய்வுபெற்ற பாடசாலையின் முன்னாள் அதிபர்களான ஏ.எல்.சக்காப், ரி.எல்.எம்.அமினுத்தீன், எஸ்.எல். ஜலால்தீன், ஏ.ஆர்.றாஸிக் ஆகியோரும் மருதமுனை அல்-ஹிக்மா பாடசாலையின் அதிபர் எம்.எல்.ஏ. மஹ்றூப், மருதூர் கொத்தனின் மருமகன் கலில் கபூர், அவருடைய குடும்ப உறுப்பினர்கள், பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.









*மருதமுனை சைல்ட் பெஸ்ட் ஆங்கிலக் கல்லூரியின் 18ஆவது ஆண்டு நிறைவும் பாடசாலை தின நிகழ்வும் அண்மையில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி அஷ்ரப் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆங்கில மொழிப்பிரிவின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை கடற்படையின் கல்முனை முகாம் கட்டளைத் தளபதி தம்மிக்க ஏக்கநாயக்க, தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல் சத்தார், சீ.ஐ.சீ பிரைவட் லிமிட்டட் பிரதேச விற்பனை முகாமையாளர் எம்.பி.பவ்க் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டிருந்தனர். இதன்போது மாணவர்களுக்கு அதிதிகளால் பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டன. (மருதமுனை செய்தியாளர்)*



# மனதில் நீங்கா மலையகக் கலைகள்

## அர்ச்சுனன் தபசு

பாகம்–15

**தங்கராஜா யுவராஜ்**

மலையகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சம்பிரதாயப்பூர்வ, பாரம்பரிய விடயங்கள் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றில் பிரதானமானவை இந்த கூத்து வடிவங்களாகும், அவை அந்தந்த இடம், தொழில், அவர்களது கலாசாரம் என்ற அடிப்படையில் மாறும். ஆனால், அவர்கள் அந்த கூத்து வடிவங்களை பொருள், கருத்து மாறல் நிகழ்த்தி வருவதே அவற்றின் சிறப்பம்சம்.

அந்தவகையில், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட மலையக மக்கள், தாம் வரும்போது தாம் பாடி பயின்ற கலை வடிவங்களையும் தம்மோடு கொண்டுவந்தனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட கலை வடிவங்களில் பல அழிந்துவிட்டாலும், சில கலைகள் மருவி தற்போதைய கால, பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப



நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சில கலைகள் அல்லது கூத்துகள் குறிப்பிட்ட நேர, கால அளவில் இடம்பெறுகின்றன.

ஒருசில கூத்துகள் இரவு முழுவதும் அதாவது, இரவு ஒன்பது மணியளவில் தொடங்கி காலை ஆறு மணிவரை இடம்பெறும். இன்னும் சில நான்கு அல்லது ஆறு மணிநேர கூத்துகளாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இந்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்து வடிவமானது இரவு முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றது, அதன்படி இந்தத் தொடரில் மலையகத்தின் பிரதான கூத்து வடிவங்களில் ஒன்றான அர்ச்சுனன் தபசு கூத்து தொடர்பில் விவரமாக, விரிவாக கதைப்போம்.

அதற்கு முன் இந்த கூத்துகள் நிகழ்த்தப்படும் இடம் மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. இந்த இடம் பெரும்பாலும் வெட்டவெளியான சமய நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் ஒரு மூலையில் நாடக மேடை அமைக்கப்படும்.

அந்தந்த நாடகத்திற்கு ஏற்றவாறு கம்பம் (தபசு மரம்) நடவேண்டும் என்றால் அதற்கும் தனியான இடம் ஒதுக்கப்பட்டு அலங்கரிக்கப்படும்.

குறிப்பாக, இந்த நாடகங்களுக்கான மேடைகள் அமைக்கப்படும்போது தரையில் அமைக்கப்பட்டு மேல் கூரை மாத்திரம் இடப்படும். இதற்கு பிரதான காரணம், அந்த கலைஞர்கள் பெரும்பாலும் அருள் வந்து ஆக்ரோஷத்துடன் ஆடுவர். இவர்களுக்கு மேடை அமைக்கும் பட்சத்தில் அது உடைந்துவிடக் கூடும். இதன் காரணமாக இந்த மேடைகள் தரையில் அமைக்கப்படுகின்றன.

அந்த மேடை பிரதானமாக இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படும். அதில் முன்பக்கம் நாடகம் ஆடுவதற்கும், பின்பகுதி பாடல் பாடுபவர்கள் மற்றும் நாடக கலைஞர்கள் தயாராகுவதற்குமான பகுதியாகும்.

அந்த மேடையில் பின் பக்கத்தில் பாடல் பாடுபவர்கள், டோல் மற்றும் இதர இசைவாத்திய கலைஞர்கள் மற்றும் அந்த நாடகத்திற்கு உரித்தான வேடமிட்ட கலைஞர்கள் என அனைவரும் இருப்பர்

இவர்களை வழிநடத்தவும், அடுத்தடுத்த கலைஞர்களை அனுப்புவதற்கும், பிரதானமாக வாத்தியார் எனப்படுபவர் இருப்பார்.

அதாவது, இந்தக் கூத்து அல்லது நாடகத்தை முன்நின்று கற்றுத்தருபவர், அந்தந்த வேடங்களுக்காக குரல் கொடுக்கவும், பாடல்களைப் பாடவும் அத்தோடு அடுத்து யார் சென்று ஆடவேண்டும் என்று கூறுவதற்கும் தயாராக இருப்பார்.

இந்த கூத்துகளில் சில கதாபாத்திரங்கள் அந்த நாடக மேடைக்குள் அலங்கரிக்கப்பட்டாலும், சில கதாபாத்திரங்கள் மேடைக்கு வெளியில் வேடம் தரிப்பர்.

இதற்குப் பிரதான காரணம், அந்த கதாபாத்திரங்கள் தாங்கள் ஆடிவரும்போது பந்தங்களை தரித்து ஆடி வருவர். அவர்கள் ஆடிவரும்போது தீ பெரும்பாலும் தப்பு இசைக்கப்படுவதனால் அவர்களின் ஆட்டம் மிகவும் ஆக்ரோஷமாக இருக்கும்.

இவ்வாறான சிறப்பமசங்கள் கொண்ட இந்த நாடகத்தின் முழு வடிவத்தை பார்ப்போம் மகாபாரதத்தின் ஓர் இணைக்கதையை அடிப்படையாகக்கொண்டு இந்த அர்ச்சுனன் தபசு நிகழ்த்தப்படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் தங்களின் நாடு, நகரம், வீடு, வாசல் என்பவற்றை வைத்து கௌரவர்களிடம் பகடையாடும் சந்தர்ப்பத்தில், சகுனியின் சூழ்ச்சியால் பாண்டவர்கள் தோல்வியுற்று கௌரவர்களிடம் அனைத்தையும் இழக்கின்றனர்.

இவ்வாறு சகுனியின் சூழ்ச்சியால் தாங்கள் இழந்ததை மீண்டும் பெறவேண்டுமானால் பாண்டவர்களில் ஒருவர் காட்டுக்குச் சென்று கழுமரத்தில் ஏறி தவம் செய்யவேண்டும் எனும்போது இதற்காக முதுகுப் பகுதியில் மச்சரேகைகொண்ட அர்ச்சுனன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இவர் தவத்திற்குத் தகுந்தவர் தானா என சோதித்துப் பார்ப்பதற்காக அர்ச்சுனன் செல்லும் வழியெல்லாம் கிருஷ்ணன் மாறுவேடங்களில் சென்று அவரை சோதிக்க, இவை அனைத்திலும் வெற்றிகொண்ட அர்ச்சுனன், பத்ரகாளியின் உதவியுடன் கழுமரத்தில் கடுமையாகத் தவம் புரிந்து வெற்றிகொண்டு, ஏழக்கன்னியை மணமுடிக்கும் கதையே அர்ச்சுனன் தபசு.

இதில் அர்ச்சுனன், கௌரவர்கள், கிருஷ்ணன், சகுனி, பேரண்டன், பேரண்டக்கன்னி, பத்ரகாளி, நாகக்கன்னி, மோகக்கன்னி, ஏழக்கன்னி, மாரியம்மன் போன்ற பாத்திரங்கள் பிரதானமானவை.

இதில் அர்ச்சுனனை மையமாகக்கொண்டு இந்த கதை நகர்ந்து செல்லும். மேலே கூறியதுபோன்று சகுனியின் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்ட பாண்டவர்களைக் காக்கவும் அவர்களை கௌரவர்களிடமிருந்து மீட்கவும் அர்ச்சுனன் தயாரானபோது கிருஷ்ணன் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இது உன்னால் முடியாது, நீ அதற்குத் தகுதியற்றவன் எனக் கூற, கிருஷ்ணனின் எண்ணத்தை அர்ச்சுனன் மாற்ற முடிவு செய்து தபசு மரம் ஏறி தவம் செய்து பாண்டவர்களைக் காப்பாற்ற முற்படுகிறார்.

*தேரு கோப்புரவி கட்டி*
*ஜெய கம்ப கொடி பறக்க*
*அழகான தேரில் ஏறி அர்ச்சுனன்*
*வாறேன்*
*ஹரஹரா.....*

*தேச தேச ராஜரெல்லாம்*
*சபையில் கூடவே*
*அழகான தேரில் ஏறி அர்ச்சுனன்*
*வாறேன்*
*ஹரஹரா.....*

*காலிலேயும் வெள்ளிமணி*
*கழுத்திலேயும் தங்ககார*
*அழகான தேரில் ஏறி அர்ச்சுனன்*
*வாறேன்*
*ஹரஹரா.....*

*ராஜனும் வாறேன் அர்சுனராஜனும்*
*வாறேன்*
*ராஜனும் வாறேன் அர்சுனராஜனும்*
*வந்தேன்*
*கைதனிலே கத்தி தகதகவென*
*கானகம் வெற்றி....*

*மாரியுனை நம்பி மண்ணுக்கு நானும்*
*வந்தேன்*
*காளியுன்னை நம்பி களத்துக்கு*
*நானும் வாறேன்........:*
*நானும் வாறேன்........:*

இதில் முதலில், அர்ச்சுனனாக வேடமிட்டிருப்பவர் தன்னை மேடையில் பார்வையாளர்கள் முன்னிலையில் அறிமுகப் படுத்திக்கொள்வார். இவ்வாறு ஒவ்வொரு கதாபாத்திரமும் கூத்தில் தன்னைத்தானே பாடல்கள் மூலம் அறிமுகப்படுத்திக்கொள்வர். இங்கு கதையானது பாடல்கள் ஊடாக அந்தந்த பாத்திரங்கள் மூலமாக நகர்ந்து செல்லும்.

மேடைக்குச் சற்று அருகாமையில் அர்ச்சுனன் தவம் செய்வதற்காக 60அடி உயரமான மரமொன்று அலங்கரிக்கப்பட்டு, நாட்டப்பட்டிருக்கும். அம்மரத்தின் உச்சியில் வட்ட வடிவிலான தட்டு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். கூத்தின் இறுதிக்கட்டத்தில் அர்ச்சுனன் ஒவ்வொரு படிகட்டுகளில் கால்வைக்கும்போதும், அந்தந்த படிகளுக்கேற்ப பாடல்கள் பாடியவாறு அந்த மரத்தில் ஏறுவார்.

*ஒன்றாம் படிதளமாம் நம்ம*
*அர்ஜுன ராஜன்*
*ஓலைப்பூ மண்டபமாம்*
*இரண்டாம் படிதளமாம்*
*நம்ம*
*அர்ஜுன ராஜன்*
*இரட்ணகிளி மண்டபமாம்*
*மூன்றாம் படிதளமாம் நம்ம*
*அர்ஜுன ராஜன்*
*முத்தழகு மேடைகளாம்*
*நான்காம் படிதளமாம் நம்ம*
*நவரட்ண மேடைகளாம்*

அந்த பாடல்கள் 18 படிகளில் ஏறும் வரையிலும் பாடப்பட்டு பின் வேலமரத்தின் உச்சியில் பொருத்தப்பட்டிருக்கும் வட்ட வடிவிலான தட்டில் நின்று அர்ச்சுனன் தவம் புரிவார்.

யாதேனும் ஒரு பட்சி (பறவை) வானில் பறப்பதைக் கண்டவுடன், தவத்தை நிறைவு செய்துகொண்டு அர்ச்சுனன் மரத்திலிருந்து கீழே இறங்கி கூத்தைக் காண வந்த மக்களுக்கு ஆசி வழங்குவார்.

இதையடுத்து அர்ச்சுனனும் ஏழகன்னி உட்பட சில கலைஞர்கள் தாங்கள் தரித்த வேடத் துடன் வீடு வீடாகச் சென்று அரிசி, காசு போன்ற வற்றை தான மாகப் பெற்று வந்து அன்ன தானமாக வழங்குவர்.

இதுவே அர்ச்சுனன் தபசின் கதை சுருக்கம். இந்தத் தொடரின் அடுத்தடுத்தப் பாகங்களில் இந்த அர்ச்சுனன் தபசு நாடகத்தின் விரிவாக, விபரமாக விடயங்களை ஆராய்வதே இந்த பத்தியின் பிரதான நோக்கம், மலையகத்தில் தற்போதுள்ள கால சூழ்நிலைகளுக்கேற்ப சில கலைகள்




அழிந்து விட்டாலும் பல இடங்களில் இந்தக் கலைகளை அழியவிடாது கட்டிக் காத்துவரும் அந்த சில கலைஞர்களை ஊக்குவிக்கவும், எமது பராம்பரிய கலைகளையும், மரபுகளையும் மீண்டும் ஒருமுறை எம்மவர்களுக்கு ஞாபகமூட்டும், ஒரு சிறு முயற்சியே இது.

**தொடரும்**









**(இந்திய வீட்டுத்திட்டமும் போலி அரசியலும்)**

**கங்காணி:** பாருங்கடி அர நேரத்துக்கு மேல ஆச்சி வெயிலு வெளுத்து வாங்குது.. தண்ணித்தாகோ. சாயத்தண்ணி இருக்கா புள்ளங்களா?

**சரசு:** ஆறிப்போய்த் தாங்கய்யா இருக்கு பரவாலயா?

**கங்காணி:** பரவால புள்ள கொண்டா.. சரியான தண்ணி தாகோ..

**சரசு:** இந்தாங்கய்யா.. அதுவு கொஞ்சோதா இருக்கு..

**கங்காணி:** (தண்ணி குடித்தபடி) அம்மாடி இப்பதாபுள்ள கொஞ்சோ நல்லா இருக்கு..

**சரசு:** என்னதாங்கய்யா செய்ய. இப்பலா நெனச்சா மழ பெய்து இல்லனா காஞ்சிகெடக்குது.. எல்லாமே மாறிபோச்சிங்கய்யா..

**கங்காணி:** இப்பலா எங்க புள்ள? அந்த காலத்துலயிலா மழ பேய வேண்டிய நேரத்துல சரியா மழபேய்யு.. இயற்கையா எல்லாமே பாக்க ஆசயா இருக்கு. ஆனா இப்ப எங்க புள்ளங்க? எந்த நேரத்துல என்னா நடக்குனே யோசிக்க முடியாம இருக்கு.

**கலை:** ஆமாங்கய்யா மனுசந்தா நிமுசத்துக்குநிமிச மாறுறானே. இப்பலா இயற்கயா நடக்குறதகொட அனுபவிக்க முடியாம இருக்கு.. கண்ணுமுன்னுக்கு நடக்குற அநியாயோ ஒன்னா? ரெண்டா? அதா அந்த கடவுளுக்கே பொறுக்கல..

**கங்காணி:** என்னா புள்ள சொல்ல.. விஞ்சானிங்க சொல்றாங்களா பூமி இப்ப அவ்ளோசூடா இருக்குதா.. இன்னு கொஞ்ச நாளுல எல்லாத்தயு மண்ணோடமண்ணா கொண்டுபோக போகுது பாரு..

**சரசு:** ஐயா இன்னொரு பக்கோ நம்பளே நமக்கு குழிதோண்டுற கத மாதி இப்ப பூமிக்கு பாரமா கெடுதலா நெறய விசயோ செய்றோங்கய்யா.. இப்பலா எல்லாமே மனுசனுக்கு தேவ இல்லாத நஞ்சி தானேங்கய்யா விக்கிறாங்க? சாப்புட்ற மரக்கறில இருந்து குடிக்கிற தண்ணி வரக்கு நஞ்சி என்னதாங்கய்யா செய்றது?

**கலை:** தண்ணினு சொல்லயுந்தா நெனவு வருது.. எந்த காலத்துலங்கய்யா நாம கடயில போய்டு தண்ணி வாங்கி குடிச்சிருக்கோ? இப்ப டவுன்சைட்ல உள்ளோங்களா தண்ணியகொட சல்லிய குடுத்துவாங்கி குடிக்கிறாங்க.. அந்த தண்ணி நூறு வீதோ சுத்தமானதுனு வேற சொல்லிக்கிறாங்கய்யா..

**கங்காணி:** ஆமா புள்ள என்னாத்தா செய்ய. நம்ப எஸ்டேட்லயே பொறந்து வாழ்ந்து பழகிட்டோ. டவுன்சைட்லா இனி எடுக்குறதுக்கு இல்லதானே புள்ளங்க.. அதோட சுத்தமு கொறவுதானே புள்ள. அதுதா தண்ணிக்கு காசு.. நம்பலா கொஞ்ச குடுத்துவச்சவுங்கனு சொல்லு..

**கலை:** என்னத்தங்கய்யா குடுத்து வச்சிருக்கோ? ஒன்னு இருந்தா இன்னோனு இல்ல. இதுதா நம்ப வாழ்க்க.. என்ன சொன்னாலு எல்லாமே நிரந்தரம் இல்லாத வாழ்க்க..

**சரசு:** ஏ புள்ள யோசிக்காதடி. இருக்குறத வச்சி பொழக்கிற வழிய பாப்போ.. செய்தி கேட்டியா? ஐயா இந்தியாவுல இருந்து நமக்கலா வீடு கட்டிகுடுக்க காசு குடுத்துருக்காங்களாமே?

**கங்காணி:** ஆமா புள்ளங்க.. நம்ப தம்பி எம்.பிக்கிட்டதா குடுத்துருக்காங்க.. எப்புடியு நம்ப எஸ்டேட்டுக்கு கெடக்கு. பொறுமயா இருங்கடி.. நீங்களா எந்த பக்கோனு யாருக்கு தெரியு?

**கலை:** ஆமாங்கய்யா.. எல்லாமே பாத்துபாத்துதானே செய்வாங்க.. யாருக்கு எது தேவையோ அத செய்ய மாட்டாங்க.. என்னத்த வீடுகுடுத்து பிரயோசனோ? அப்புடித்தா முன்ன கட்டிக்குடுத்த வீடலா தெரியுந்தானே? லயோமாதி கட்டக்கூடாதுனு ஏதோ மாடிவீடு மாதி கட்டுனாங்க. ஆனா அதுவு டபல் லயோமாதி அடசலாத்தானே இருக்கு.. கேட்டா மலையக மக்களுக்கு இனி லயோ இல்ல, அப்புடி இப்புடினு சொல்லுவாங்க..

**சரசு:** அந்த கததா எல்லாருக்கு தெரிஞ்சதாச்சே.. இப்ப வார வீட்டுதிட்டத்த என்னாலா சொல்லி கட்டுவாங்களோ தெரியல. பாப்போ என்னாங்கய்யா? அதுலயு ஆள்பாத்துதானே செய்வாங்க. நமக்களா எங்க? நாங்க கடசிவரக்கு சொந்தமே இல்லாத நெலத்துக்கு ஒழச்சி ஒழச்சி மண்ணோட மண்ணா போய்ருவோ..



**கங்காணி:** ஏ புள்ளங்க வீட்டுதிட்டோ வந்தாலு எல்லாருக்கு குடுக்க ஏலாதுதானே புள்ள. எஸ்டேட்டுல பேர் பதிஞ்சவுங்களுக்குதா குடுப்பாங்க அதுலயு வீட்டுல ஆம்பள புள்ளங்க ரெண்டு மூணு பேருக்கு கூட இருந்தாத்தா கெடக்கு..

**கலை:** நல்ல கதங்கய்யா.. அப்ப இதுக்குனு ஆம்பள புள்ளயாவாயா பெத்துக்க ஏலு? யாருக்கு வசதி கொறவோ அவுங்களுக்குத்தானே குடுக்கனு? என்னமோ போங்கய்யா.. எல்லாமே ஆசகாட்டி மோசோ பண்ற வேலங்கய்யா..

**கங்காணி:** ஏ புள்ளங்களா மோட்டர் சத்தோ கேக்குதுதானே.. தொர வாராருபோல வேலய பாருங்கடி..

**ம.அகிலேஸ்**

## நோன்பை அழைக்கின்றோம்..!

கனமான உள்ளங்களும்
கனிவாக வருக
பணக்கார
எண்ணங்களும்
பணிவாக வருக
வணக்க வழிபாடுகளும்
ஏணியாக வருக
சனங்களெல்லாம்
கூடியே
மகிழ்வுற வருக

பாவக் கறைகளும்
கழுவப்பட வருக
கோபக் கதைகளும்
நழவிப்போக வருக
சாபத் திட்டுக்களும்
முழுகிட வருக

தீபமாய் ரமழானே
நீயே வருக

இரவும் பகலும்
நன்மைகள திரிக்க
வருக
உறவுகளும் சேர்ந்தே
உன்னதமாக வருக
வரவுகளும்
"ஸதகாவாகி"
மேன்மையாக்க வருக
கரங்களும் கொடுத்தே
விண்ணைத்தொட வருக
நரக நெருப்பிலிருந்து
விடுதலையாக வருக

சுவர்க்கத்துப்
பூங்காவில்
உலாவர வருக
"லைலத்துல்கத்ரை"
அடைந்தே
புனிதமாக்க வருக
ஏழைகளின் பசியறிந்தே
உணவளித்திட வருக

பிறையை எதிர்பார்த்தே
குழுமி நிற்கின்றோம்
மறையை ஓதியே
மனநிறைவு
பெறுகின்றோம்
இறையைப் பயந்தே

உலகில்
வாழ்கின்றோம்
நிறைவான
வாழ்வுக்கு
"நோன்பை"
அழைக்கின்றோம்..!

மாண்பு நிறைந்திட்ட
நோன்பே வருக
அன்பால் ஐக்கியம்
வளர்ந்திட வருக
குணமும் ஓங்கியே
பாவமுமழிய வருக
புனிதத்தால் நிறைத்தே
மனிதமாக்க வருக..!

*- ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்.-*

## பயணிகள் கவனத்துக்கு.....

தடக்... தடக்....
தடக்.... தடக்....
தொடரிச் சத்தம்
செவிப்பறை தொட்டு
மீண்டும் திரும்புகிறது
பாவம் சுமத்தப்பட்ட ஏவாளுக்கு
பாவ விமோசனம் ஓதுகின்ற
ஆதாமின் அலப்பறை.....

காதுச் சவ்வு உடைந்து
ரத்தம் கசிகிறது!?
பயத்தில் உறைந்த ஏவாளின்
விழிகளில்
கடவுளின் கூர்வாள்
சாத்தானை வரைகிறது
சிறகுகள் ஒவ்வொன்றாய்
உருவப்படுவதை
அவள் அறிந்தாளில்லை!?

ரயில் பெட்டி எங்கினும்
நிறைகிறது
அழுக்குகளின் வாசம்
பயணிகள் முகங்களை
முத்தமிடத் துடிக்கும்
ஈக்களின் இரைச்சலில்
காற்று கலவரமடைகிறது
சலவைக்குப் போடாத உள்ளாடை
பெருமைகள் திணிக்கிறது!?

ஒருவழியாய் முடிவுக்கு வருகிறது
நீண்ட தொடரிப் பயணத்தின்
தொந்தரவு
ஆதாம் ஏவாளின் மூச்சுக்
காற்றின்
இடைவெளி அதிகரிக்கிறது!?

மனிதனாய் என்னைத் துவைத்து
வெளுக்க
மனைவியை அழைக்கிறேன்
கைப்பேசியில்.....

குளிப்பதற்குத் தயாராய்
இருக்கும்
வெது வெதுப்பான தண்ணீரில்
சற்று அதிகமாகவே
கலந்துவிடு
"டெட்டால்"......

*- கனகசபாபதி
செல்வநேசன்
அல்வாய்.-*

## அருமருந்தே ரமழானே வருகவே!

அண்டந்துக்கு கிடைத்த
அருமருந்தே
அல்லாஹ்வின் அருளே
அகநோய் போக்கும்
அருளாளனின் அமுதே
அருள் பொழிந்த
ரமழானே
வருக வருகவே

காசினிக்கு கிடைத்த
கனி அமுதே
கர்த்தனின்
கருணையே
கல்புகளின் கறை
போக்கியே
கனிவான ரமழானே
வருக வருகவே

பசியை உணர்த்தி
பகிர்ந்துண்ண பணித்த
பரமனின் அருளே
பாருக்கு கிடைத்த
பரிசே
ரமழானே வருக
வருகவே

இரவில் நின்று
வணங்கி
இறைமறை ஓதி
இன்பம் பெற
இறை பொருத்தம்
பெற்று
இகத்தில் இனிதாய்
இன்புற்று வாழ
இறையளித்த
ரமழானே
வருக வருகவே

குவலயத்தில்
குன்ஹீதாத்தின்
குணம் கொண்டு
ஈகை செய்து
இறை பொருத்தம் பெற
இறையளித்த
இனிய ரமழானே
அருமருந்தே
வருக வருகவே!

*- கவியாக்கம்
காத்தநகர்
அபூ அஸ்மியா-*

## ஓடி மறைந்த உறவுகள்

நாடிச் சென்ற
அண்ணைகளை
கூடி விரட்டிய தங்கைகள்
ஊட்டி வளர்த்த
அண்ணையை
ஊழையிட்டி வெறுத்த
மக்கள்
பாசங்காட்டிய தந்தையை
பரிதவிக்கவைத்த மகள்
கூடி வாழ்ந்தால் கோடி
நன்மை
என்ர கோட்பாட்டை
ஏற்போம்
ஓடி மறைந்த உறவுகள்
ஒட்டி வாழும்
இதயங்களாக மாறும்

உலகில்
உன்னதமடைவாய்
வாழ்வில் உயர்வடைவாய்
உள்ளம் தெளிவு பெறும்
காசினியில் கனிவாக
வாழ்வாய்
காலமெல்லாம்
உறவு மலரும்

*- அபூ அஸ்மியா-*

## தூறல்கள்



## உருக்கமான கதை!

ஒரு பதினைஞ்சு வயசுப் பையன். பிறந்ததிலிருந்தே அவனுக்குப் பார்வை கிடையாது.

ஒருநாள் தன்னோட அம்மாவைக் கூப்புட்டு, "ஏம்மா! நான் பிறந்தப்பவே குருடுன்னு உனக்குத் தெரியுமில்லே? இந்த உலகத்துல நான் எதைப் பார்த்து சந்தோஷப்பட முடியும்? எதுக்காக என்னை இவ்வளவு வருஷம் வளர்த்தே? அப்பவே கழுத்தைத் திருகி கொன்னுருக்கலாமே!"ன்னு ஆதங்கமா கேட்டான்.


அதுக்கு அம்மா, "பண்ணியிருக்கலாம்ப்பா... ஆனா நீ பொறந்ததுமே அம்மா"ன்னு கூப்புட்டு, அதைக் காதார கேட்டதும், ஆயுசு பூராவும் அந்த சந்தோஷம் வேணும்ன்னு தோணுச்சு. இப்ப உன்னை விட்டா வேற யாராலே எனக்கு அந்த சந்தோஷத்தை கொடுக்க முடியும்?" அப்படினாங்க.

உடனே பையன், "கொஞ்சம் என் பக்கத்துல வாம்மா"ன்னான். அம்மா பக்கத்துல வந்ததும் பையன், அம்மாவை இறுகக் கட்டிட்டு, "அம்மா... இப்ப உலகம் முழுவதையும் நான் பார்த்துட்டேம்மா. இனி நான் பார்க்க ஒன்றுமே இல்லை!"ன்னு அழுதான்.

சொன்னவர்: நடிகர் பாக்கயராஜ்




## காமராஜரின் நகைச்சுவை



கர்மவீரர் காமராஜர் ஒரு முறை, தஞ்சை மாவட்டத்தில் இருந்த பழைமையான கோயில் ஒன்றைப் பார்வையிடச் சென்றார். சிதிலம் அடைந்திருந்தாலும் புராதனமான அந்தக் கோயிலின் கட்டுமானம் அவரை வியக்க வைத்தது.


ஓர் இடத்தில் நின்றவர், "இந்தக் கோயிலைக் கட்டுனது யாரு?" எனக் கேட்டார்.

உடன் வந்த அதிகாரிகளுக்கு அதுபற்றி தெரியவில்லை. பதில் சொல்லத் தெரியாமல் விழித்தனர்.

உடனே, சிரித்துக்கொண்டே மேலே இருந்த டியூப் லைட்டை சுட்டிக்காட்டிய காமராஜர், "இவ்வளவு காலம் நிலைச்சு நிக்கிற இந்தக் கோயிலைக் கட்டியவர் யாருன்னு தெரியலே. ஆனா, ஒரு மாதம்கூட ஒழுங்கா எரியாத இந்த டியூப் லைட்ல உபயகாரர் யாருன்னு எவ்வளவு பெரிசா எழுதி வெச்சிருக்காங்கன்னு பாருங்களேன்" என்று கூற உடன் வந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்களாம்!

இன்று நகரத்தில் நாயை
வோக்கிங்
கூட்டிச் செல்லும்
பழக்கம்...
அன்று கிராமத்தில்
மாட்டை தண்ணி காட்ட
அழைத்துச் சென்றதன்
பரிணாம
வளர்ச்சியே..!





காலையில் 11 மணிக்கு ரீ குடிக்கப் போகும்போது, வாழைக்காய் பஜ்ஜியை கடித்துக்கொண்டே, மறு கையால் வயிற்றைத் தடவியபடி ''இந்த தொப்பையை மட்டும் எப்படியாச்சும் குறைக்கனும். இனி உடம்பைக் குறைச்சிட்டுத்தான் புதுசா துணி எடுக்கணும்'' எனச் சொல்லும் நண்பர்கள் இருவர், சரியாக மதியம் ஏதாவது ஒரு ஹோட்டலில் பிரியாணி சாப்பிடப் போயிடுறாங்க!

ரெட்டைப் பிள்ளைங்க
இருக்க வீடும், ரெண்டு குக்கர வச்ச
அடுப்பும் ஒண்ணு.
சவுண்டு வரும்போது இதுவா
அதுவான்னு கண்டுபிடிக்குறதுக்குள்ள
ஆவி போய்டும்...

## பாட்டியிடம் கண்கலங்கிய எம்.ஜி.ஆர்.

"உலகம் சுற்றும் வாலிபன்" படத்தின் படப்பிடிப்பிற்காக விழுப்புரம் அருகே ஒரு பிரம்மாண்ட செட் போடப்பட்டிருந்தது. இதை பார்வையிட நடிகரும் அந்தப் படத்தின் இயக்குனருமான எம்.ஜி.ஆர். தனது நீல நிற அம்பாசிடர் காரில் சென்று கொண்டிருந்தார். போகும் வழியில் காரிலேயே நன்றாக தூங்கிவிட விழுப்புரத்திற்கு 25 கிலோ மீற்றர் முன்பு வண்டியின் டயர் பஞ்சராகி விடுகிறது.

அப்போது கண் விழித்த எம்.ஜி.ஆர். தனது உதவியாளரிடம் தனக்கு மிகவும் பசிப்பதாகவும் அருகில் உணவகம் இருந்தால் ஏதாவது சாப்பிட வாங்கி வரும்படி கூறுகிறார். உதவியாளர் சிறிதுதூரம் நடந்துசென்று பார்க்கையில் அங்கு ஒரு கடை இருந்தது.

அங்கிருந்த பாட்டி பனங்கிழங்கு, வேர்க்கடலை, சீனிமுட்டாய் ஆகியவற்றை விற்றுக்கொண்டிருந்தார். அங்கு சென்ற உதவியாளர், எல்லா பண்டங்களிலும் ஒரு படி வாங்கிக்கொண்டு கடைசியாக 50 பைசா மதிப்புள்ள பொருட்களுக்கு 10 ரூபா கொடுத்தார். பாட்டி மீதி சிலரை கொடுக்க முற்பட "பரவாயில்ல பாட்டி நீங்களே வைச்சுக்குங்க" என்று கூறிவிட்டு வந்துவிடுகிறார்.

அந்த பண்டங்களின் சுவை எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்துவிட்டது. அதன் பிறகு அவர் படப்பிடிப்பிற்கு தளத்திற்கு போய் அன்றைய வேலையை கவனித்தார்.

மறுநாள் எம்.ஜி.ஆர். வெகு சீக்கிரமாகவே படப்பிடிப்பிற்கு கிளம்பி அதே பழைய இடத்தில வண்டியை நிறுத்தி உதவியாளரிடம் "போய் பனங்கிழங்கும் வேர்க்கடலையும் வாங்கிட்டு வாங்க" என்று கூறுகிறார். இது பல நாட்களாக தொடர்கிறது.

உதவியாளரும் வாங்கி வரும் போதெல்லாம் பாட்டிக்கு 10 அல்லது 20 அல்லது 50 ரூபாவை கொடுக்கிறார் ஆனால், அந்த பண்டங்களின் மதிப்பு 50 பைசா மட்டுமே. ஒரு நாள் இதேபோல் உதவியாளர் அங்கு போகும்போது கடையில் பாட்டி இல்லை. உடல்நிலை சரி இல்லாமல் வீட்டுக்குள் படுத்திருக்கிறார்.

இந்த செய்தியை எம்.ஜி.ஆரிடம் உதவியாளர் கூற "உடனே போய் அந்த பாட்டிக்கு என்ன ஆச்சுன்னு பார்த்துட்டு வாங்க" என்று சொல்லி அனுப்புகிறார். பாட்டியின் வீட்டுக்குச் சென்ற உதவியாளர் பாட்டியைப் பார்த்து நலம் விசாரித்து "உணவு செய்ய முடியுமா" என்று கேட்க, பாட்டி நெற்றியில் தைலத்தை தடவி விட்டு அவர்களுக்காக உணவை செய்து கொடுக்கிறார்.

பாட்டி: யாருக்கு தம்பி வாங்கிட்டு



போறீங்க?

உதவியாளர்: அது வேற யாரும் இல்ல பாட்டி நம்ம எம்.ஜி.ஆர்.தான்.

பாட்டி: ஐயோ அந்த தங்கமா அந்த மகராசன நான் பார்க்கனும்.

என்று கூறி கார் இருக்கும் இடத்திற்கு வருகிறார். அப்போது எம்.ஜி.ஆர். அவருக்கு 500 ரூபா தாளை கொடுக்க.

பாட்டி: அய்யா உன் முகத்தைப் பார்த்ததே போதும். உன்ன கட்டிபுடுச்சு ஒரு முத்தம் தரட்டுமா? என்று கேட்க,

எம்.ஜி.ஆர். உடனே காரிலிருந்து இறங்கி பாட்டியை அணைத்து ஆரத்தழுவி பாசத்தோடு முத்தமிட பாட்டி உருகிப்போய் கண்கலங்கி விடுகிறார்.

இந்த நிகழ்வுக்கு பின் படிப்பிடிப்பு முடிகிறது. படம் வெளியீட்டிற்கு தயார். ஆனாலும் திரை அரங்கு கிடைக்காத காரணத்தால் பட வெளியீடு தாமதமாகிறது. எனவே, வேறு படங்களில் எம்.ஜி.ஆர். நடிக்கத் தொடங்குகிறார்.

சில மாதங்கள் கழித்து ஒரு தேநீர்க் கடையில் பாட்டி ஒருவருடன் இதை பற்றி கேட்கிறார்.

"எம்.ஜி.ஆர். நடித்த அந்த படம் ஏன் இன்னும் வரல" என்று பாட்டி அங்கிருந்தவரை கேக்க,

"பண தட்டுப்பட்டால் எம்.ஜி.ஆரால் அந்த படத்தை வெளியிட முடியவில்லை" என்று அங்கிருந்தவர் கூறுகிறார்.

இதனை கேட்ட பாட்டி சில நாட்களில் எம்.ஜி.ஆரின் ராமாபுரம் வீட்டுக்கு சந்திக்க போகிறார். அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர் உணவருந்திக்கொண்டிருக்க, உதவியாளர் விழுப்புரம் கடை பாட்டி வந்திருப்பதை பற்றி கூறியவுடன் கையை கூட கழுவாமல் துண்டை எடுத்து உடம்பை போர்த்திக்கொண்டு உடனே வெளியே வந்து பாட்டியை பார்த்து அணைத்துக்கொண்டு கேட்கிறார்.

எம்.ஜி.ஆர்: என்னமா என்ன விஷயம். சொல்லுங்க உங்களுக்கு நான் என்ன செய்யனும் என்று கேட்க.

பாட்டி: எனக்கு ஒன்னும் வேணாம்பா. உன்கிட்ட கொஞ்சம் பேசனும்


எம்.ஜி.ஆர்: சொல்லுங்கம்மா நான் என்ன செய்யனும்?

தனது சுருக்கு பையில் இருந்து 1800 ரூபாயை எடுத்து பாட்டி எம்.ஜி.ஆரிடம் கொடுத்து

"படம் நின்னு போச்சாம். பண கஷ்டத்துல இருக்கியாம். அந்த படம் தியேட்டர்ல வரணும் கண்ணு. செய்யி தங்கம்" என்று கூற கண்கலங்கி விட்டாராம் எம்.ஜி.ஆர்.

"அதெல்லாம் பட விநியோகஸ்தர்களிடம் பேசி சரி பண்ணிட்டேன்மா. அடுத்த வாரம் படம் வந்துடும்" என்று கூறி பாட்டியை அனுப்பிவைத்தார்.

பின்பு ஒரு வாரம் கழித்து அதே பாட்டியின் ஊருக்குச் சென்று மணலில் உட்கார்ந்து அந்தப் பாட்டியுடன் சேர்ந்து திரை அரங்கத்தில் படத்தைக் கண்டு களித்தாராம் மக்கள் திலகம்.





காரைக்கவி

# சீத்துவக்கேடு 231

முந்தி அந்தக் காலத்தில பெட்டையள் கடற்கரை மணலில வீடுகட்டியும் விளையாடுவினம். உதை சிற்றில்கட்டி விளையாடல் எண்டு இலக்கியங்கள் சொல்லுது எண்ட ஆச்சி. முந்தி நாங்களும் உப்பிடி கடற்கரையில போய் சின்ன வயதில வீடு கட்டி விளையாடினாங்கள். ஏன் கனக்கப் போவான் வீட்டு முத்தத்தில கொட்டிக் கிடக்கிற ஐயனார் கோயில் புளுதியிலை எல்லாம் வீடு கட்டி விளையாடினாங்கள்.

இம்.... இப்ப வீடுவழியை முத்தமும் இல்லை. முத்தம் கிடந்தாலும் கோதாரி பிடிப்பார் கல்லைப் பதிச்சு புழுதி எண்ட சாமானே இல்லாமைப் பண்ணிப் போட்டினம்.

அதுமட்டுமே பெடி பெட்டைக்கும்தான் இப்பிடி புளுதியிலை விளையாட நேரம் கிடக்கே எண்டு பெரு மூச்சு விட்டா. உவளவை ஆத்தைமார் அதுகளை விளையாட விட்டால்தானே பள்ளிக்கம் போக முதலே நித்திரைப்பாயாலை எழுப்பி அதுகளை மூஞ்சை கழுவினபாதி கழுவாதபாதி எண்டு டியூசனுக்கு துரத்துவாளவை.

பேந்தும் பள்ளிக்கத்தாலை வந்த உடனேயே திண்டது பாதி தின்னாதது பாதிஎண்டு டியூசனுக்கு துரத்தி விட்டால் பேந்து அதுகள் உந்த மேச்சலுக்குப் போன மாடாடுகள் பொழுதுபடக் கட்டைக்கு வாறமாதிரி வந்து சேந்தால் அதுகள் எங்க விளையாடுறது எண்டா.

பேந்து உந்த சிற்றில் கட்டி விளையாடுறதைப் பற்றிக்கன பாட்டுகளிலை சொல்லிக்கிடக்கு எண்டாலும் அகநாநூறிலை இருந்து ஒரு பாட்டைப் பாப்பம் எண்டா. முந்தி ஒரு பெடிப்பிள்ளைக்கு பெட்டை ஒண்டில கண் கண்டியோ அடிக்கடி தாய் தேப்பன் இல்லாத நேரமாப் பாத்து பொட்டுக்குள்ளாலை போய் வரவெளிக்கிட்டான்.

ஆனால் அவனுக்கும் இப்பத்தையே சில பெடியள் மாதிரி போய்த்தனகிக் கினகித் தடவிக்கிடவி முசுப்பத்தியா இருக்கிறதுதான் நோக்கம் மற்றும்படி அவளைக் கலியாணம் கட்டுற எண்ணம் ஒண்டும் இல்லை.

அது பேக்கிணாந்திப்பெட்டை அவன்ரை விஷயம் விளங்காமை அவனை நம்பி அவன் இழுக்கிற இழுப்புக்கெல்லாம் போகத்துடங்கிப் போட்டுது.

உவன் விழுவான் உப்பிடிப்போறது வாறது அவன்ரை நோக்கம் எல்லாம் அவளின்ரை சிநேகிதப்பெட்டைக்கு ஒண்டுக்கு நல்லா விளங்கிப்போட்டுது.

அவள் ஒருநாள் அவனைக் கூப்பிட்டு என்ன கோதரிக்கு நீ இப்பிடி பதுங்கிப் பதுங்கி போறாய் வாறாய்.

இஞ்சை பார் நீ அவளைக் கட்டுறது எண்டால் கட்டு. ஆனால் உப்பிடி நீ வந்து போறதை மட்டும் நிப்பாட்டிப்போடு அவளின்ரை ஆத்தைக்காறி அறிஞ்சாள் எண்டால் இக்கணம் பெரிய பிரிச்சினை வரும் கண்டியோ.

பின்னேரங்களிலை வாடைக்காத்து கடக்கரையில கொண்ணந்து குவிச்ச மண்ணிலை அவள் சினேகிதப் பெட்டையளோடை மணல்வீடு கட்டி விளையாடினாலே உந்தப் பின்னேர வெய்யில் பட்டுக் கறுத்துப் போவாய் எண்டு விளையாட விடாமல் தடக்கிறவள் அவள்.

நீ இப்பிடி விளையாடிக்கொண்டு கொண்டு திரியிறதை அறிஞ்சால் கட்டாயம் அவளுக்கு காவல் போட்டிடுவாள் எண்ட படியால பேய் வேலை பாக்காமல் ஆற்றையும் குமரைச் சீரழிக்காமல் அவளைக் கட்டுற வழியைப் பார் எண்டு சொன்னாளாம் எண்ட செய்தியை குடவாயிற்கீரத்தனார் அகநாநூறிலை சொல்லி இருக்கிறார் எண்டு அந்தப் பாட்டைச் சொன்னா.

***"ஊதை ஈட்டிய உயர்மணல் அடைகரை,***
***கோதை ஆயமொடு வண்டல் தை,***
***ஓரை ஆடினும் உயங்கும்நின் ஒளிஎனக்***
***கொன்னும் சிவப்போள் காணின், வென்வேற்***
***கொற்றச் சோழர் குடந்தை வைத்த***
***நாடுதரு நிதியினுஞ் செறிய***
***அருங்கடிப் படுக்குவள், அறன்இல் யாயே"***

(அகநானூறு 60)


உதிலை பெரிய பகிடி என்னண்டால் பெட்டையள் இப்பிடிக் கரையில கட்டுற வீடுகளை, உதுகளை வரிமனை எண்டும் அந்தக்காலத்திலை ஆக்கள் சொன்னவை. அலை வந்து அழிக்குமாம். அப்ப உந்தப் பெட்டையள் ஒண்டும் செய்யேலாமல் ஙே எண்டு முழிச்சுக்கொண்டு நிக்குங்களாம் எண்டு மதுரை மருதனிளநாகனார் ஒரு பாட்டிலை சொல்லுறார் எண்டு ஆச்சி அந்தப் பாட்டையும் சொன்னா.

***"மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி***
***இளையோர் ஆடும் வரிமனை சிதைக்கும்"***

(அகநானூறு 90)

**(இன்னும் ஆடுவம்)**





வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

**மேஷ ராசி அன்பர்களே!**

பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். பெண்களுக்கு மனதில் சிறுசிறு சலனம் ஏற்படக்கூடும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சக பணியாளர்களால் சந்தோஷம் கிடைக்கும்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

பணவரவு ஓரளவுக்குத்தான் இருக்கும். செலவுகளில் திட்டமிடுதல் அவசியம். சகோதர வகையில் இருந்து வந்த கருத்துவேறுபாடுகளும் கசப்புணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் தகுந்த முன்னெச்சரிக்கை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வேலையில் இருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சிசெய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பங்குதாரர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு சற்று சிரமமான வாரம் என்றே சொல்லவேண்டும். வேலைக்குச் செல்லும் பெண்கள் வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும்.

**மிதுன ராசி அன்பர்களே!**

பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் தேவையறிந்து நண்பர்கள் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பயணத்தால் அனுகூலம் உண்டு. அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். பெண்களுக்கு திருப்திகரமான வாரம். வேலைக்குச் சென்று வரும் பெண்களுக்கு பணிச்சுமையின் காரணமாகச் சற்று சோர்வு ஏற்படக்கூடும்.

**கடக ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். சக ஊழியர்கள் தங்கள் பணிகள் தொடர்பாக உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிவு உண்டாகக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். விற்பனையும் சுமாராகத்தான் இருக்கும். பெண்கள் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். வேலைக்குச் சென்று வரும் பெண்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்ம ராசி அன்பர்களே!**

பொருளாதார வசதி நல்லபடியே காணப்படுகிறது. கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தீர்ந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் பிரசித்தி பெற்ற ஆலயங்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் எதிர்பாராத சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்னைகள் நீங்கி, குதூகலம் குடிகொள்ளும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். வாழ்க்கைத்துணையுடன் உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்து தருவார். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டாகும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவிஉயர்வு அல்லது ஊதியஉயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. இதுவரை கண்டிப்பாக இருந்த அதிகாரி கனிவுடன் நடந்துகொள்வார். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பார்கள். பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும்.

**துலா ராசி அன்பர்களே!**

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். நீண்டநாளாகச் செல்ல நினைத்த புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இடமாறுதல் கிடைக்கும். சலுகைகளும் கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காகப் பாடுபடுவீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகள் வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும். சிலருக்குச் சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதித்தாலும் உடனே சரியாகிவிடும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தந்தையின் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**தனுசு ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், போதுமான பணவரவு இருப்பதால் எளிதாகச் சமாளித்துவிடுவீர்கள். நீண்டநாளாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். நல்ல இடத்தில் வரன் அமைவதற்கு வாய்ப்புள்ளது. தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்படும். பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.சலுகைகள் கிடைக்கும்.

**மகர ராசி அன்பர்களே!**

வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து, உறவு சுமுகமாகும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் உங்களின் ஆலோசனைகள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். சக ஊழியர்களால் ஏற்பட்ட மறைமுகத் தொல்லைகள் நீங்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், சரக்குகளைக் கொள்முதல் செய்யவும் சிலருக்கு தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ளவேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

புதிய முயற்சிகள் இழுபறியாக இருந்தாலும் சாதகமாக முடிந்துவிடும். நீண்டநாளாக எதிர்பார்த்துக் காத்திருந்த சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு. திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வாரப் பிற்பகுதியில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. ஒரு சிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த சலுகையும் கிடைக்கும். புதிதாக வியாபாரம் தொடங்க விரும்புபவர்களும், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்களும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சாதகமாக முடியும். பெண்களுக்கு நிம்மதியான வாரம். வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் பணிகளைச் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

**மீன ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். பணியின் காரணமாகப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். பெண்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சில சலுகைகள் கிடைக்கும்.

## சொல்ல மறந்த கதை

### (1823-1910)

இப்படி தான்
ஒருநாளு
தும்பறை
தோட்டத்து
பங்களாவில்
வீரய்யா என்று
சொல்லி வீரமான
ஆளொருத்தன்...

பங்காளாவ சுத்தி
நல்லா கூட்டி
பெருக்கி
துப்பரவா வெச்சிகிற
வேளைதான்
அவே வேல...

ஒருநாள்
வேலைசெய்யும்
பொழுதிலதா அந்த
வெவகாரமான ஒரு
விபரீதம்
நடந்துச்சி...

ஒடம்பு முடியலன்னு
ஒருநாள்
விடுப்பெடுத்து
வீட்டுலேயே
தங்கிவிட்டா
அந்த பய வீரய்யா

பங்களாவில்
ஆங்காங்கே
சருகுகளும்
குப்பைகளும்
குவியலாக காட்சி
தர
கோபப்பட்ட
தொரக்காரே
வீரய்யா பேர
சொல்லி
காட்டுக்கத்து
கத்துநிக்க

கங்காணி ஓடி போயி
இழுத்து வந்து
தொர முன்னாடி
போட்டுவிட்டா
வீரய்யாவ...

குனிஞ்ச தல
நிமிராம
"ஒடம்புக்கு
முடியவில்ல"

என்று சொல்லி
சத்தமத்த
வார்த்தையில
பதில் சொல்ல...

ஏதேதோ
ஆங்கிலத்தில்
மொனகிவிட்ட
தொரக்காரே...
கழுத்த
பிடிச்சிழுத்து..

ஓதயா
ஓதவொதச்சி..
முதுகு தண்டு
உடையும்
உசுரும் போகும்
வர அடியா
அடிச்சானையா..
ஐயோ அவே
உசுரும்
போச்சுதையா...

இப்படி
கொடுமைகளும்
அநீதிகளும்..
கொண்டமண்ணு.
இந்த தும்பறை
என்ற மண்ணு...
புத்தி சுவாதினத்தில்
சுத்தி திரிஞ்சதால
முருகையா பூசாரிய
ஒரு பயலும்
கண்டுக்கல...

இந்த சத்திரம்தான்
அவர் குடிச...
அங்கிருக்கும்
ஆளுக பாத்து
தரும்
அரவவுத்து கஞ்சிம
குடிச்ச மாதிரி
அவர் காலம்
ஓடியது....

(சொல்ல மறந்த
கதை இன்னும்
சொல்லப்படும்)

தொடரும்
எம் ராமதாஸ்
இறம்பொடை

---

தமிழன் சிறுகதை

# முதல் புன்னகை



பசி அவளுக்கு வயிறைக் கிள்ளிக் கொண்டிருந்தது. அது அவளுக்குப் பழகிப்போன ஒன்றாக இருந்தாலும் நேற்று பகல் சாப்பிட்ட பாணுடன்தான் இன்று பகலும் வந்துசேர்ந்தது. இதற்கிடையில் ஒரு கோப்பை தேநீரைத் தவிர வேறு ஒன்றும் வயிற்றுக்குள் சென்றடையவில்லை.

கொஞ்சம் பொறுத்துக்கோ
புள்ள
அண்ணன் வேலைக்குதான்
போகுது வரும்போது ஏதாவது
சாப்பாடு வாங்கிக்கொண்டு
வரும் என்று கடைசி
தங்கைக்கு ஆறுதல் சொல்லி
சமாதானப்படுத்தினாலும்
அது அவளுக்கு புதிதல்ல,
வழமையில் நடக்கும் ஒரு நிகழ்வுதான்.

அந்தக் குடும்பத்தில் நான்கு பிள்ளைகள். அதில் மூன்று பெண்கள், ஒரு ஆண். தந்தையும் தாயும் ஒருவகையான நோயின் காரணமாக மூன்று மாத இடைவெளிக்குள்ளாகவே இறந்து போய்விட்டனர். அதற்குப் பிறகு அப்பிள்ளைகளை குடும்பங்களும் பாரம் எடுக்காததால் தனிமையில் வாழப் பழகிவிட்டார்கள்.

அந்த ஆண் பிள்ளைக்கு வயது பதினாறு இருக்கும். மற்றைய மூன்று பிள்ளைகளுக்கும் உடலில் ஒருவகையான கொப்புளங்கள் உருவாகி இடைக்கிடை அவை வெடித்து நீர் வடிய தொடங்கிவிட்டது. இதனால் அவ்வூர் மக்கள் அவர்களுடன் பழகினால் தமக்கும் அந்த நோய் தொற்றிவிடும் என்ற அச்சத்தில் அவர்களின் வீட்டுக்குப் போவதையே முற்றாக தவிர்த்து வந்தனர்.

பையனுக்கு மட்டும் அந்த நோய் வரவில்லை. ஆனாலும் உடல் உள அளவில் சற்று பலவீனமானவனாக இருந்தான். அதனால் அவன் கூலி வேலைக்குப் போனாலும் அவனின் அப்பாவி குணத்தைப் பயன்படுத்தி குறைந்த கூலியை கொடுத்து அதிக வேலையினை வாங்கிக்கொண்டனர். அதன்மூலம் கிடைக்கும் சில சில்லறைகளில்தான் அவர்களின் அன்றாட பொழுது கழியும். பக்கத்து வீட்டாரோ உறவினர்களோ அவர்களுக்கு உதவி செய்யவும் முன்வருவதில்லை. காரணம், அவர்களுடைய நோய் இவர்களுக்கும் பரவி விடும் என்ற அச்சம்தான்.

அந்தப் பையனும் உறவுகள், தெரிந்தவர்கள், பொது நிறுவனங்கள் என்று எல்லோரிடமும் கேட்டு கெஞ்சியும் பார்த்துவிட்டான். இருந்தாலும் அவர்கள் அவனுக்கு உதவ முன்வரவில்லை. அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். இதனால் உடலளவிலும் உளவியல் ரீதியிலும் அவர்கள் நிறையவே கஷ்டப்பட்டார்கள், கவலைப்பட்டார்கள்.

இவற்றுக்குக் காரணம் தமக்குரிய நோய்தான் என்பதை உணர்ந்தவர்கள் தம்மிடம் வசதியில்லாததால் அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று அதற்குரிய மருந்தினையும் இலவசமாக வாங்கி அதனைப் பாவித்து வந்தனர். இருந்தபோதும் அந்நோயின் வீரியம் கொஞ்சம் குறைந்ததே தவிர, அது முற்றாக மறைந்து போகவில்லை. இதனால் தனிமைப்பட்ட வாழ்க்கையையே அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

இவர்களின் நிலைமை இப்படியிருக்க, ஒருநாள் மூத்தவள் வாசலில் நின்றுகொண்டிருந்தபோது முன் வீட்டு மேல்மாடி கட்டடம் எதுவுமின்றி இருந்தது. அதில் அவ்வீட்டவரின் ஒன்றரை வயது மதிக்கத்தக்க ஒரு பிள்ளை தனிமையில் நின்றுகொண்டு நடந்து நடந்து முன்னுக்கு வந்துகொண்டிருந்தது. இன்னும் சில அடிகள் வைத்தால் அப்பிள்ளை மேலிருந்து விழுந்துவிடும் நிலையில்தான் இருந்தது. இது வாசலில்

**புத்தளம் ஸாலிஹ் அஸீம்**

நின்றுகொண்டிருந்தவளின் கண்ணில் பட்டு விட அவள் எதையுமே நினைத்துப் பார்க்கவில்லை. அந்தப் பிள்ளையை காப்பற்ற வேண்டும் என்ற என்ற எண்ணத்தில் அங்கிருந்து வேகமாக ஓடிச்சொன்று மாடிப்படியில் ஏறி அப்பிள்ளையை காப்பாற்றி தூக்கிக்கொண்டு கீழே வரவும் அப்பிள்ளையை தேடி காணாமல் அழுத்துபோய் அவ்விடத்திற்கு அப்பிள்ளையின் தாய் வரவும் நேரம் சரியாக இருந்தது.

அதனைக் கண்ட அத்தாய் பிள்ளையை பறித்துக்கொண்டு அவளை வெளியிறங்குமாறு ஏசிக்கொண்டிருந்தாள். இதனை அவ்விடத்திலிருந்து அவ்வழியால் சென்ற வேறு ஊரைச் சேர்ந்த ஒருவர் அவதானித்து, ''அவள் ஓடிப்போய் அப்பிள்ளையை தூக்காவிட்டால் அப்பிள்ளை கீழே விழுந்திருக்கும். நான் வரும்போது கவனித்துக்கொண்டுதான் வந்தேன்'' என்று அங்கு நடந்த சம்பவத்தை விளக்கினார். ஆனாலும் அதனை அத்தாய் கேட்கவில்லை. அவளை துரத்தியே விட்டாள்.

இதனை கண்டவர் அவளிடம் விசாரித்தபோது தனது நிலையை விவரித்தாள். அதனைக் கேட்டவர், சரி இந்த நோயை சரியாக சிகிச்சை எடுத்தால் குணமாக்கிவிடலாம். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். நீங்கள் விரும்பினால் என்னுடன் வாருங்கள். எனது தோட்டத்தில் வீட்டு வசதிகள் எல்லாம் இருக்கு. அங்கு தங்கிக்கலாம். அங்குள்ள வேலைகளையும் பார்த்துக்கலாம். அதற்குரிய கூலியை நான் தருகிறேன். பசியில்லாமல் சாப்பிடுவதற்கு உணவு ஏற்பாடும் செய்து தருகிறேன்'' என்றவர்,

''நானொரு தோல் நோய் சம்பந்தமான வைத்தியர். இந்த ஊரில் எனக்குத் தெரிந்த ஒருவரை சந்திக்க வந்தேன். நானே உங்களுக்கு வைத்தியம் பார்க்கிறேன். குணமாகியதும் விரும்பினால் இங்கு வாருங்கள் அல்லது அங்கேயே இருங்கள்'' என்றதும் அவளின் முகத்தில் முதல் முதலாக ஒரு புன்னகை தவழத் தொடங்கியது.

---

தமிழன் தொடர்கதை

# அசுரன்



**அத்தியாயம்**

மணிகண்டனின் மோட்டார்சைக்கிள் மறுபடியும் சீதையம்மன் கோயிலிலிருந்து திரும்பி நுவரெலியாவை நோக்கிப் பயணமானது. அவன் கோயில் அன்னதானத்தில் கலந்து உணவருந்தி முடியும் தறுவாயில் அவனுடைய கைபேசி சிணுங்கியது. அவன் கோயிலை விட்டு வெளியே வந்தான்.

"ஹலோ.. நான்தான் பார்த்திபன். இப்போது நாங்கள் வேறு இடத்துக்கு வந்துவிட்டோம். நீ அந்தப் பாதையில் வரத் தேவையில்லை. புதிய பாதைக்கான சமிக்ஞை வரும். அதனைப் பின்தொடர்ந்தால் போதும்."

மணிகண்டன் இதை எதிர்பார்த்தான். அவர்களுக்கு இன்னமும் மணிகண்டன் மேல் சந்தேகம் இருக்கிறது. அதனால்தான் இரு இடங்களைத் தெரிவுசெய்து அவனை அலைய வைக்கிறார்கள். மணிகண்டன் எதற்கும் தயாராகவே இருந்தான். அவன் சட்டென யாருக்கோ கைபேசியில் பேசிவிட்டு மறுபடியும் மோட்டார்சைக்கிளை செலுத்தினான். இப்போது நுவரெலியா நகரைத் தாண்டி மணிகண்டனின் மோட்டார்சைக்கிள் கண்டிக்கான பாதையில் பயணமானது. புஸ்ஸல்லாவை நகரை நெருங்கியதும் பின்னர் பாதையை விட்டு விலகி சீமெந்துப் பாதையில் ஓடியது. அப்போது மணி 9.45. அவன் மிகவும் களைப்படைந்திருந்தான். ஆனால், மனதில் உறுதி மட்டும் கூடியதே தவிர, குறையவில்லை. அந்த மோட்டார்சைக்கிள் இப்போது சற்று உயரமான அந்தப் பாதையில் ஏறியது. எங்கும் கும்மிருட்டு. எங்குமே ஆள் நடமாட்டம் இல்லை. பாதையின் இருபுறமும் அடர்த்தியான புற்செடிகளும் நீண்ட மரங்களும் அசையாமல் இருந்தது. சற்றுநேரம் சென்றதும் இப்போது வெளிச்சம் தோன்றியது. சற்று தூரத்தில் அந்த மாளிகை இருந்தது. சுற்றிலும் ஒளி வெள்ளமாகத் தெறித்தது. அவன் மோட்டார்சைக்கிளை மெதுவாக செலுத்தினான்.

அந்த மாளிகையின் முன்னால் பிரம்மாண்டமான அந்த இரும்பு வாயிற்கதவு இருந்தது. சுற்றிலும் சி.சி.ரி.வி. கெமரா பூட்டப்பட்டிருந்தது. அவன் கேட்டினருகே மோட்டார்சைக்கிளைக் கொண்டுசென்றபோது நேரம் சரியாக 10 மணி. அவன் மோட்டார்சைக்கிளை நிறுத்தியவுடனேயே இரண்டு, மூன்று தடியர்கள் வாயில் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார்கள். அவர்கள் அவனருகே வந்தார்கள்.

"பொருளைக் கொண்டு வந்திருக்கிறாயா?"

"பண்பரசியைப் பார்க்காமல் அதைக் காட்ட மாட்டேன் என்பதை ஏற்கனவே கூறியிருந்தேனே..!"

"நீ பொருளைக் காட்டாத வரையில் உன்னால் உள்ளே நுழையவும் முடியாது. பண்பரசியைப் பார்க்கவும் முடியாது. அது மட்டுமில்லை. இங்கே வந்தவர்கள் உயிருடன் போகவும் முடியாது."

அவன் கடகடவென சிரித்தான்.

"என்னை சித்திரவதை செய்வதாலோ இல்லை கொல்வதாலோ அந்தப் பொருள் உங்கள் கைகளில் கிடைக்கப்போவதில்லை. உங்களின் மிரட்டலுக்கெல்லாம் பயப்படப்போவதில்லை என்று அந்த முட்டாள்களுக்கு எடுத்துச்சொல்."

இப்போது அந்தத் தடியர்களில் ஒருவன் கைபேசியினால் யாருக்கோ பேசினான். பின்பு அவனை நோக்கினான்.

"உன்னை சம்பந்தப்பட்டவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள். நீ உள்ளே வரலாம். ஆனால், உன்னை முழுமையாக பரிசோதிக்க வேண்டும்."

**பாலா சங்குப்பிள்ளை**

5 நிமிடங்களின் பின் வாயிற்கதவு திறந்தது. அவன் மோட்டார்சைக்கிளை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு அவர்களைப் பின்தொடர்ந்தான். உண்மையிலேயே அந்த மாளிகை பிரம்மாண்டமானதாக இருந்தது. கிட்டத்தட்ட இரண்டு ஏக்கர் சுற்றுவட்டாரத்தைக்கொண்டிருந்த அந்த இடத்தில் மாளிகை மட்டுமே அரை ஏக்கரில் அமைந்திருந்தது. சுற்றுவட்டாரத்தில் வண்ணப்பூக்கள், புல்தரை என்று சொர்க்கபுரியாக அந்த இடம் அமைந்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தும் தொழிலாளர்கள் மழையிலும் பனியிலும் நோயில் பாயில் கிடக்க, இவர்கள் அவர்களின் உழைப்பைத் திருடி உல்லாசத்தில் வாழ்கிறார்கள்.

இப்போது அவர்கள் அவனை மாளிகையினுள்ளே அழைத்துச் சென்றனர். அதைப் பார்த்த அவன் அப்படியே மலைத்துப்போனான். அவனால் அதை வர்ணிக்க முடியவில்லை. மொத்தத்தில் சொர்க்கம்தான். அவர்கள் அவனை அந்த முன் மண்டபத்திலிருந்து அழைத்துச் சென்றவர்கள் இன்னொரு பிரம்மாண்டமான அறைக்குள் கூட்டிச்சென்றார்கள். அங்கே விலைமதிப்பில்லாத குஷன் நாற்காலிகள் நாற்புறமும் சூழ்ந்திருக்க, நடுவில் விதவிதமான வெளிநாட்டுக் குடிவகைகள் வைக்கப்பட்டிருந்தன. பொரித்த கோழிகள், மீன்கள் இன்னும் என்னவெல்லாமோ அழகாக வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையில் யாருமே இருக்கவில்லை. அவனை அவர்கள் ஒரு நாற்காலியில் இருக்கவைத்தார்கள். அவனின் கைகளை பின்னால் சேர்த்துவைத்துக் கட்டினார்கள். கண்களையும் கட்டினார்கள். வாய் மட்டும் திறந்திருந்தது.

"எஜமானர்கள் இன்னும் 10 நிமிடத்தில் இந்த அறைக்கு வருவார்கள். அவர்கள் உண்டுகொண்டும் குடித்துக்கொண்டும் உன்னிடம் பேசுவார்கள். அவர்களிடம் நீ நடந்துகொள்ளும் முறையை வைத்துத்தான் உன்னை என்ன செய்வார்களென்று சொல்ல முடியும்."

**(தொடரும்)**